# இந்துக்களின் சடங்குகள்



நாட்டுப்பற்றாளர்

அமரர் உயர்திரு. ஆறுமுகம் சிவசம்பு குணரெத்தினம்

நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham F
noolaham.org | aavanaha

உ
கணபதி துணை



திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேஸ்வரநாதர் திருக்கோயில் – திருகோணமலை



கேதீஸ்வரநாதர் திருக்கோயில் – மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்



பிறப்பில் இருந்து இறப்பு வரை வாழ்வில் ஒருவரிற்கு நடைபெறும் சடங்குகளின் தொகுப்பே "இந்துக்களின் சடங்குகள்" என்ற இந்நூலாகும். பழமைகள்; பாரம்பரிய முறைமைகள் அருகி வரும் இக்காலத்தில் சடங்குகளை செவ்வனே செய்ய இக்கைநூல் பெரும் உதவியாக இருக்கும் என திடமாக நம்புகின்றோம்.

இக்கை நூலை எமது குடும்பக் குலவிளக்காகிய

நாட்டுப்பற்றாளர் **அமரர் ஆ. சி. குணரெத்தினம்** நினைவாக

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின்

பாதார விந்தங்களுக்கு காணிக்கை ஆக்குகின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயில்



கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் – கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில் விளையாட 01.11.1938

விண்ணில் விளையாட 16.12.2005


நாட்டுப்பற்றாளர்

## அமரர் உயர்திரு. ஆறுமுகம் சிவசம்பு குணரெத்தினம்


### திதி நிருணயம்

ஆண்டு பார்த்திப, திங்கள் சேர் மார்கழி ஒன்றில்
தூண்டு அபரபக்க திருவாதிரை நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய
நன்னாளில் கீர்த்தியுடன் சிவசம்பு குணரெத்தினம்
அடைந்தாரே தப்பாமல் முருகன் கழல் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளையோர் காற்பந்தாட்ட போட்டி – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANAGER - SRI LANKAN NATIONAL TEAM
IAAF WORLD CHAMPIONSHIPS
IN ATHLETICS



HELSINKI 2005 - FINLAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SAF Games
## Colombo 2002



காற்பந்தாட்டத்துறைக்கு ஆற்றிய அரும்பணியை மெச்சி
விருது வழங்குதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்றன்நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறு அணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே.

# திருவாசகம்

புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன் னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக் கெலாம் அறுத்த நற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவ தினியே.

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர என் கண்குளிர்ந் தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக குணமொரு மூன்றும்
திருந்துசாத் வீகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கை கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
උතුරු - නැගෙනහිර පළාත් අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය
MINISTRY OF EDUCATION, CULTURAL AFFAIRS & SPORTS, NORTH - EAST PROVINCE
திருகோணமலை ත්‍රිකුණාමලය Trincomalee

026 - 2220035 *(Secretary)* 026 - 2222176 *(General)* 026 - 2222730 *(Fax)* *E-mail : edunep@sltnet.lk*

Mr. A. S. Gunaratnam Functioned as an Asst. Director of Sports and Asst. Director of Youth Affairs in the North East Provincial Council for a considerably long period.

He started his career as a Sports Officer Serving in the remote areas of Anurathapura, Vavuniya and Mullaithivu. His contribution to the development of sports in these areas is still remembered by the lovers of sports.

He was a colorful personality in sports who was ever willing to help a sportsman to achieve his best. His talents were recognized at the National level and he accompanied the Sri Lankan Athletic teams as the Manager of the 10th World Athletic Meet 2005 held in Finland early this year. He was also Manager of the Sri Lankan team that participated in the 10th Asian athletic meet held in Bangkok in 2002.

At the time of his death, he was holding the positions of the Asst. Secretary of the Sri Lanka Athletic Association and committee member of the National Football Referee Association.

Mr. A. S. Gunaratnam was highly respected by the officers of the North East Provincial Council. Apart from being a talented sportsman, he was very talented in organizing activities and ceremonies and making the best out of challenging situations. He has been a Tower of strength to the administration of the Provincial Ministry of Education, North East Province and his absence will be felt for many more years to dawn in future.

May his soul attain Moksha!

**R. Thiagalinkam**
*Secretary*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A. S. Gunaratnam the Gentlemanly Sports Leader

Even though I was away in Malaysia when our dear friend and colleague in Football federation Mr.A.S.Gunaratnam passed away quite unexpectedly. I was in constant communication with Federation officials to provide all facilities for this recovery as I was first informed he was hospitalized. The news about his death did make me very sad as I miss Guna as we call him. I was quick to communicate with Football Federation Staff to do all we could do to assist in funeral arrangements which was done quite satisfactorily. The death just two days later did strike me as being like a loss of a family member in this instance in the sports Family, in our case the soccer family. In this hour of grief yet as a responsibility to a good friend and associate in sports administration. I convey to his family that we are partners with them in their sorrow and will be with them to honour a sports official who was very committed.

Soccer players, administrators will miss our dear friend Guna. During nearly 30 years of association with Guna I came to know him quite intimately. It is his positive role as a link with the deserving soccer players and sports circles that Guna played a very decisive role . As many of us know for a long period due to unfortunate circumstances soccer development could not be forged as desired in North and East. Both the Football Federation and I needed some dedicated representatives to take the message of our programs and our development activities to North and East. The void needed to be filled and I was fortunate to have the services of Guna who filled this role very productively and made soccer development and its message and programs more realistic in this part of Sri Lanka. This is the link that we now miss with his untimely death. He added more flavor as a message of peace and unity between the southern and northern environments usually making his point very clearly and boldly to bring us closer to realities of what sports does as a leveler of many things,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in this instance bridging any gaps that war there in sports circles between the southern part and North and East. I was also fortunate to have Guna playing a major role in discussion and at meetings making very positive contributions. He was articulate and precise in making his points of views known to others, always ensuring that there were no divisions. He had in his heart the love for sports and would sometimes make his views known if there was any thing that needed as advise.

We in the soccer administration and soccer players miss a true sporting Gentlemen who played his part well. We will remember Guna for a long time for his friendly ways and disposition and for his services I am sure most of us will not hesitate to be of sacrifice if there are needs that have to be met for his loved ones he left behind.

We hope we will have more people like Guna in sports!

**Manilal Fernando**
Vice President Asian Football federation
Vice President National Olympic Committer Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to Late A. S. Gunaratnam

Most sports enthusiasts in sports like athletics, Soccer miss this very genial Sports administrator and sports promoter who. It is big loss to sports at time when his services were mostly needed he left us.

As assistant secretary of the Athletics association of Sri Lanka the last post he held until his untimely death "Gunam" as he was mostly called by all of us, made a sizable contribution to work of AA. At every meeting of the Members or any other meeting or function Gunam stood out as one who would touch upon any subject and bring his point out loud and clear.

He had little or no enemies if one were to state about his position as an Administrator as we normally find in present sports circles, sometimes divisions, and we face situations when two sides do hammer out at each other most of time bringing into focus very disappointingly personal life and criticism out of proportion. We did not find such situations when we talk about our Dear Gunam.

Gunam had a very close relationship with Dr. N. Ethiriveerasingham now domiciled in States and was always motivating Etheri to assist athletes in Sri Lanka and this was not confined only to those in North and East but other parts of Sri Lanka

He was not only a great contributor to discussions but also Gunam an administrator who added his value as a manager He was called upon to manage teams the last being the posting as manager of the Sri Lanka athletics team to Helsinki with the top athletes. Wherever he went he made his mark mixing freely with people always with a friendly smile that made Gunam a person one rarely would forget.

We miss Gunam as he was a very friendly person who mixed with all communities sometimes though being a Tamil. We felt he was more Singhalese as he was very friendly with his associates calling each person by his her name in sinhala and making them feel as close as each other.

As a very dutiful family man a good devoted father he was always concerned about the welfare particularly of his sons and treated them like friends Many times we had to listen sometimes repeatedly Gunam boasting about his sons and their achievements, that he was proud of them.

May his soul rest in peace. We will really miss him for a long time

**P. D. Pinnewale**
Secretary General AA Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## போய்வா உனக்கெங்கள் கையசைப்பும், காலை வணக்கமும்

அன்று கார்த்திகைத் திருநாள் ; கடவுட் திங்கள்மேலே
கைவிளக்கேற்றி நிற்கிறது
சிட்டி விளக்குகளின் தீப வரிசைகள்
தெருவெல்லாம் சோதி மயம்
வாசலெல்லாம் வாழைத்தண்டுப் பதியன்களில்
பாதித்தேங்காய் உருகித் தீப்பந்தாய் எரிகிறது.
அடுத்த நாள் எல்லாம் கருகிக் கிடக்கின்றன.
ஆனாலும் கண்ணிறைந்த இரவுக் காட்சிகளின்
ஒளிர்வு இன்னும் நினைவில் நட்சத்திரச் சிமிட்டல்களாய்
இரவு காலித்த முழுநிலவும் இன்னும் நரை பூத்தபடி
முழுதாய் மறையவில்லை

வெள்ளிக்கிழமை காலை அலுவலகம் வந்தால்
ஓர் அன்பனின் உயிர்த்தீபம் தூரத்தே கொழும்பில்
ஊடுபத்திப் போகிறதாம் எனச் சேதி வந்தால் எப்படியிருக்கும்?
என்னவாம்? இருக்கின்றாரா? இல்லையா? உயிர்த்
துடிப்படங்கிப் போகிறதா? சுச்சு...... எல்லோர்
மனங்களும் அங்கலாய்க்கின்றன.

இறுதியிலே சேதி வருகிறது.
ஊடுபத்திக் கிடந்த உயிர்த்தீபம் முற்றாய் அணைந்ததுவாம்.
நம்ப முடியவில்லை.
குத்துவிளக்குச் சுடர்கள்போல் இதழ் விரியச் சிரித்த
ஒரு மனிதம் உயிரின் இதழ் மூடிற்றா?
நம்ப முடியவிவ்லை. மனங்கள் அங்கலாய்க்கின்றன.
இருக்கின்றாரா ? இல்லைத்தானா?

தேடிவருவார் ஒரு மனிதர் தினந்தோறும்
காலை வணக்கம் என்பார்
பூக்குடலை குலுங்கி நகைப்பது போலிருக்கும்
ஒளிபூத்த நகையாடலும், கலகலப்பும்
வாய்க்குமா எல்லோர்க்கும் வாய்நிறையச் சிரிப்பும்
வகைவகையான நகைச்சுவையோடு உரையாடுதலும்
கதைப்பார்; சிரிப்பார்; கலகலப்பார்;
பிறகு போய்விடுவார்; இன்னுமோர் திணைக்களத்தில்
அதே இனிய இளநகையாடுதல் கேட்கும்
பிறகு போய்விடும்.
இன்றோ போயே விட்டார் என்றால் நம்ப முடிகிறதா?
இருக்கின்றாரா? இல்லையா? இன்னும் மனம் அங்கலாய்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடித்திரிவார் மனிதர் ஓய்ந்திருக்கலாகாது என்று
பாரதி சொன்னது எனக்குள் குடிகொண்டிருக்கும்.
இளம் பாலகனுக்கும் தான் எனுமாப்போல் காலில்
சக்கரங்கள் பூட்டிப்பறப்பார் சகல பணிகளுக்கும்.
முக்கி இழுத்துப் பறிப்பது என்பதில்லை; எல்லாவற்றிலும்
ஓர் இயல் வேகம்; இலாவகமாய்ச் செய்து முடித்து கோல் போடும்
உதை பந்தாட்டக் கால்கள் இன்று ஓய்ந்து கிடக்கின்றனவா?
உற்சாகமாய் இயங்கிய உயிர் நூர்ந்தா போயிற்று?
நம்ப முடியவில்லை !

ஓர் உதை பந்தை அந்தக் காலடியில் போடுங்கள்
உற்சாகமாய் துடிப்போடெழுந்து பந்தை உதைக்கின்றனவா?
இல்லையா பார்ப்போம்; என்ன பந்து காற்றுப் போய்க் கிடக்கிறதா?
துள்ளித் துடிக்காதா? துரித இயக்கம் வற்றித்தான் போயிற்றா?
நம்ப முடியவில்லை நண்பா! நீ இருக்கின்றாயா இல்லையா?
துயர் பட்டார் தோள்தட்டி மற்றவர்க்குத் துணைநிற்கும்
உன் கைகள் சோர்ந்தா கிடக்கின்றன?

அதோ! அந்த விளையாட்டு அரங்கு! கைகொட்டி ஆர்ப்பரிக்கின்ற
ஆரவாரம்; அங்கே நடுவராய் நின்று விசில் ஊதும்
தீர்ப்பளிக்கும் அரங்கின்று வெறிச்சோடிக் கிடப்பதுபோல்
சோர்ந்து வழிகிறதே! உன் சுறுசுறுப்பை இழந்ததுவா?
முல்லைத்தீவா? கிளிநொச்சியா? மட்டக்களப்பா? யாழ்ப்பாணமா?
கொழும்பா? குருநாகலா? எட்டாத் தொலைவில் இருக்கும்
தாய்லாந்தா? பின்லாந்தா? எங்கெங்கும் ஓடித்திரிந்து
மத்தியத்தம் செய்தும், முகாமைத்துவம் செய்தும் தமிழ் மண்ணவர்க்கு
பெருமை தேடித் தந்த உன்னைப் பெற்றெடுத்து உற்சாகம் கரைபுரள
ஓடவிட்டவள் யார்? உன்னை உச்சி மோந்து வழியனுப்பி வைத்த
நயினையம்பதி நாக பூசணித்தாயின் மணிவயிற்றின் மடியில்
புரண்டெழுந்த மகிமையிலிருந்தா ஊற்றெடுத்தது உனது உற்சாகம்?
திருமலையின் குன்றில் குடியிருக்கும் கோணேசர் திரிசடைக்
கங்கையிலிருந்து வழியும் கருணையிலிருந்தா கொப்பளித்தது?
உனது ஓயாத உழைப்பின் உயிர்க் கொள்கலம் எங்குளது?

கலைமகள் விழாவா? இதோ நானும் என்பாய்
தமிழ் இலக்கிய விழாவா இதோ எனது பங்கென்பாய்
ஒளிவிழாவா? மீலாத் விழாவா? உனது
உற்சாகப் பங்களிப்பு இல்லாத விழாவில்லை
நலன் புரிச்சங்கமா? அங்கும் நிற்பாய்;
வலம்புரிச் சங்கெடுத்து பொங்கு தமிழ் என்று முழங்கினாய்
அங்கும் புயல் வேகனாய் நிற்பாய் ! நிற்பாய் என்பதும் தவறு
நில்லாது இயங்கு வேகம் எடுத்தோடித் திரிவாய்! இன்று
எங்குற்றாய்? எவர் அழைத்தார் உன்னை? அங்கும் ஏதும்
ஆர்ப்பரிக்கும் விழாவில் உனதும் பங்கேற்புண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரத் தமிழ் பாடுவாய்; தெவிட்டாது
சிங்களத்தில் சிதறு வெடிகள் பறக்கப் பேசுவாய்
ஆங்கிலமா? அழகிய சிற்றோடை சிலிர்த்து வரும்
தீப்போல் பொறிகள் பறக்கும் உனைச் சீண்டினால்
பிறகு சீற்றம் தணிவாய்; சிகரட் சாம்பல்போல் சுண்ட விழும்
இன்று நீ சென்ற இடம் எங்கே? சிரிப்பெங்கே?
நகையாடும் கலகலப்பொல்லாம் உதிர்ந்து
வாடிய மலர் போல் மாலையினின்றும் இற்று விழுந்ததுவா?
கலகல என்றே ஒலியெழுப்பிய சலங்கைகள் உனதாட்ட
வேகத்தில் மணிகள் சிதற ஓசையடங்கி உறைந்தாற் போல்
ஓசையற்றுப் போயிற்றே! உயிரிழந்தா கிடக்கின்றாய்?
நம்ப முடியவில்லை நண்பா! உனது உயிரோசையும், கலகலப்பும்
ஒளிரும் நகையாடலும் நீ இருக்கின்றாய் இருக்கின்றாய்
என்றே எம் செவிகளில் வந்து உரைசலிடுகின்றன.
நீ இருக்கின்றாயா? இல்லையா?
ஒருசொல் ஒரே ஒருசொல் உரையாயா?

கார்த்திகைத் திருநாள் ஏற்றிவைத்த தீபங்கள்
கண்மூடித் துயில்கின்றது போல் உனதும்
உயிர்த்தீபம் விழி உறங்கித்தான் போயிற்றா?
ஊனுருகிப் பெருநெருப்பில் ஒ! ஒன்றாய்க் கலந்து
போகத்தான் போகிறதா? இல்லை நம்ப மறுக்கிறது
இன்னும் கிடந்து அங்கலாய்க்கும் மனம்!
ஆனாலும் எங்கள் கண்முன்னே இவையெல்லாம் நிகழாமல்
போகின்றாய் உனது பிறந்தகம் என்னும் பொற்பதி நோக்கி
போய்வா! பொன் புடமிட்ட பின்னர் புதுநகையாய்ப்
பொலிவதுபோல் நீ மீண்டும் புதுவாழ்வு தரித்தால்
உனது வழியெல்லாம் பணியிருக்கும். அதுவரையில்
ஓய்வுகொள் நண்பா அதை உனது இடை உறக்கம் எனக் கொள்வோம்.
நம்பிக்கை விழுதுகள் உனது குலவிருட்சத்தைத் தாங்கி நிற்கும்.
போய்வா அம்மன் பொற்பதிக்கே! குணரத்தினமே
உனக்கெங்கள் கையசைப்பும், கண்ணீர் கலங்கி மயங்கும்
காலை வணக்கமும்;
போய்வா புண்ணியனே! உனக்கெம் அஞ்சலிகள்.

**கவிதை ஆக்கம் :** சு. வில்வரெத்தினம்

*கல்வி, பண்பாட்டலுவல்கள், இளைஞர்,*
*விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு.*
*வடக்கு கிழக்கு மாகாணம் சார்பாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
01.11.1938

உதிர்வு
16.12.2005

**யாழ் நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலையும், திருகோண மலையையும் வாழ்விடமாகவும் கொண்ட அமரர் சிவசம்பு குணரட்ணம் பணிப்பாளர் விளையாட்டுத்துறை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, ஆலோசகர் தமிழ் மக்கள் பேரவை திருகோணமலை மாவட்டம்**

தமிழீழ தலைநகரில்
தமிழ் மக்கள் தலைநிமிர
தன்னையே அர்ப்பணித்து
தமிழ் வாழ தான் பிறந்த இனம் வாழ
தளராது பணி செய்து
தலைமைகள் பல ஏற்று
தமிழீழ விளையாட்டுக் குழுவிற்கு
தலைமகனாய் வெளிநாடு பல சென்று
தமிழ் மக்கள் வீரத்தை விளையாட்டின் சாதனையை
தமிழினம் சார்பில் சரித்திரத்தில் பொறிப்பதற்கு
ஓடி உழைத்த குணக்குன்றே குணம் ஐயா
தேடியும் இனிக் கிடையார் உனைப்போல ஒரு வீரன்
ஆடிப்போய் விட்டோம் ஆழிப்பேரலைத் துயர் போல
வாடித்துடிக்கின்றோம் வாய் திறந்து பேசாயோ?

தமிழ் மக்கள் பேரவையின்
தகைசான்ற பெரியோனாய்
பக்கத்துணை நின்று – பகைவர்க்கு வேங்கையென
ஓங்கி ஒலித்து – ஒளிர்விடும் சோதியென
எமக்குத் துணை நின்ற இனியவனே குணமையா!

ஏங்கித் தவிக்கின்றோம்
இருவிழியைத் திறவாயோ?
மலரும் தமிழீழம்
மண்ணுக்கு விடிவு வரும் – எம் தலைவன்
வழியினிலே தமிழ் மக்கள் தலைநிமிர்வர்
என்றெல்லாம் சொன்னாய்
எதிரிக்குச் சவால் விட்டாய்
உன் கனவு பலிக்கும் நாள்
எமை நோக்கி வருகையிலே
ஏன் ஐயா நீ மறைந்தாய்?
தமிழீழப் புல்லும் தமிழுயிர்கள் அத்தனையும்
உனக்காக அழுவதனை ஒருதரங் கேட்பதற்கு
காதைத் திற ஐயா காவிய நாயகனே !

நின் பிரிவால் துயருறும்
*திருமலைத் தமிழ் மக்கள் சார்பில்*
*தமிழ் மக்கள் பேரவை*
*திருகோணமலை மாவட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்தாயக விளையாட்டு மேலாண்மையை சர்வதேசதரத்துக்கு உயர்த்துவதற்காக உழைத்தவர் நாட்டுப்பற்றாளர் குணரட்ணம்



தமிழர்தாயகத்தின் விளையாட்டு மேலாண்மையைச் சர்வதேச தரத்திற்குக் கொண்டுசெல்லல் வேண்டும் என்ற அசையாத நம்பிக்கையுடன் வாழ்ந்து அதற்காகவே உழைத்து வந்த பிரபல விளையாட்டு வீரரும் நிர்வாகியுமான நாட்டுப் பற்றாளர் ஏ. எஸ். குணரட்ணம் அவர்களைத் தமிழர் தேசம் இழந்துவிட்டது.

இவரின் ஆரம்பகாலம் அவர் கடந்து வந்தபாதைகள் கடினமானவை. சுவாரஸ்யமானவை. வரலாற்றில் என்றுமே மறக்கப்பட முடியாததுமாகும்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்வியுடன் விளையாட்டை நேசித்து வந்ததுடன் நீண்டதூர போட்டியில் (மரதன்) தன்னை பிரபலப்படுத்திக்கொண்டார்.

இந்தநிலையில் கால்பந்து, கரப்பந்து மற்றும் பல விளையாட்டுக்களிலும் இவர் அதீத ஆர்வம் கொண்டிருந்ததுடன் அதன்பால் இளைஞர்களையும் கவரச்செய்தார். இறக்கும் வரை வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையுடன் முழுமையாகத் தன்னை இணைத்துக்கொண்ட குணரட்ணம் இலங்கை தேசிய மட்டத்தில் பெரிதும் மதித்து பேசப்படும் ஒருவராக இருந்தார். விளையாட்டுத்துறை தொடர்பான விதிகளை நிலைநிறுத்துவதில் உறுதியும் கடுமையும் காட்டும் அவர் விளையாட்டு வீரர்களுடனும் நிர்வாகிகளுடனும் பழகுவதில் எப்பொழுதும் எளிமையானவராகவே காணப்படுவார்.

சாதாரண விளையாட்டு உத்தியோகத்தராக தனது விளையாட்டுச் சேவையை ஆரம்பித்த நாட்டுப்பற்றாளர் குணரட்ணம் தனது அதீத திறமை மற்றும் மொழித் திறமை ஆகியவற்றால் மாகாண விளையாட்டுத்துறைக்கான உதவிப்பணிப்பாளர் பதவிவரை உயர்ந்தார். யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் தனது பாடசாலை வாழ்க்கையை ஆரம்பித்த குணரட்ணம் கல்வியுடன் தனது விளையாட்டையும் அங்கமாகக் கொண்டிருந்தார்.

இதனால் யாழ். குடாநாட்டில் இருந்து முழுமையான விளையாட்டு வீரராக அகில இலங்கை ரீதிவரை சென்றவர்களில் இவர் முக்கியமானவர்.

அனைத்து விளையாட்டுக்களிலும் ஈடுபாடு கொண்ட இவர் தனது பிரதான விளையாட்டாக நீண்ட தூர ஓட்டங்களை தன்னகத்தே கொண்டிருந்தார். குறிப்பாக மரதன் போட்டியில் யாழ். மாவட்டத்திலேயே வெல்ல முடியாத வீரராக திகழ்ந்தார்.

களைப்பின்றி நீண்ட தூரம் ஓடும் இவரின் அழகு ஒரு வித்தியாசமான அனுபவம். வெற்றி தோல்விகளை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் மனப் பான்மையை பிரதான மாகக் கொண்டிருந்த அவர் முழுக்க முழுக்க ஒரு விளையாட்டு வீரனுக்குரிய அனைத்து பண்புகளையும் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் பொறுத்து தான் தோல்வி அடையும் பட்சத்தில் வெற்றி பெற்றவரை தட்டிக்கொடுப்பது, தான் வெற்றி பெறும்போது அதனை பெரிதாக எடுக்காத பண்பும் அவரை விளையாட்டு வீரராக கடைசிவரை தொடர பிரதானமான ஒன்றாக பின்பற்ற உதவியது.

இவரது குருநாதரான சிவப்பிரகாசபிள்ளை விளையாட்டில் குணரட்ணம் அவர்களை வளர்ப்பதற்கு ஆழமான உறுதி கொண்டிருந்தார்.

வைத்தீஸ்வரா வித்தியாலயம் கல்வியில் தரமான பாடசாலையாக இருந்தாலும் விளையாட்டு தரத்தில் மூன்றாம் நான்காம் தரத்தைக் கொண்ட பாடசாலையாகத்தான் இருந்தது. ஆனால் அதே பாடசாலையில் இருந்து ஒரு முதல்தர விளையாட்டு வீரராக வெளியில் வந்து யாழ். மாவட்டத்தில் பேரும் புகழும் பெற்றவராக குணரட்ணம் இருந்ததுடன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு புகழ்ஈட்டிக் கொடுத்தார்.

விளையாட்டுத் துறையில் நன்கு அறிந்திராத சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் விளையாட்டுத் துறையில் ஒரு தனித்துவத்தையே கொண்டிருந்தார் என்பது வியப்பான ஒரு விடயமே.

பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டியில் விவேகானந்தா இல்லத்தில் இடம்பெறும் அவர் தனது இல்லத்திற்கான முதலாவது புள்ளியை பெற்றுக்கொடுப்பதுடன் தனது இல்லத்தை ஆரம்பத்தில் முன்னிலை பெறச்செய்தவர். இறுதியில் அந்த இல்லம் கடைசியான இடத்தையே பெரும்பாலும் பெறும் அதனை நகைச்சுவையாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்.

ஆரம்பத்தில் இவர் மரதன் மற்றும் நீண்டதூர போட்டிகளில் பெற்றுக்கொடுக்கும் புள்ளி தான் அந்த இல்லத்தை முதலில் முதன்மை பெறச் செய்யும்.



இவருக்கு குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியாக அமைந்தது யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டு போட்டிகளில் நீண்ட தூர ஓட்டங்களில் வெல்ல முடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராக இவர் இருந்ததுதான். இவரது இன்னுமொரு அறிமுகமாக 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் வருடாவருடம் நடைபெறும் தினகரன் விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது பல்வேறு விளையாட்டுகளும் நடைபெற்றதுடன் முழுமையான மரதன் போட்டியும் நடைபெற்றது. அதில் இலங்கையின் மிகச்சிறந்த ஓட்ட வீரர்களுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இதில் அவர் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

முதலாவது இடத்தைப் பெற்றவர் அகில இலங்கையில் முதன்மையானவர் என்று கருதப்பட்ட கீன்பண்டா (இராணுவத்தைச் சேர்ந்தவர்)

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கீண்பண்டாவுக்கும் குணரட்ணத்துக்கும் இடையிலான இடைவெளி 15 யார் தூரமாக அமைந்தமைதான்.

இதுவரை அவரை இலங்கை ரீதியான போட்டியில் கலந்துகொள்ளும் தரத்தை அடையாளப்படுத்திக் கொடுத்தது. அதன் பின்னர் அவர் இலங்கை ரீதியாக அறியப்பட்ட ஒருவராக வெளிக்கொணரப்பட்டதுடன் விளையாட்டுத்துறையில் முழுமையான ஈடுபாட்டைக் கொடுத்ததுடன் பெரும் சாதனைகளை ஈட்ட வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது.

யாழ். குடாநாட்டில் பாடசாலைகளுக்கிடையிலான மரதன் போட்டியில் ரசிகர்கள் மத்தியில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார் என்றால் மிகையில்லை.

விளையாட்டுத்துறை ஆற்றலில் சந்தேகத்துக்கு இடமின்றி இருந்த அந்த காலத்தில் அவரை சிறிலங்கா அரசோ அல்லது அந்த நேரத்தில் யாழ். குடாநாட்டில் ஏதும் கழகங்களோ அமைப்புக்களோ இருந்து உற்சாகப்படுத்தியிருந்தால் அவர் நிச்சயமாக சர்வதேச ரீதியில் சாதனை புரிந்தவராக வாழ்ந்திருப்பார்.

ஏனெனில் அவரிடம் அந்தளவுக்கு தேடலும் ஊக்கமும் இருந்தது என்கிறார் அந்த நண்பர். இவரது காலத்தில் யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு தட்டிக் கொடுக்கக் கூடிய நிலை இருக்கவில்லை. சாதாரணமாக உதைபந்து, கரப்பந்து, கிரிக்கெட் போன்றவற்றிலேயே நாட்டம் செலுத்தினார்.

இந்த நிலையில் Track and field இல் (சுவட்டு நிகழ்வு) தன்னை அடையாளப் படுத்தினார்.

நீண்ட தூர ஓட்டம் என்று எடுத்துக்கொள்ளும்போது யாழ். மாவட்டத்தில் ஜெரி என்று அழைக்கப்படுகின்ற அல்லது 'கொட்டப்பாக்கு' என செல்லமாக அழைக்கப்படும் குணரட்ணத்தின் பெயர்மறக்க முடியாதது.

*-சியான்*

(வெள்ளிநாதம் 2005 டிசம்பர் 23-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட
வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப்
பணிப்பாளரும், நாட்டுப் பற்றாளரும்
நயினை ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயப் பரிபாலனரும்
எமது நிலையப் போஷகருமான,
*அமரர் சிவசம்பு குணரெத்தினம்* அவர்களின்
திடீர் மறைவையொட்டி எமது நிலையம் சாற்றும்.

# கண்ணீர் அஞ்சலி !

சங்கரனார் உவந்தளித்த இரத்தினமே!
சடுதியிலே எமைப் பிரிந்தீர் எங்ஙனமே!
பாதி உயிர் உமைப் பிரியும் வேளையிலே!
பதைத்து நின்ற உறவுகள் தான் எத்தனையோ!

பூ முகத்துப் புன்னகையை யார் முகத்தில் பார்த்து நிற்போம்
புது நடையில் நகைச் சுவையை யாரிடத்தில் கேட்டு நிற்போம்
நேர் வழியைக் காண்பதற்கு யார் வழியில் சென்றிடுவோம்
நேர்ந்து விட்டால் பெருந்துயரம் யாரிடத்தில் எடுத்துரைப்போம்

எம் நிலையம் வளர்வதற்கு ஏற்ற வழிகாட்டி நின்றீர்
எம் இனத்தின் இன்னல் கண்டு எரிமலையாய் வெடித்து நின்றீர்
தம் உயிரைத் தமிழுக்காய் கொடுத்து நின்ற வேங்கைகளை
தார் மீது தமிழ் மணக்கத் தமிழ் மானம் உரைத்து நின்றீர்

எத்தனை எத்தனை கனவுகள் கண்டு மகிழ்ச்சியில் திளைத்திருப்பீர்
அத்தனையும் ஒரு நொடிப் பொழுதில் அழிந்துவிட்டதையா!
நீர் செத்திடும் வேளையில் எத்தனை நினைவுகள் நிழலாய்த் தொடர்ந்திருக்கு
அத்தனையும் எம் அடி வயிற்றில் அனலாய்க் கொதிக்குதையா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இங்ஙனம்*
*பிரிவுத் துயரில் தவிக்கும்*
நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள்
சன சமூக நிலையத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்றாளர் குணரட்ணத்தின் பூதவுடலுக்கு கிளிநொச்சியில் நேற்று உணர்வு பூர்வஅஞ்சலி

(கிளிநொச்சி)

பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியும் தமிழீழ விளையாட்டு துறைக்கு அரும் பணி ஆற்றி வந்தவருமான நாட்டுப்பற்றாளர் ஏ. எஸ் குணரட்ணம் அவர்களின் பூதவுடலுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஈகச்சுடரினை அமரர் ஏ. எஸ் குணரட்ணம் அவர்களின் துணைவியாரும் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து அஞ்சலி உரைகளை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பூதவுடலுக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழீழ தேசியக் கொடி போர்த்திக் கௌரவித்ததுடன் மலர் மாலையும் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே பாலகுமாரன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

ஏ. எஸ் குணரட்ணம் அவர்களின் பூதவுடல் இன்று யாழ். மாவட்டத்தில் அவரது பாடசாலை உட்பட பல்வேறு இடங்களிலும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளது.

(ஈழநாதம் 20 டிசம்பர் 2005 - பக் 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெலிந்த தோற்றம்
# முதுமையில் ஓர் அற்புத இளமை
# தேசியத்தின் ஒரு சொத்து

## அதுவே எம் குணமய்யா!

ஓடி ஆடி துடிப்புடன் இறுதிவரை எம் கண்முண் அலைமோதிய எம் அன்பு குணமய்யா – தமிழ்த் தேசியம் வளர்வதற்கு எம் இனம் புரிந்த தியாகம் எண்ணற்றது. எம் தேசிய விடுதலைக்கு உரமான வீரர்கள் ஒருபுறம், அவ்வீரத்தின் வித்துக்களாக எம் இனத்தை நேசித்த நாட்டுப்பற்றாளர்கள் இன்னும் ஒருபுறம். மொத்தத்தில் தமிழீழ தேசம் உருவாக உழைக்கும் எம் உயர் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த அன்பு மறவா உள்ளங்களில் எம் குணம் ஐயாவும் இடம்பிடித்துவிட்டார்.

ஒரு தேசிய இனம் ஒடுக்கமுறைகளை உடைத்தெறிந்து தனிநாடாக இவ் உலகில் உருவெடுக்க வேண்டும் என்று நினைப்பதில் தப்பில்லை என்ற உண்மையைப் புரிந்துகொள்ள தமிழர்கள் மத்தியிலேயே மாற்றுக்கருத்துள்ள புல்லுருவிகள் வாழும் காலம் இது. "குணம்" என்ற இந்த மனிதன் தான் செல்லும் இடமெல்லாம் தன்னை ஒரு புலி என்று காட்டிக்கொள்வதில் பெருமைகொள்பவர். இந்த அற்புதம் இவர் எப்படி என நாம் பலமுறை எண்ணியதுண்டு – விடை தெரியாத இவ் வினாவுக்கு கிடைத்த ஆதாரங்கள் இவரது வறுமையான வாழ்வு தடைகளை உடைத்தெறிந்து கல்வியில் இவர் அடைந்த உயர்வு இவருடன் நாம் உரையாடும் போது கடந்த கால இவர் வாழ்க்கை ஒரு பொய்மையாக இருக்குமோ என எண்ணத்தோன்றும். அந்தளவு மிகச்சாதாரண கூலியாக வாழ்ந்த இவரது உயர்வுக்கான படிக்கற்கள் என்றும் இவரது இறுதி நிலைக்கு வழிசமைத்திருக்கலாம். அரசதுறையில் பல உயர் பதவிகளை வகித்த இவர் விளையாட்டுத்துறையை தனது உறுதியானதும் இறுதியானதுமான பணியாக ஏற்றிருந்தார் – இலங்கையிலேயே தமிழர்கள் சகல விளையாட்டுத்துறை கட்டமைப்புகளுக்குள்ளேயும் நுழைய வேண்டும் என்ற எண்ணமும் அவாவும் இவரிடம் நீண்டகாலமாகவே இருந்தது.

அதன் வெளிப்பாடாக சர்வதேச போட்டிகளுக்குக் கூட இவர் ஒரு தமிழனாக இருந்தும் செல்வதற்கான வாய்ப்புகளும் கிடைத்தது – எளிமை, பண்பு, அமைதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான நிர்வாகத்திறன் – கீழ்ப்படிவு – இன்பகரமாக பிறர் மனதை வெல்லும் அதீத ஆற்றல், எல்லாவற்றையும் விட குழந்தைக்கு குழந்தை, வாலிபனுக்கு வாலிபன், முதியவருக்கு முதியவர், எதிரியை எதிர்க்கத் துணிந்த வீரம், சலிப்பில்லாத உழைப்பாளி இப்படி வரிசைப்படுத்திச் செல்லலாம். இதுவே நான் கண்ட குணம் ஐயா. இறுதி வரை தன்னுடைய மரணப்படுக்கையிலும் தம்பி ஆட்களுக்கு சொன்னியளா? தம்பி ஆட்களுடன் கதைக்க முடியாதா ? அவங்களிடம் என்னை கொண்டு போங்கள் என்ற வார்த்தைகள் தாங்கமுடியாத துயரத்தை எமக்களித்தது. தலையை மட்டும் இலேசாக குனிந்தபடி கைகளை நன்றாக விசுக்கி ஒரு மெல்லிய இளைஞன் நடந்து வருவான் இல்லை இல்லை வருவார் எப்படியடாப்பா என்றபடி பற்களை விரித்தபடி ஓர் அகன்ற சிரிப்பு. தன் எதிரே நிற்பவர்களை அணுகி முட்டுக்கொடுத்து கைகொடுத்து தன்னை அறிமுகப்படுத்தும் அந்த அருமையான குணம். அதுவே எம் குணம் ஐயா. போயிற்று வாறன்ராப்பா என்றுவிட்டே போவார். டேய் எப்ப வாறது வேலைகள் என்னமாதிரி என்றுவிட்டு, அழைக்கும் போதெல்லாம் வந்தார் – கடைசியாக அழைத்தோம் வந்தார் ஊர்தியில் மலர் செண்டுகளுடன் – அழைத்தோம் எம் தேசத்தின் நாட்டுப்பற்றாளர் குணம் ஐயா என்று.

விடுதலையை நேசித்தவர்
அதனல் மக்களை நேசித்தவர்
விளையாட்டுத்துறை தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல
தமிழர்கள் விளையாட்டுத்துறையில் உலகமெல்லாம் புகழ் சூட வேண்டும்
என உழைத்த ஓர் அற்புதம்
என்றும் மறவோம் உனது – கனவுடன் என்றும் நாம்.

**கி. பாப்பா**

*தமிழீழ விளையாட்டுத்துறை.*




அமரர் பின்லாந்திற்கு கொண்டு சென்ற பெயர் அட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் பயணம்



சிங்கப்பூரின் 63 ஆவது பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகள் ஆகஸ்ட் 17, 18, 19ஆம் திகதிகளில் நடைபெறுகின்றன.

இப்போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்காக இலங்கையிலிருந்து 4 மத்தியஸ்தர்கள் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளனர்.

கே. பி. ஞானபால, ஏ. எஸ். குணரட்ணம், ஏ. எஸ். பி. சந்திரசேகர, காமினிசில்வா ஆகியோரே இம் மத்தியஸ்தர்களாவர்.

அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்பதற்கான அனுபவத்தைப் பெறும் நோக்குடன் இவர்கள் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் ஒரேயொரு தமிழ்பேசும் உறுப்பினராக ஏ. எஸ். குணரட்ணம் விளங்குகிறார். வட கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டுத் துறைப் பணிப்பாளரான இவர் தற்போது இளைஞர் சேவை இணைப்பதிகாரியாக பணியாற்றுகிறார்.

சர்வதேச தகுதிபெற்ற மெய்வல்லுநர் மத்தியஸ்தரான இவர் 1997இல் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவிலும் மத்தியஸ்தம் வகித்துள்ளார்.

குணரட்ணம் ஒரு முன்னாள் சர்வதேச கால் பந்தாட்ட மத்தியஸ்தரும் ஆவார். இலங்கையில் மெய்வல்லுநர், கால்பந்தாட்டம் ஆகிய இரு விளையாட்டுகளிலும் சர்வதேச தரமுடைய ஒரே தமிழ் பேசும் மத்தியஸ்தர் இவரே.

1970 – 85 வரை அனுராதபுரம் கால் பந்தாட்ட லீக்கின் செயலாளராகவும் இவர் பதவி வகித்தார். இம்மாவட்ட லீக்கின் செயலாளராக விளங்கிய ஒரே தமிழர் ஏ. எஸ். குணரட்ணம் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/VAIDYESHWARA COLLEGE
*Mr. N. Vanniasingham*, B. Sc. (Mgt) Dip-in-Ed.
Principal
T. Phone : 021 222 3322
Jaffna ......................200......

# அமரர் ஆ. சி. குணரத்தினம் அவர்கள் குணத்தின் குன்று

எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவர் வரிசையில் முதன்மையாக வைத்து எண்ணப்பட வேண்டிய கல்லூரித்தாய்ப் பற்றுள்ள பழைய மாணவன் ஆ. சி. குணரத்தினம் என்றால் மிகையில்லை. அவ்வளவு தூரம் கல்லூரித்தாயின் மீது அளவற்ற பற்றுள்ளவர். விடுமுறையிலோ அல்லது பணி நிமித்தமோ யாழ்ப்பாணத்திற்கு வந்தால் பாடசாலையை வந்து தரிசித்து ஆலோசனைகள் வழங்காமல் செல்வதில்லை. அந்த அளவுக்கு கல்லூரியோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தார். கடைசியாக கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினால் கொண்டாடப்பட்ட பொன்விழா நிகழ்வின்போது எதிர்பாராத விதமாக கல்லூரிக்கு விஜயம் செய்து விழாவில் கலந்து கொண்டதோடு மட்டுமன்றி கனதியான உரையொன்றையும் ஆற்றிச் சென்றிருந்தார். இன்னும் அவர் கர்ச்சனையோடு ஆற்றிய உரை எனது காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அந்த அளவு பேச்சுத்திறன் மிக்க, சுறுசுறுப்பான, கடமையுணர்வுள்ள, எளிமையான நேர்மையான, மனித நேயமிக்க, ஆளுமைத்திறன் மிக்க நற்குண நற்செய்கையுடைய நல்ல மனிதன் தான் அமரர் ஆ. சி. குணரத்தினம் அவர்கள்.

இவர் கல்லூரியில் படித்த காலங்களில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கினார். சகல துறை விளையாட்டுக்களிலும் ஈடுபாடு உடையவர். உதைபந்தாட்டம் என்றால் குணரத்தினத்தின் பெயர் தான் மிளிரும். அந்த அளவுக்கு உதைபந்தாட்டத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர். வைத்தீஸ்வராவின் முற்ற வெளி மைதானமே தனக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளராக உயர வைத்தது என்று அடிக்கடி கூறுவார். விளையாட்டுப் போட்டிகளின் போது சிறுவனைப் போல் இளைஞனைப் போல் ஓடி ஆடித் திரிந்து போட்டிகளைத் துல்லியமாக நேர்மையாக நடத்துவார். உணர்ச்சிவசப்பட்டு சில சமயங்களில் காணப்பட்டாலும் பின்னர் சாந்தமாக எல்லோருடனும் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடுவார். அந்த அளவு புரிந்துணர்வு மனப்பாங்கு அவரிடமிருந்ததை நான் பலமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்திருக்கிறேன். எல்லோரையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுகின்ற மனப்பக்குவம் அவரின் பிறப்புரிமையோடு தொடர்புபட்டது என்று கூடக் கூறலாம்.

அமரர் அவர்கள் அகில இலங்கை ரீதியில் இருக்கின்ற விளையாட்டுத்துறை சார்ந்த அமைப்புக்களில் அங்கம் பெற்றதோடல்லாமல் அவற்றின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர். ஆ. சி. குணரத்தினம் என்றால் இலங்கையில் தெரியாதவர்கள் இல்லை எனும் அளவுக்கு பிரபல்யமானவர். இவரின் வாழ்வு எமக்கு பல பாடங்களைத் தந்துள்ளது. ஒரு மனிதன் மகிழ்வாக எப்படி வாழலாம் என்பதை தனது வாழ்க்கையின் போது வாழ்ந்து காட்டினார். இவரது பிள்ளைகள் தமது வாழ்க்கையில் எதை எதைப் பெறவேண்டுமோ அவையெல்லாவற்றையும் பெற்று சுகமாக சந்தோஷமாக வாழ்கிறார்கள். இவரது மனைவி கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகி பிரதி அதிபராகி இன்று ஓய்வு பெற்றுள்ளார். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் பெறப்படும் என்பதற்கிணங்க அமரரின் குடும்ப அங்கத்தவர்கள் மகிழ்வாக வாழ்கிறார்கள். இது ஒன்றே அமரரின் வாழ்க்கைக்கு போதுமானதாகும். அமரர் குடும்பத்தினருக்கு செய்த சேவையைவிட ஆயிரம் மடங்கு சமூகத்திற்கு செய்திருக்கிறார். இவரது சேவையினால் உயர்ந்தோர் பலர். மகிழ்ந்தோர் பலர். அமரர் மறைந்தாலும் அவர் பெயர் சொல்ல பிள்ளைகளும் சேவையை பறைசாற்ற ஆயிரமாயிரம் அன்பு உள்ளங்களும் இருக்கிறார்கள். எனவே அவர் மறையவில்லை. எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

பூமியில் தோன்றுகின்ற சகல ஜீவராசிகளும் என்றோ ஒருநாள் மறைய வேண்டியவையே. அது போல மனிதர்களும் தோன்றும்போது அவர்களுக்கான இறப்பு நாளும் பிரமனால் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது என்று சைவசமயம் கூறுகின்றது. எனவே அந்த விதிக்கு மனிதனாகப் பிறந்த ஆ. சி. குணரத்தினம் அவர்களும் உட்பட்டே ஆகவேண்டும் என்பது அவரது விதி. அந்த விதியை எம்மவர் எவராலும் மாற்றி எழுத முடியாது. அவரது சேவை பூமியில் போதும் தனது சேவைக்கு வா என இறைவன் அழைத்துவிட்டான். எனவே அவர் இறை சேவைக்கு சென்றுள்ளார் என்று எம் மனதை உறுதிப்படுத்தி, ஆறுதல் பெற்று கொள்வதோடு அன்னாரது ஆத்மா வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களில் அமைதி பெற வணங்குவோமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**கா. வன்னியசிங்கம்**
*அதிபர்*
*யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் கடமைகளுடன் நாட்டுக் கடமைகளையும் சமமாக மதித்தவர்

அமரர் குணரத்தினம் அவர்கள் நண்பர்களுக்கு உற்ற நண்பராகத் திகழ்ந்தது மட்டுமல்லாது எதிர்க்கருத்துள்ளவர்களுக்கும் நண்பராகத்தான் இருந்தார். யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தாது வாழப் பழகியமையால்தான் இப்பண்பு அவரில் தோன்றியதெனலாம். இதன் பேறாகவே அவர் அமரத்துவம் அடையும் வரை தனது துறையில் உயர் பதவிகளைத் தொடர்ந்து வகிக்கக் கூடியதாக இருந்தது.

அமரர் அவர்கள் தனது குடும்பத்தை நேசித்தார்; அதே போல் இம் மண்ணையும் நேசித்தார். தானுண்டு தன் குடும்பம் உண்டு என வாழவில்லை. பிள்ளைகளின் கல்வியிலே, ஆளுமை வளர்ச்சியிலே தன் கடமையை செவ்வனே நிறைவேற்றியவர். பிள்ளைகளின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக அவர்கள் பாடசாலைகளில் கற்றவேளைகளில் அமரர் தன் இல்லத்தில் சிறிய பரிசளிப்பு விழாக்களை வைத்ததும் நானும் அவற்றில் பங்கு பற்றிய சந்தர்ப்பங்களும் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அவரின் முயற்சிக்குச் சான்றாக அவரின் பிள்ளைகள் இன்று சமூக அந்தஸ்துடன் விளங்குகின்றனர். அதே போல் தனது பாரியாரிடம் காணப்பட்ட உள்ளார்ந்த திறமைகளை வெளிக் கொணர்வதற்கு உறுதுணையாக இருந்தார். திருமதி குணரத்தினம் அவர்கள் யாழ் மாவட்ட (சாரணிய) வழிகாட்டிகள் ஆணையாளராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் வேறுபல பதவிகளையும் வகித்தாரென்றால் அமரர் அவர்களின் ஒத்தாசையும் ஒரு காரணமாகும்.

குடும்பக் கடமைகளுடன் நாட்டுக் கடமைகளையும் சமமாக மதித்தவர். தேசிய மற்றும் தாயக விளையாட்டுத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு மிகப் பெரிது என்பதனை யாம் அறிவோம். இதன் பெறுபேறுதான் அவர் "நாட்டுப் பற்றாளன்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

இப்படியான ஒருவரின் நட்பு எனக்கும் பல தசாப்தங்களாகக் கிடைக்கப்பட்டமையினையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அ. பஞ்சலிங்கம்**
*முன்னாள் அதிபர்*
*(கொக்குவில் இந்து, யாழ். இந்து கல்லூரி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ மலரும் காலத்தில் போன ஒரு பூந்தோட்டக்காரனுக்கு அஞ்சலிப்பாடல்

▭ புதுவை இரத்தினதுரை

'குணத்தார் போய்விட்டார்' என்றறிந்ததும்
நிலவற்றுப்போனது எங்கள் வானம்
அழகற்றுப்போனது எங்கள் காலை.
படர்ந்து பூநிறைந்து கிடந்த மல்லிகைவனம்
தீப்பிடித்து வேருமெரிந்துபோனது.
வாசம் நுகர்ந்த நாம்
அதிர்ச்சியில் மீளாதோராய் அந்தரித்துப் போனோம்.
மற்றவரை முதுமை பிடித்துலுக்கும் பருவத்தில்
குணத்தார் வாலிபத்தின் வாசலில் குதுகலித்தவர்.
கண்பட்டுப் போனதோ?
எவர் கரிநாக்குப் பட்டதோ?
ஆ. சி. குணரத்தினம்
ஆழக்கிணறிருந்த அமிர்தம்
அளவெடுக்கமுடியாது போனது துயரம்.
ஈழமண்ணை ஆழமாகக் காதலித்த மனிதன்.
தமிழ்த்தேசியத்தை
குருதியென நரம்புகளில் கலந்தவர்.
தலைவனைத் தலையிலேந்தித் தாங்கியவர்.
சின்னக்குழந்தை
சிறுவமிடுக்கு
பிறந்தவூரின் திமிர்நிறைந்த குணவான்.
பணிந்தறியாச் செருக்கனெனினும்
அன்பில் சிறையிருப்பது இவரின் அன்றாடம்.
இவருக்கு இரண்டு மனைவியர்
ஒருவர் 'சிவனேசரத்தினம்'
மற்றது விளையாட்டு.
விளையாட்டை விளையாட்டாக நேசிக்காமல்
உயிராகவே காதலித்தவர் குணத்தார்.
என் 'அப்புவின்' மரணத்தின் பின்
குணத்தாரின் சாவுக்கே விழிகள் கசிந்தன
உருகி வழிந்தன
உண்மையாய் அழுதன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியன சிந்தியாச்செம்மல் ஒருவனை
பிரிவது எத்தனை கொடுமை?
கலை, பண்பாட்டுக்கழகத்தின்
மானுடத்தின் தமிழ்க்கூடல் மூன்றையும்
யாழ்ப்பாணம்
திருகோணமலை
கொழும்பு என
தம் தோளில் தாங்கிய தொண்டருள்
குணத்தாருக்கே முன்வரிசை ஆசனமிட்டோம்.
நினைத்ததை முடிப்பவனென்று
ஒரு வழக்குண்டு
நிதர்சனமாக்கிக் காட்டியவர் குணத்தாரே.
இவர் அலங்காரவளைவாக அழகுகாட்டியவரல்ல
அதன் அத்திவாரமாக உள்ளே கிடந்தவர்.
பணிகளில் முழுமையாய் கரைவதால்
இவர் வெளியேயதிகம் வெளிச்சமாகவில்லை.
ஆ. சி. குணரத்தினம்
வாழ்வைப் பூரணமாக்கிய மனிதன்
அர்த்தமாக்கிய அதிசயன்
கவலையற்றிருந்த காற்று
கையில் மலர்ந்த பூ.
கோடிகோடியாய் பூப்பதுவும் விழுவதுமே
நியதியான வாழ்வில்
நீ அடையாளமற்று
சுமையாய் இருந்து போனவன் அல்ல
ஒரு வெளிச்சமாய்,
வீறாய்ப்பாய்,
விளையாட்டாய்,
விடுதலையாய்,
மனிதனாய்,
மாசற்றவனாய்,
அழகிய பக்கமாய் வாழ்ந்து போனாய்.
எமனால் பிரிக்கமுடியாது
எம்மிடமிருந்து உன்னை.
தற்காலிகமாகப் பிரிந்தோம்
மீண்டும் சந்திப்போம்.
சந்திக்கவேண்டும் நண்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆவது உலகப் போட்டியில் கலந்துகொள்ளும்

# மெய்வன்மை அணி முகாமையாளராக தமிழர் ஏ எஸ். குணரட்ணம் நியமனம்



10 ஆவது உலக மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதிமுதல் 14 ஆம் திகதி வரை பின்லாந்தில் நடைபெறவுள்ளது. இதற்கான இலங்கை மெய்வன்மை அணியின் முகாமையாளராக ஏ. எஸ் குணரட்ணம் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மெய்வன்மைக் குழுவில் மஞ்சுள குமரா(உயரம் பாய்தல்) இந்திரஜித் குரே (மரதன்) பிரசன்ன அமரசேகர (400 மீற்றர்) ஆகிய மூன்று வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களின் பயிற்றுனராக லக்மன் டி அல்விஸும் பின்லாந்து செல்கிறார்.

உலக மெய்வன்மைப் போட்டிக்கு இலங்கை குழுவின் முகாமையாளராக ஓர் தமிழர் நியமிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உதவிச் செயலாளராகிய ஏ. எஸ். குணரட்ணம் இதற்கு முன்னர் 2002 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற 10 ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிக்கு 60பேர் அடங்கிய இலங்கை அணிக்கு முகாமையாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்துடன் இவர் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நிர்வாக சபை உறுப்பினராகவும் இருக்கின்றார்.

(வீரகேசரி 2005 ஆகஸ்ட் 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்றாளர்
# அமரர் ஆறுமுகம் சிவசம்பு குணரெத்தினம்
## அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் சிகரமென அமைந்தது யாழ்ப்பாணக் குடாநாடும் அதனுடன் அண்டிய நிலப்பரப்புகளுமாகும். இங்கே செந்தமிழும் தூய சைவமும் சிறப்புற்று விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தை அண்டிய தென்மேற்கு பகுதியில் நட்சத்திரங்களென மின்னும் சப்த தீவுகள் யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு ஒளியேற்றுவன. இச் சப்த தீவுகளில் வரலாற்றுப் பெருமையும் பண்பாட்டுச் சிறப்புமிக்க தீவு நயினாதீவாகும். அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அன்னை நாகபூஷணி அருளாட்சியும், பொருள் வளமும் அன்னதானமும் மக்களுக்கு வாரி வழங்கி வருகின்றாள். இப்புண்ணிய பூமியில் காலத்திற்கு காலம் புலவர்கள், ஞானிகள், சான்றோர், கல்விமான்கள் தோன்றி சைவத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வந்துள்ளனர். இந்த வரிசையில் சைவ உயர் வேளாள குலத்தில் தோன்றிய சிவசம்பு சேதுப்பிள்ளை தம்பதிகளின் இரத்தினமாக 1938ம் ஆண்டு நவம்பர் 1 ம் திகதி அவதரித்தார். இவருக்கு சகோதரர்கள் ஆறு. தனது இரண்டாவது வகுப்பு வரை நயினை கணேசாவில் பயின்று பின்னர் யாழ்ப்பாணம் வந்து கொட்டடியில் குடியேறினார். இடைநிலைக் கல்வியை வண்ணை வைத்தீஸ்வராவில் முடித்து, உயர்கல்விக்கு யாழ் மத்திய கல்லூரியில் சேர்ந்தார்.

சிறுபராயம் முதல் துடிப்புள்ள இளைஞராகவும் கல்வியில் வல்லவராகவும் திகழ்ந்தார். கல்வி பயிலும் காலத்திலே விளையாட்டு துறையிலும் அதீத அக்கறை காட்டினார். இயல்பாகவே விளையாட்டில் பெரும் நாட்டம் கொண்ட இவர் நீண்ட தூர ஓட்டங்களில் முதன்மையாக திகழ்ந்தார். அத்துடன் கால்பந்து, உயரம் பாய்தல் என்பவற்றிலும் திறமையாக விளங்கினார். மரதன் ஓட்டத்தில் அகில இலங்கை ரீதியில் பரிசில்களை பெற்றார்.

இதற்குக் காரணம் இவரது மனஉறுதியும், விடாமுயற்சியும், கடின உழைப்புமே ஆகும். மரதன் ஓட்டத்தில் தான் முதன்மை நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக தனது பயிற்சிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரை சென்று திரும்புவார். விளையாட்டு துறையுடன் நின்றுவிடாது கல்வியிலும் சமய வாழ்க்கையிலும் முதன்மை பெற்று விளங்கினார். அக் காலத்தில் S. S. C என்ற பொதுப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தி பெற்று மொழி ஆற்றல் மிக்கவரானார்.

சமய நிகழ்ச்சிகளில் விசேடமாக மார்கழி திருவெம்பாவை காலங்களில் அதிகாலையில் எழுந்து நீராடி பல இளைஞர்களை தன்னுடன் இணைத்து திருவெம்பாவை பாடல்களை பாடி சங்கு ஊதி ஊர்வலம் வருவார். இவரது தந்தையின் தந்தையாரான ஆறுமுகம் என்பவர் நயினை தில்லைவெளி கடற்கரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டெடுத்த அம்மன் சிலைக்கு கோயில் அமைத்தார். அதுவே இன்றைய பிடாரி அம்மன் கோவிலாகும். இவர்கள் பரம்பரை பரம்பரையாக கோயிலை நிர்வகித்து வந்தனர். அம்மரபு வழியில் அமரர் குணரெத்தினம் அவர்கள் தான் எங்கு இருந்தாலும் இன்றுவரை தன் பங்களிப்பை செய்து வந்தார். நயினை தெற்கில் காவல் தெய்வமான பிடாரி அம்மன் நேர்த்திக் கடவுளாகவும், வேள்வி கடவுளாகவும் இருந்து வருகின்றாள். பிடாரி அம்மன் வேள்வி என்றால் வைகாசி மாதம் பெரும் கலகலப்பாக இருக்கும். இது இவர்களது பெற்றோர் முதல் சகோதரர்கள் வரை தொடர்ந்து ஈற்றில் குணரெத்தினத்தின் மேற்பார்வையில் அமைந்தது.

இவர் பள்ளி படிப்பை முடித்துக் கொண்டு மலேரியா தடுப்பு பிரிவில் மேற் பார்வையாளராக சேர்ந்தார். முதலில் யாழ்ப்பாணத்திலும் பின்னர் நிரந்தரமாக முல்லைத்தீவிலும் சேவை ஆற்றினார். முல்லைத்தீவு தண்ணீரூற்றில் வசித்த இவர் அங்கும் தனது கோவில் தொண்டுகளையும் விளையாட்டு பயிற்சிகளையும் தொடர்ந்தார். இவர் விளையாட்டு துறையில் காட்டிய ஆர்வத்தையும் அவரது திறமையையும் நேரடியாக கண்டும் கேள்வியுற்றும் இருந்த அப்போதைய அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் விளையாட்டு துறை அமைச்சருமான காலஞ் சென்ற கே. பி. இரத்னாயக்க அவர்கள் இவரை தன் அமைச்சின் கீழ் விளையாட்டு துறை உத்தியோகத்தராக 1972ம் ஆண்டு அநுராதபுர 'தலாவ' என்னும் இடத்தில் நியமித்தார். அக்காலத்தில் இவருக்கு திருமணம் செய்ய விரும்பிய இவரது சகோதரர்கள் நீர்வளமும் நிலவளமும் மிக்க யாழ்ப்பாணத்தின் இதயமாக விளங்கும் கொக்குவில் கிராமத்தில் உயர் சைவ வேளாளர் குடியில் பிறந்த சிவபாதசுந்தரம், இரத்தினம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியான சிவநேசரெத்தினத்தை திருமணம் பேசி 1973ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ம் திகதி மணம் செய்து வைத்தனர்.

இன்பமேயான இல்லறவாழ்வின் பயனாக பார்த்தீபன், பிரதீபன், சுகந்தீபன் ஆகிய புதல்வர்களையும் தர்சிகா என்னும் புதல்வியையும் பெற்றனர். பெற்றோர் செய்த பெரும்பேறு என மற்றோர் போற்றும் அளவிற்கு பிள்ளைகள் கல்வியில் உயர்ந்து பொறியியலாளர், பொறியியல் விரிவுரையாளர், மருத்துவத் துறை மாணவன், வங்கியாளராக விளங்குகின்றனர். உரிய காலத்தில் பிள்ளைகள் இருவர் திருமணபந்தத்தில் இணைந்து துஷ்யந்தி, யசீலா ஆகியோரை அன்பு மருமகள்களாக பெற்று மகிழ்ந்தார்.

ஓடிஓடி உழைக்க வேண்டும், ஊருக்காக வாழவேண்டும் உற்றவரையும் மற்றவரையும் நல்ல நிலையில் வைக்க வேண்டும் என்ற பெருவிருப்பு கொண்டவர் அமரர் நாட்டுப்பற்றாளர் குணரெத்தினம் ஆவார். இவர் சிறிது காலம் நல்லூர் பிரதேச விளையாட்டு அதிகாரியாக கடமை ஆற்றி பின் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரியாகவும், அதனை தொடர்ந்து வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி யாகவும் கடமை புரிந்து 1989ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கடமை புரிந்து வந்தார். அம்மாவட்டங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத்துறையை மேம்படுத்தியதனால் இளைஞர் மனங்களில் பிரிக்க முடியாத இடங்களை பெற்றார். அவரது கடின உழைப்பால் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பாரிய வளர்ச்சி கண்டது. வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டார். கால்பந்தாட்ட துறையில் நுட்பமான அறிவை கொண்ட இவர் சர்வதேச தர பரீட்சைகளில் சித்தி அடைந்து சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தராக உயர்வு பெற்றார். இலங்கை முழுவதும் நடைபெறுகின்ற தடகள போட்டிகள், கால்பந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றி தனது திறமையை வெளிகாட்டி வந்தார். இதனால் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பேசும் திறனை வளர்த்து சிறந்த பேச்சாளராகவும், அறிவிப்பாளராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார். இவரது இறுதி உரை வாகரையில் இடம்பெற்ற தியாகி திலீபனின் ஞாபகார்த்த விளையாட்டு போட்டியில் முடிவுற்றது. இவரது அதீத திறமையாலும் மும்மொழி வன்மையாலும் விளையாட்டு துறை சம்பந்தமான சங்கங்களில் அங்கத்துவத்தை பெற்று கொடுத்தது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அமெச்சூர் மெய்வன்மை சங்கம், பூப்பந்தாட்ட சங்கம் என்பவற்றில் சிறந்த பதவிகளை வகித்து அதன் மூலம் சிங்கப்பூர், மலேசியா, மாலைதீவு, புதுடெல்லி, தென்கொரியா, தாய்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகளுக்கு மத்தியஸ்தராகவும் தேசிய முகாமையாளராகவும் சென்ற ஒரேயொரு தமிழர் என்ற பெருமையை ஈட்டித் தந்தவர்.

இவர் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை திருமலை மண்ணுக்காக அர்ப்பணித்தவர். இவரது உயர்ந்த குணத்தாலும், எப்பொழுதுமே சிரித்த முகத்தாலும், எளிதில் சிநேகமாகும் தன்மையாலும், யாவருக்கும் உதவும் மனத்தாலும், இனிய நகைச்சுவை பேச்சாலும் எங்கு சென்றாலும் இவரை அறியாதவர் யாரும் இலர்.

இவர் அரசசேவையிலிருந்து 1998 இல் இளைப்பாறிய போதும் இவரது சேவை விளையாட்டு துறைக்கும், இளைஞர் சமுதாயத்திற்கும் தேவைப்பட்டதால் இவர் இறுதிவரை சேவை நீடிப்பு பெற்று விளையாட்டுத்துறைக்கும் இளைஞர் விவகாரத்திற்கு உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இது இவரது தன்னலம் கருதாத சேவைக்கு கிடைத்த பரிசாகும். இவர் திருமலையில் தமிழ் மண்ணிற்கு தன்னை முழுமையாக அரசியல் ரீதியாக அர்ப்பணித்தார். பல்வேறு ஜனநாயக போராட்டங்களில் கலந்து அஞ்சா நெஞ்சனாக மக்களை வழி நடத்தி ஆளுமையுடன் செயற்பட்டவர். நோயுற்ற போதும் சிறிதும் தளர்வின்றி போராட்டங்களில் ஈடுபட்டு தன்னை மண்ணுக்கும் தமிழிற்கும் கொடுக்க வேண்டும் என கங்கணம் கட்டினார். அவ் வழியிலே நடந்து காட்டி திருமலை மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து தமிழ் தேசிய மையப்புள்ளியின் இயங்கு விசையாக தன்னை மாற்றிக் கொண்டார்.

ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் அமரர் குணரெத்தினம் திடீரென கடும் சுகயீனம் உற்றார் என்ற செய்தி காட்டுத்தீ போல பரவியது. நயினை சமூக பொருளாதார கல்வி கலாசார சங்கத்தில் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அத்தீவின் மேம்பாட்டுக்காக உழைத்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர். 'செய் அல்லது செத்துமடி' என்பது இவரது வாயிலிருந்து எப்போதும் வர தவறுவதில்லை. இத்தகைய கர்மவீரனின் இழப்பு விளையாட்டுத்துறை அதற்கும் மேலாக தமிழ் தேசியத்திற்கு ஒரு பாரிய இழப்பாகும்.

இறப்பு என்பது பிறக்கும்போதே எழுதப்பட்டு விடுகின்றது. அது உண்மை யானது. அதை யாராலும் மாற்றமுடியாது. இதற்கு குணரெத்தினமும் விதிவிலக்கல்ல. இவர் தனது இறுதி மூச்சை 10 – 12 – 2005 மதியம் 2.05 மணியளவில் சுவாசித்து இப்பூவுலக வாழ்க்கையில் பூர்த்தி செய்து விண்ணுலகம் எய்தினார். மறைந்தாலும் அவர் வாழ்கின்றார். அவரது நினைவுகள் வாழ்கின்றன. அவரது சேவைகள் வாழ்கின்றன. நாட்டுப்பற்றாளர் என்ற நற்பெயர் பெற்று ஆயிரம் ஆயிரம் நெஞ்சங் களில் ஆழப்பதிந்து விட்டார். மறக்க முடியாத குணமெனும் குன்று குணரெத்தினம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பிறந்த மண்ணிற்கும் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்து விண்ணகம் சென்று விட்டார். இவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவர் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணிகள் என்றும் தமிழ் நெஞ்சங்களை விட்டு அகலா.

தலைவர்
திரு. ப. க. பரமலிங்கம்
*நயினாதீவு சமய பொருளாதார கல்வி கலாசார சங்கம்,*
*மேலதிக செயலாளர் காணி அமைச்சு*
*வடக்கு கிழக்கு மாகாணம்*

- முன்னாள் உதவிப்பணிப்பாளர் விளையாட்டுத்துறை, வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு.
- உதவிப்பணிப்பாளர் – இளைஞர் விவகாரம், வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு.
- உதவிச் செயலாளர் – இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்.
- முன்னாள் உதவித்தலைவர் – இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம்.
- உறுப்பினர் – சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.
- ஆலோசகர் – தமிழ் மக்கள் பேரவை, திருமலை மாவட்டம்.
- இணைப்பாளர் – தமிழீழ விளையாட்டுத்துறை.
- முகாமையாளர் – கனிஷ்ட மெய்வன்மை போட்டிக்கான இலங்கை தேசியகுழு – தாய்லாந்து (2002).
- முகாமையாளர் – 10வது உலக மெய்வன்மைப் போட்டிக்கான இலங்கை தேசிய குழு – பின்லாந்து (2005).
- தர்மகர்த்தா – தில்லை வெளி பிடாரி, அம்மன் ஆலயம்
- அகில இலங்கை சமாதானநீதவான்.
- உப தலைவர் – நயினை சமய பொருளாதார கல்வி கலாசார சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1973 ஆம் ஆண்டு திருமணத்தின் போது...





மனைவி மக்களுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல

எங்கள் குடும்பத் தலைவர் ஆ. சி. குணரெத்தினம் அவர்கள் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது தனது சிரமங்களை பொருட்படுத்தாது சகல வழிகளிலும் எண்ணற்ற சேவைகளை புரிந்த டாக்டர். மதனகுமார அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டு,

சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஒடோடி வந்து பல வழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்த அனைவருக்கும் மற்றும் சகல அஞ்சலி இடங்களிலும் மலர்மாலைகள், மலர்வளையங்களை வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கியோர்க்கும்,

திருமலை மக்கள் அஞ்சலி நிகழ்வை திறம்பட நிகழ்த்திய திருமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவைக்கும், வவுனியாவில் அஞ்சலி நிகழ்வை ஒழுங்குபடுத்திய விளையாட்டு கழகங்களிற்கும், கிளிநொச்சி அஞ்சலி நிகழ்வுகளை திறம்பட ஒழுங்குபடுத்திய தமிழீழ விளையாட்டு துறையினருக்கும், மற்றும் அந்நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

யாழ் நகரில் சகல ஒழுங்குகளையும் செய்த உற்றார், உறவினர்கள், கொக்குவில் நண்பர்கள், ஏனைய நண்பர்களுக்கும், மரணச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பத்திரிகையிலும், பிரசுரமாகவும் வழங்கியவர்களுக்கும், செய்திகளை வெளியிட்ட தமிழ் தேசிய தொலைக்காட்சி, தமிழ் பத்திரிகைகள், வானொலி மற்றும் இணைய தளங்களுக்கும்,

இம் மலருக்குரிய ஆக்கங்களை "இந்து பாரம்பரியம்" என்னும் நூலில் இருந்து பிரசுரிக்க அனுமதி வழங்கிய கொழும்பு இந்து மகளிர் மன்றத்தினருக்கும் மற்றும் இம் மலரை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டுதவிய "யுனி ஆர்ட்ஸ்" நிறுவனத்தினருக்கும்,

மற்றும் அந்தியேட்டி, சபீண்டிகரண நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதில் நாம் நிறைவடைகின்றோம்.

குடும்பத்தினர்

Our Sincere thanks to Mr. Manilal Fernando, (Vice President Asian Football Federation) for bearing Colombo funeral expenses.

***- Family Members***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருத்தி

◆ சிவசம்பு + ◆ சேதுப்பிள்ளை

- பாக்கியலெட்சுமி
- ◆ நடராசா
- ◆ பரமசாமி
- ◆ பத்மநாதன்
- பழனிவேல்
- ◆ குணரெத்தினம்
- சோதீஸ்வரி

◆ சிவபாதசுந்தரம் + ◆ இரத்தினம்

- ◆ மகேஸ்வரன்
- சிவநேசரெத்தினம்
- ஞானேஸ்வரன்
- ◆ சுதந்திரேஸ்வரன்
- சிவநேசராணி
- இராஜேஸ்வரன்
- சிவநேசமலர்
- சிவநேசஜோதி

◆ குணரெத்தினம் + சிவநேசரெத்தினம்

- பார்த்தீபன் + துஷ்யந்தி
- பிரதீபன்
- சுகந்தீபன் + யஷீலா
- தர்சிகா

◆ இக்குறியீடுகள் அமரர்களைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்குகள்

[ பிறப்பிலிருந்து இறப்புவரை]

## குழந்தைப் பருவம்

நாமகரணம் - குழந்தை பிறந்து 31ம் நாள் பெயரிடல்.

*"குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்"* (குறள் - 66)



**பூ**மியிலே பிறக்கும் குழந்தைக்கு முதன் முதல் நடத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். 31 நாட்கள் வரை குழந்தையை வெளியே கொண்டு செல்லுதல் கூடாது. குழந்தை பிறந்து 31ம் நாள் ஆசௌச கழிவு நடாத்தப்படும். இதனை 31ம் நாள் துடக்கு கழித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறுவார்கள். 31ம் நாள் வீட்டை சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளிக்கவும். வாசலில் நிறைகுடம் குத்துவிளக்குகள் வைக்கவும். குழந்தைக்கு அன்று முடியை இறக்கி நீராட்டி புத்தாடை அணிவர். வேதியரை அழைத்து அவர் முன்னிலையில் பின்வருவனவற்றை வைக்க வேண்டும்.



தேவையான பொருட்கள்

நிறைகுடம் ( நீர் நிரம்பிய குடம், முடியுடன் தேங்காய், மாவிலை 5, தலை வாழையிலை அல்லது தாம்பாளம், நெல் அல்லது பச்சை அரிசி
குத்து விளக்கு, எண்ணெய், திரி, பூமாலை.

விபூதி, சந்தனம், மஞ்சள், குங்குமம், பன்னீர் தட்டத்தில் வைக்கவும்;
பிள்ளையார் மஞ்சளில் பிடித்து வைக்கவும்.
கற்பூரம், கற்பூரத்தட்டு, ஊதுபத்தி, சாம்பிராணி, சாம்பிராணித்தட்டு.
வெற்றிலை, பாக்கு,எலுமிச்சை பழம் ஒரு தட்டில் வைக்கவும்.
பழத்தட்டு, பூத்தட்டு, பால், கற்கண்டு, அறுகம்புல், மாவிலை.

வீட்டுப் பொருட்கள், உடைகள், உபயோகிக்கும் பொருட்கள் யாவும் கழுவிச் சுத்தம் செய்தபின், வீட்டிலுள்ளோர் குழந்தை உட்பட, யாவரும் தோய்ந்து சுத்தமாகிய பின் வேதியரை அழைத்து வந்து புண்ணியவாசனம் செய்வர். மந்திரம் ஓதிய நீரை அங்குள்ளோர் மீதும் மனை, ஏனைய பொருட்கள் என்பனவற்றின் மீதும் தெளிப்பது வழக்கம். துடக்குக் கழித்தபின் குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் மரபாகும். வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தைக் கூறி பூஜை செய்த பின்பு தாய்மாமன் அல்லது பெரியவர் ஒருவர் மடியில் குழந்தையை இருத்தி, அதன் பெயரை வலது காதிலே மூன்று முறை ஓதி கற்கண்டு தண்ணீர் பருக்க வேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்புப் பானம் வழங்க வேண்டும். இதன் பொருள் வம்சத்தில் தோன்றியுள்ள குழந்தை இறைவன் அருளால் பெயரும், வாழ்வும் பிரகாசிக்க வாழவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பொருள்படும். அதன் பின்பு இனபந்தங்கள் குழந்தையின் பெயரைக் காதில் ஓதுவார்கள். பெற்றோர், உற்றோர் சுற்றம் சூழக் குழந்தையின் பெயரை மனம் நிறைந்த மகிழ்வுடன் எல்லோரும் அழைத்து மகிழ்வர். குழந்தை அன்றுதான் முதன்முதலாக அப்பெயரால் பல்லோராலும் அழைக்கப்பட்டு, ஆசீர்வாதம் பெற்று அப்பெயருக்கு உரியவராகிறார். இந்நிகழ்ச்சியையே குழந்தைக்குப் பெயர் சூட்டும் சடங்கு என்போம். ஐயருக்கு தானம், தட்சணை கொடுக்க வேண்டும்.

இந்நாளில் அரைஞான் கட்டுதல், பஞ்சாயுத சங்கிலி, பஞ்சலோகத்தினாலான காப்பு, காற்சங்கிலி போன்றவை அணியலாம்.

ஒரு தட்டில் பச்சை அரிசி பரவி, வாழைப்பழம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, தேசிக்காய் வைத்து அதில் குழந்தைக்குரிய நகையை வைத்து தகப்பன் அல்லது தாய்மாமன் அக்குழந்தைக்கு அணிவர்.

## திருஷ்டிப் பொட்டு (கறுத்தப் பொட்டு ) செய்யும்முறை

100 கிராம் சவ்வரிசியைத் தாச்சியில் இட்டு சவ்வரிசி கறுப்பு நிறமாக வரும்வரை வறுக்கவும். பின் அதற்குள் தண்ணீர் விட்டு முல்லை, மல்லிகை மலர்களையும் வாசனைத் திரவியங்களையும் இட்டு காய்ச்சவும். கூழ் போன்ற நிலையில் உள்ள இக்கரைசலை பின் ஆறவைத்து ஒரு துணியிலோ, வடியிலோ வடித்தெடுத்துக் கொள்ளவும். இக் கரிக் கூழைத் துப்பரவான செதுக்கிய சிரட்டையிலோ அல்லது கிண்ணத்திலோ ஊற்றி வெயிலில் நன்றாகக் காய வைக்கவும். காய்ந்த இப்பொட்டை தினமும் சிறிதளவு நீர் விட்டு உரைத்து பிள்ளைகளின் நெற்றியில் இடலாம். இப்படியாக கறுப்புப் பொட்டு இடுவதனால் திருஷ்டி கழியும் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு.

## 41ம் நாள்

குழந்தை பிறந்து துடக்கு கழித்தபின்பு 41ம் நாள் தாயையும், குழந்தையையும் கோயிலுக்குக் கூட்டிச் சென்று கோயிலில் குழந்தையின் நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்து இறைவனை வழிபட வேண்டும். கோயிலுக்கு செல்லும் போது அர்ச்சனைப் பொருட்களை தட்டில் வைத்துக் கொண்டு செல்லவும்( *வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி*). குழந்தையை சுவாமி சந்நிதானத்தின் (கற்பக்கிரகம்) முன்னிலையில் வளர்த்தி எடுப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதுகுத்தல் (கர்ணவேதனம்)



குழந்தை பிறந்து 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களிலும் "காது குத்தல்" வைபவம் நடாத்தப்படும். இதற்கு பூஜை, கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் பிடித்து வைத்து நிறைகுடம் வைத்து வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகளுக்கு ஏற்படும் அரிட்டதோஷ நிவர்த்திக்காகவும்.தமிழர் கலாச்சாரத்திற் காகவும் அழகுக்காகவும், குத்தப்படுகிறது. பொற்கொல்லர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்து காதுகுத்தி தோடு போடுவார்கள். (தைப்பூசத்தில் காதுகுத்தல் செய்வது சிறப்பாகும்)

## சோறூட்டல் (அன்னப்பிராசனம்)



ஆண் குழந்தைக்கு 6ம், 8ம், 10ம், 12ம் ஆகிய இரட்டை விழுந்தமாதங்களிலும் பெண் குழந்தைக்கு 5ம், 7ம், 9ம், 11ம் ஆகிய ஒற்றை விழுந்த மாதங்களிலும் சுபமுகூர்த்தம் பார்த்து சர்க்கரை அரிசி, கற்கண்டு, நெய், ஆகியவை கொண்டு உப்பு நீக்கிய அமுது பொங்கி, அப்பொங்கலைப் படைத்து வைத்து திருவிளக்கேற்றி பிள்ளையார் பூஜை செய்து அதன் பின் இது குழந்தையின் முதல் போசனமாதலால் தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி மற்றோரும் எடுத்து ஊட்டி நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

## முதற் பல் தோன்றுதல் – பல் முளைத்தல்

குழந்தைக்கு பல் முளைக்க ஆரம்பிக்கும் பொழுது பல்லுக் கொழுக்கட்டை அவிக்க வேண்டும். மஞ்சளில் பிள்ளையார் பிடித்து விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றி வெள்ளைத்துணி விரித்து இறைவனை வழிபட்டு குழந்தையை அதில் இருத்தி குழந்தையின் தலைமீது வெள்ளைத்துணி போட்டு ஒன்பது கொழுக்கட்டைகளை தாய்மாமன், மாமி குழந்தையின் தலையில் கொட்டி குழந்தைக்கு சிறிது ஊட்டி, உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ வேண்டும். குழந்தைக்கு ஆரோக்கியமான பற்கள் முளைக்க வேண்டு மென்பதற்கும் இறைவனிடம்ஆசி பெறவுமே இவ்வழிபாடு கொண்டாட்டமாக நிகழ்த்தப்படுகின்றது. குழந்தை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ உறவினர்கள் ஆசீர்வதிப்பர்.

### கொழுக்கட்டை

அரிசிமா – ½ சுண்டு
அவித்த கோதுமைமா – 3 மேசைக்கரண்டி
உடைத்த பயறு – 100g (பயறு வறுக்கவும்)
சர்க்கரை – 100g
தேங்காய் – ½ முடி ( வெள்ளைப் பூ)
ஏலக்காய் – சிறிதளவு வறுத்து பொடி செய்ய வேண்டும்.
உப்பு சிறிதளவு

வறுத்த பயிற்றம் பருப்பை அவித்து நீர் வடியவிட்டு ஆறவிடவும். ஆறிய பயற்றை சர்க்கரை, தேங்காய்ப்பூ, ஏலக்காய் பொடி யாவும் போட்டு ஒன்றாகச் சேர்க்கவும். அதன் பின்பு அரிசி மாவையும், கோதுமை மாவையும் ஒன்றாகச் சேர்த்து தேவையான உப்புப் போட்டு கொதிநீர் விட்டு இடியப்பம் குழைக்கும் பதத்தில் குழைக்கவும். பின்பு சிறு உருண்டைகள் பிடித்து அவற்றைக் கிண்ணம் போல் செய்து பயறு துவையலை அவற்றுள் வைத்து அரைவட்ட வடிவமாக்கி பல்லுப்போல் விளிம்பைச் செய்து சிறுதேங்காய்ச் சீவலுடன் கொழுக்கட்டை அவிக்கவும்.


## கல்வி ஆரம்பம் ( ஏடு தொடக்குதல்)

பண்டைக்காலத்தில் கல்வியை ஏட்டிலிருந்தே பெற்றுக் கொண்டனர். அதன் காரணமாகவே இன்றும் வாழ்க்கையில் முதன்முதலாகக் கல்வியை ஆரம்பிக்கும் போது 'ஏடுதொடக்கல்' என்று கூறப்படுவது வழக்கமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மூன்று அல்லது ஐந்தாம் வயதில் நடைபெறலாம். சுப வேளையில் பிள்ளையார் பூஜை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல் பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி



எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே மேற்கொள்வார்கள். தைப்பூசத்தன்றும், தை முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்றதாக அமைந்த சுபநாளிலும் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள். கல்வியில் மேன்மையடையவே, முதற்கல்வியை சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எமது மரபு. ஏடு தொடக்குவதை கோயிலிலும் செய்யலாம். (வசதியில்லாதோர்) ஒரு தட்டில் பூசைக்குரிய பொருட்களுடன், *(வெற்றிலை, பாக்கு, பழம், முடித்தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி, பூ, தட்சணை)* கோயிலுக்குச் செல்ல வேண்டும். கோயிலுக்கு செல்ல இயலாதவர்கள் வீட்டில் பிள்ளையார் படத்தையோ, மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்தோ நிறை குடம் வைத்து விளக்கு ஏற்றி இறைவனை வணங்கி ஒரு தட்டில் அரிசியை பரப்பி அதில் குழந்தையின் கையை பிடித்து முதல் எழுத்தாகிய 'அ' அகரத்தை அதில் எழுதி தொடக்கலாம்.

## இயல், இசை, நாடகம் பயிலல்:–

இவற்றைத் தகுதிவாய்ந்த ஒரு குருவிடம் கற்றலே சிறந்தது. இசை, நடனம் மற்றும் நுண்கலை பயில்பவர்கள் முதன் முதலில் ஒரு குருவிடம் செல்லும் பொழுது குருதட்சணையாக பின்வரும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு தட்டில், *வெற்றிலை, பாக்கு, பழம், கற்கண்டு,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குங்குமம் , முடியுள்ள மஞ்சள் பூசிய தேங்காய்* அவரவர்களது வசதிக்கு ஏற்ப வஸ்திரம் *(வேட்டி, சேலை),* தட்சணை ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

பின்பு குருவிடம் இவற்றை ஒப்படைத்துவிட்டு அவர் பாதங்களில் வீழ்ந்து, வணங்கி ஆசீர்வாதம் பெற்றே பாடத்தை ஆரம்பிக்க வேண்டும். பெரும்பாலும் விஜயதசமியன்று அல்லது பொதுசுப முகூர்த்தங்களிலோ பாடத்தை ஆரம்பிக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியையுறுப்பியல்

## 1. விநாயக குருவழிபாடு :–

உலகங்கங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகிய பொருள் மகாமாயை அல்லது பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்குஞ் சிவசத்திக்கு விநாயகர் என்று பெயர். (வி–இல்லாத, நாயகர் – தலைவர், அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவரெனப் பொருள்படும்.) ஆதலால் எவ்வுலகத்திலேனுஞ் செய்யப்படும் எந்தக்கிரியையும் இனிது முடிதற்கு விநாயகக் கடவுளது திருவருள்வேண்டி முதற் செய்யப்படுங் கிரியை விநாயக வணக்கம். குரு சமய கிரியைகளுக்குத் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு– மலம், ரு–நீக்குபவர்)

## 2. ஆசமனம் :–

ஆசமனமாவது மூவகைத் தத்துவங்களையும் நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற் பொருந்திய அற்ப தண்ணீரை (உழுந்தமிழ்ந்திய தண்ணீரை மந்திரத்தோடு (அஸ்த்திராயபட்) மூன்றுமுறை பருகி உதடுகளைப் பெருவிரலடியினால் இரு முறையும் உள்ளங்கையினால் ஒரு முறையுந் துடைத்து மந்திரத்தோடு (இருதயாய வௌஷட்) உடம்பின் பகுதிகளைத் தொடுதல், மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு (ஆத்மதத்வாயஸ்வதா, வித்யாதத்வாயஸ்வதா,சிவதத்வாயஸ்வதா) நினைத்தலால் அவற்றாலாக்கப் பட்ட உடம்பு அருள் வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி விரல்களாலே தொடுதலினால். அவ்வுறுப்புக்களால் வரத்தக்க குற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் நீக்குவர்.

## 3.பிராணாயாமம் :–

அஃதாவது பிராணவாயுவையடக்குவதினால் மனத்தை ஒரு வழிப்படுத்தித் திருவருளிலே நிறுத்துதல். (பிராண + ஆயாமம் = பிராணவாயுவை அடக்குதல்.)

*இது செய்யும் முறைமை*

வலக்கையிற் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினால் வலமூக்கைப் பிடித்துக் கொண்டு சங்கிதை மந்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரித்து இடமூக்கால் மூச்சை இழுத்தபின்பு, பெருவிரலணி விரல்களால் இருமூக்குகளையும் பிடித்துக்கொண்டு அம்மந்திரத்தை உச்சரித்து மூச்சையடக்கியும், அணிவிரலால் இடமூக்கைப் பிடித்துக்கொண்டு சங்கிதையை உச்சரித்து மூச்சை வெளியே விடுக. பிராணாயாமமானது பொறிகளையும் மனத்தையும் சுத்திகரித்து அவைகளை அடக்குதற்குத் துணையாகின்றது.

## 4. பவித்திரமணிதல் :-

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினாற் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும்போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களின்றுங் காத்தல். (பவித்திரம் = பதனாத் த்ராயதே = பாவத்திலே விழுதலினின்றுங் காப்பது. - காமிகம்). ஆண்கள் வலது கை மோதிரவிரலிலும் பெண்கள் இடது கை மோதிரவிரலிலும் அணிவர்.

## 5. சங்கற்பம்:-

சங்கற்பமாவது செய்யப்போகுங் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே இன்ன இடத்திலே இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித் தொடக்கத்திலிருந்து அன்றுவரையும் உள்ள காலம் இதிலே குறிக்கப்படுதலாலே, காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

## சங்கற்ப முறை

ஆண்கள் வலது கையிலே தருப்பை, பூ, அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக் கொண்டு வலது கையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெரு விரலை வலது பெரு விரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்க. பெண்கள் இடது முழந்தாளில் வைக்க.

*சங்கற்ப வாக்கியத்தின் கருத்து*

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ் வதமந்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பகுதியில் சம்புத்துவீபத்தில் பாரத வரஷத்தில் பரதகண்டத்தில் மேருவுக்குத் தெற்கே – (இடத்தின் பெயர், பிரபவ முதலான அறுபது வருஷத்துள்) – – – (இன்ன) வருஷத்தில்– – – (இன்ன அயனத்தில்) – – (இன்ன) பருவத்தில் – – – (இன்ன மாதத்தில்) – – – (இன்ன) பட்சத்தில்– – – (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேஷ குணத்தோடு சேர்ந்த இந்தப் புண்ணியதினத்தில்! – – – (இன்ன) நோக்கமாக – – – (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

## கும்பம் வைத்தல்

கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுவதுபோலக் கும்பத்திலும் வழிபடலாம். கும்பம் உடம்பின் பாவனை. அதிசூல சுற்றிய சீலை தோலாகும். நூல் நாடிகள், குடம் தசை, தண்ணீர் இரத்தம். அதனுள் இடப்படும் ரத்தினம் எலும்பு, தேங்காய் தலை, மாவிலை தலை மயிர், தர்ப்பை குடுமி, அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்.

## சகளீகரணம்

சகளீகரணமாவது சரீரத்தைச் சிவரூபமாக்குதல், (சகளம் = (சிவ) சரீரம் கரணம் = செய்தல்) சிவ வடிவத்திற்குரிய சிவ மந்திரங்களை எமது சரீரத்திற் பதித்தலாற் சிவவடிவ முண்டாகும், இதில் மூன்று படிகளுண்டு, முதலாவது கையைச் சுத்தி செய்தல் கரசுத்தி (கைகளை உள்ளும் புறமும் சக்தி மந்திரத்தால் தடவி குவித்து, அருளை வேண்டல்) எனப்படும். கையிலே சிவபெருமானைப் பூசித்துச் சிவ மந்திரங்களைப் பதித்தல் கரநியாசம் (கைகளில் சிவாசன மூர்த்தி, ஈசான மூர்த்தி, மந்திரங்களினால் மந்திரங்களை பதித்து சிவகரங்களாக்கல்). அந்தக் கையினாலே உடம்பின் மற்றப் பகுதிகளிற் சிவமந்திரங்களைப் பதித்துச் சிவவடிவமாக்கல் அங்கநியாசம். (சிவகரத்தால் அங்கம் முழுவதையும் மந்திரங்களால் தொட்டு சிவரூபமாக்கல்)

இந்தச் சகளீகரணமாகிய கிரியை சைவ சமயத்துக்கு உயிர் போலுள்ளது. கைகளையும் மற்றப் பகுதிகளையும் மந்திரங்களினிடமாகவும் சிவபெருமானது இருப்பிடமாகவுங் கொள்ளுதலினாற் பூசை செய்யும் போது செய்த பின்னும் மனம் அருள் வழியிலேயே சென்று கொண்டிருக்கும். சிவ சரீரமாக்கி ஒருவன் தன்னைச் சிவமாகப் பாவிக்கும் போது அவனுக்கு உலகத்திலுள்ள ஒரு பொருளிலும் பற்றுவராது. தன்னுடைய சரீரத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தக்க துன்பங்களையும் மதியான். அவனுடைய சரீர உறுப்புக்களும் மனமுஞ் சிவ பூசைக்கே துணையாய் நிற்கும். சண்டேசுர நாயனாருக்கு அவருடைய தந்தையார் அடித்தபோது அந்த அடி அவருக்குத் தெரியாததும் இதனாலேயே. ஒருவன் நாள்தோறும் தன்னுடைய சரீரத்தை மந்திர சரீரமாகப் பாவித்து வருவானாயின் இழிவான செய்கைகளுக்கேனும் பாவங்கள் செய்வதற்கேனும் இலகுவில் உடன்படான். மந்திரம் பதிந்த கையினாற் களவு செய்யவேனும் கைக்கூலி வாங்கவேனும் வேறு பாவங்கள் செய்யவேனுந் துணியான். மந்திரம் பொருந்திய வாயினால் தீய சொற்களைச் சொல்லான். சிவபெருமானுடைய ஆசனமாகிய இருதயத்தினாலே தீமை செய்யும் கருத்தைக் கொள்ளான். தன்னுடைய சரீரம் சிவ சரீரமென்று நினைக்கிறவன் இழிவான செய்கைகளுக்கேவப்படும் போதும் தன் மகிமையை நினைத்து அவற்றினின்றும் விலகுவான்.

## சிவோகம்பாவனை

மந்திர செபஞ் செய்ய முன் சிவோகம்பாவனை செய்யப்படும். அதாவது தன்னைக் கடவுளாகப் பாவித்தல் ( சிவ = கடவுள், அகம் = நான், பாவனை = பாவித்தல்) தான் ஆன்மா என்ற கருத்தை விட்டுத் தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப் பாவித்தல். இது நல்லொழுக்கத்துக்கும் உலகப் பற்று நீக்குதற்கும், சிவவசமாதற்கும் பெருந்துணை.

## பூசை

பூசை தொடங்கமுன் ஸ்நானம் முதலியன முடித்து ஆசமனமும் சகளீகரணமும் செய்க. பின்பு ஆசமனத்துக்கும் மூர்த்திக்கும் (= விக்கிரகம்) பூசை செய்து, கடவுளை நினைத்து அந்த மூர்த்தியிலே எதிர்முகப்படுத்தல் ஆவாகனம் எனப்படும். இதன்பின் தாபனம் சந்நிதானம் சந்நிரோதனம் செய்து பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்துப் பூசைச் சாத்தலாகிய ஏழு கிரியைகள் உண்டு. இவற்றின் மேல் அபிஷேகம் தூப தீபம் அர்ச்சனை தோத்திரம் ஆகிய இவைகள் செய்யப்படும்.

குறிப்பு: இவற்றை ஒரு குருவின் மூலம் அறிந்து கொள்வதே முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அநுட்டானம்

விடிதற்கு ஐந்து நாழிகைக்கு முன் நித்திரைவிட்டெழுந்து கடவுளை நினைத்துத் துதித்து வெளியே போய் மலசலங் கழித்துச் சுத்தி செய்து ஸ்நானம்பண்ணித் தோய்த்துலர்ந்த சீலை கௌபீனங்களை அணிந்து திருநீறு பூசிச் சைவ அநுட்டானஞ் செய்க. சைவ அநுட்டானத்திற்கு உயிராயுள்ளது ஐந்தெழுத்தாற் கடவுளை வழிபடுதலே. இதற்குத் துணையாக உடற் சுத்தியும் உள்ளச் சுத்தியும் வேண்டும். அஃதாவது ஆணவம் கர்மம் மாயையாகிய மும்மலங்களின் வலியை அடக்க வேண்டும். இவற்றிற்கு விபூதி ஸ்நானமும் மந்திர ஸ்நானமுமே முக்கியமானவை. ஆதலாற் சைவ அநுட்டானத்தில் மூன்று பகுதிகளுண்டு. அவை விபூதிஸ்நானம், மந்திர ஸ்நானம், கடவுள் வழிபாடு என்பன. இவைகள் ஒவ்வொன்றுஞ் செய்யுமுன் ஆசமனஞ் செய்ய வேண்டும்.

## 1. விபூதி ஸ்நானம் :-

சுத்தமான பாத்திரத்திலே தண்ணீர் நிறைத்துக் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்து விநாயகரையுங் குருவையும் வணங்கித் தண்ணீரைச் சுத்தி செய்க. எப்படியெனில்

(1) *நீர்ச்சுத்தி*

வலதுகைச் சுட்டு விரல் நடுவிரல்களை மடக்கிக்கொண்டு பெருவிரல் அணி விரல்களுக் கிடையாக இச்சா ஞானக் கிரியா சத்தி வியாபகமான தனது கண்களால். சிவ மந்திரத்தையுச்சரித்துக் கொண்டு தண்ணீரைப் பார்க்க. இதனாலே தண்ணீரிலுள்ள குற்றங்கள் தீரும். இது நிரீட்சணம் எனப்படும். நிரீட்சணம் - பார்த்தல். அஸ்திர (பட்) மந்திரஞ் சொல்லிப் பெருவிரல் சுட்டு விரல்களால் நீரைச் சுற்றி நொடித்துக் கவச மந்திரம் (வௌஷட்) உச்சரித்துச் சுட்டு விரல் நுனியினாற் சுற்றுக. இவை முறையே திக்குபந்தனம் அவகுண்டனம் எனப்படும். இவைகள் நீரிலே குற்றங்கள் வராமற் காக்கும்.

(2) *ஆசமனம்*

ஆசமனமாவது மூவகைத் தத்துவங்களையும் நினைத்து வலக்கைப் பெருவிரலடியிற் பொருந்திய அற்ப தண்ணீரை (உழுந்தமிழ்ந்திய தண்ணீரை மந்திரத்தோடு(அஸ்த்திராயபட்) மூன்றுமுறை பருகி உதடுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலடியினால் இரு முறையும் உள்ளங்கையினால் ஒரு முறையுந் துடைத்து மந்திரத்தோடு (இருதயாய வௌஷட்) உடம்பின் பகுதிகளைத் தொடுதல், மூவகைத் தத்துவங்களை மந்திரத்தோடு (ஆத்மதத்வாயஸ்வதா, வித்யாதத்வாயஸ்வதா,சிவதத்வாயஸ்வதா) நினைத்தலால் அவற்றாலாக்கப்பட்ட உடம்பு அருள் வழிநிற்கும். மந்திரத்தோடு இடங்களைப் பெருவிரலணி விரல்களாலே தொடுதலினால். அவ்வுறுப்புக்களால் வரத்தக்க குற்றங்களை அவற்றின் அதிதேவதைகள் நீக்குவர்.

(3) விபூதி சுத்தி

திருநீற்றை இடதுகையில் வைத்து அஸ்திரமந்திரத்தினால் (பட்) நீரைத் தெளித்து அதில் ஒரு சிறுகூற்றைப் பெருவிர லணிவிரல்காளலெடுத்து அஸ்திர மந்திரத்தால் (உம்பட்) தென்மேற்கு மூலையிலே தெளிக்க.

தென்மேற்கு இராட்சதமூலை எனப்படும். விபூதியிற் குற்றமான பகுதியென அது நீக்கப்படும். முன்போல், நிரீட்சணம் திக்குபந்தனம் அவகுண்டனஞ்செய்து பதினொரு மந்திரங்களையுஞ் சொல்லி அதிலே பதிக்க. இதனாலே சிவசக்தி வடிவமான திருநீற்றிலே சிவசக்தி பதியும்.

(4) விபூதி அணிதல்

எஞ்சிய விபூதியின் ஒரு கூற்றைப் பெருவிரலணி விரல்களால் எடுத்துத் தலைமுதலாக உடம்பெங்கும் பூசி, மற்றொரு கூற்றில் இருதயத்தால் நீர் விட்டுக் கவசத்தாற் (வௌஷட்) குழைத்து நடுவிரல் மூன்றினாலும் சிரசிலும் நெற்றியிலும் மார்பிலும் கொப்பூழிலும் முறையே ஈசானம் முதலிய நான்கினாலும் பூசி, முழந்தாள், புயம், முழங்கை, மணிக்கட்டு, விலா, முதுகு கழுத்து ஆகிய இடங்களிலே சத்தியோசாத மந்திரஞ் சொல்லி பூசுக.

(5) விபூதி ஸ்நானம்

எஞ்சிய திருநீற்றிலே தண்ணீர் விட்டுப் பிடித்துக் கொண்டு பஞ்சப்பிரம மந்திரங்களைச் சொல்லியபின் தலையிலே தெளிக்க.

## 2. மந்திர ஸ்நானம் –

ஆசமனமும் பிராணாயாமமுஞ் செய்து அநுட்டான தீர்த்தத்தைச் சிவதீர்த்தமாக்கி அதை மந்திரஸ்நானத்துக்காக உபயோகிக்க. சிவதீர்த்தமாக்குதல் சிவதீர்த்தகரணமெனப்படும்.

(1) சிவதீர்த்த கரணம் – புருவ நடுவிலே ஞானமயமாகிய அமிர்தமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை இருதயமந்திரம் (வெளஷட்) சொல்லிச் சுட்டுவிரலினால் எடுத்துத் தீர்த்தத்திலே வைத்து மூலமந்திரத்தால் அபிமந்திரித்துத் திக்குபந்தனமும் அவகுண்டனமுஞ் செய்க.

(2) சலத்தை இடக்கையில் விட்டுச் சங்கிதையால் அபிமந்திரித்துத் தலையிலே தெளிக்க.

(3) சலத்தை வலக்கையால் மூடிச் சங்கிதையால் அபிமந்திரித்து இடக்கையிலே சலத்தை விட்டுக் கீழே ஒழுகுகின்ற சலத்தைச் சங்கிதையால் (வெளஷட்) தலையிலே தெளிக்க.

(4) எஞ்சிய சலத்தை வலதுகையில் விட்டு மூக்குக்குக் கிட்டப் பிடித்து அந்தத் தீர்த்தத்திலுள்ள சிவசத்தியினாலே சரீரத்திலுள்ள தீவினையைக் கெடுத்து வலக்காற் பெருவிரலிலுள்ள ஞானக்கினியில் அஸ்திரமந்திரம் (உம்பட்) சொல்லி விட்டுக் கைகழுவுக. இதனாலே தீவினையின் பயன் அப்போது மறையும். இது அகமர்ஷணமெனப்படும். (அகம் –பாவம், மர்ஷணம்= கெடுத்தல்)

## 3. கடவுள் வழிபாடு - ஆசமனஞ்செய்து.

(1) சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்குத் தர்ப்பணஞ் செய்க. தர்ப்பணம் = திருப்திசெய்தல், எப்படியெனில், இரண்டு கையும் நிறைந்த சலத்தைச் சிவமந்திரத்தைச் சொல்லி மூன்றுமுறை விடுக. சிவமந்திரத்தைப் பத்துத்தரம் சொல்லிச் சிவமந்திரத்தாற் பின்னுந் தர்ப்பணஞ்செய்து, சங்கிதையால் (சுவாகா) ஒவ்வொரு தரமும் உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியராயினோர்க்கு ஒவ்வொரு முறையும் அந்த அந்த மந்திரத்தால் (சுவாகா) தருப்பணஞ் செய்க.

(2) ஆசமனஞ்செய்து சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதய மந்திரத்தால் (வெளஷட்) எடுத்துப் புருவ நடுவில் ஒடுக்குக. இது தீர்த்தோபசங்காரமெனப்படும். இரண்டுகை நிறையச் சலம்விட்டுச் சங்கிதையைச் செபித்துச் சூரிய மண்டலத்திலே விளங்கும். சிவபெருமானுக்குத் தருப்பணஞ் செய்க.

(3) வடக்கு முகமாக இருந்து சிவபெருமானது உருவத் திருமேனியாகிய உருத்திர வடிவத்தை நினைத்துச் சிவமூலமந்திரத்தை நூறு முறையேனும் ஐம்பது முறையேனும் பத்து முறையேனும் இயன்ற அளவு செபித்து, செபத்தைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துத் தோத்திரஞ் செய்க, சலத்தைக் கால்படாத இடத்தில் விடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தியா வந்தனம்

மாலை, இரவு; இரவு, காலை ஆகிய காலங்களின் சந்திப்பில் செய்யப்படும் கடவுள் வழிபாடே சந்தியாவந்தனம் எனப்படும். இது சூரியனை வழிபடுதலாகும். நாம் அன்றாடம் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்களை மன்னித்து நல்வாழ்க்கை வாழ்வதற்கு ஆண்டவனிடம் பிரார்த்திப்பதே சந்தியா வந்தனத்தின் உட்பொருளாகும்.

*செய்யும் முறை*

1) ஆசமனம் : கடவுளை தியானித்து சிறிது நீரை உள்ளங்கையில் விட்டு அருந்தவும்.

2) மார்ஜனம் : உடலையும் மனத்தையும் தூய்மைப்படுத்த வேண்டி சிறிது நீரை உடல் மீது தெளிக்கவும்.

3) அகமர்சனம் : பல முற்பிறவிகளில் செய்த பாவத்திற்குப் பிராயச் சித்தமாக வேண்டுதல்

4) சூர்யஅர்க்யம் : சூரிய பகவானைக்குறித்துப் பிரார்த்தனை செய்து நீர் தெளித்தல்.

5) பிரானாயமம் : அலையும் மனதை கட்டுப்படுத்தி மூச்சுப்பயிற்சி செய்து காய்த்ரி மந்திரத்தைப் பாராயணம் செய்தல்.

6) உபஸ்தானம் : கருணையும் அருளும் வேண்டி சூரிய பகவானிடம் வேண்டுதல்.

# தீட்சை

குரு தன் சீடனுக்குச் செய்யும் அருள் உபகாரம் தீட்சை ஞானத்தை அருளிப் பாசத்தைப் போக்குவது என்பது இதன் பொருள். சைவர்களுக்குத் தீட்சை பெறுவதே சமயப் பிரவேசம் ஆகும். சமய தீட்சை பெற்ற பின்னரே சைவ சமய அனுட்டானங்களை மேற்கொள்ளலாம். இதுவே அடிப்படைத் தீட்சை. யாகம் வளர்த்து தீட்சை வைப்பதே முறை.

தீட்சை வைபவத்தின் போது குருவின் அருட்பார்வையால் சீடன் ஆணவ மலத்தினின்று விடுபடுகிறான். குரு ஆசிர்வதித்துத் திருநீற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் போது கெட்ட எண்ணங்கள் நீங்குகின்றன. அவர் தர்ப்பையினால் தீண்டி ஆசிர்வதிக்கும் போது நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன. அதன் பின் தீட்சை மந்திரத்தை குருசீடனுக்கு உபதேசித்து அருளுகின்றார்.

ஆகவே தீட்சை பெற்று சைவர்களாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளோடு தான் தீட்சை வைபவங்களை நடத்துகிறார்கள்.

1) சமய தீட்சை – சரியை மார்க்கம் தொடங்குமுன் செய்யப் பெறுவது. அக்கினி காரியம் செய்து சமய தீட்சை செய்யப்படுகிறது.
2) விசேஷ தீட்சை – கிரியா மார்க்கத்திற்கு உரியது.
3) நிர்வாண தீட்சை – யோகத்திற்கும் ஞானத்திற்குமுரியது.
4) ஸ்பரிஸ தீட்சை – குரு, தன் திருக்கரங்களால் சீடனைத் தொடுவது.
5) நயனதீட்சை – குரு, தன் அருட்பார்வையால் சீடனை நோக்குவது.
6) மானச தீட்சை – குருதன் மனத்தால் சீடனது மனத்தை தன் வயப்படுத்துவது.
7) வாசக தீட்சை – குரு உபதேசம், நல்ல அருள் வாக்குகளைச் சொல்வது.
8) சாத்திர தீட்சை – குரு, சீடனுக்கு பதி, பசு, பாசத் தொடர்பை உபதேசிப்பது.
9) யோக தீட்சை – குரு, சீடனை இறைவனோடு சேர வேண்டிய யோக முறைகளைச் சொல்லித் தருவது.
10) ஔத்திரி தீட்சை – அக்கினி காரியத்தோடு செய்து சீடனை தூய்மைப் படுத்துவது.

குறிப்பு : இவற்றை குருவின் மூலம் அறிந்து கொள்வதே சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்புனித நீராட்டு விழா



ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்மைக்குத் தகுதி உடையவளாக மாறும் நாள் பூப்படைதல் என்று சொல்லப்படும். பெரும்பாலும் 9 வயது முதல் 12 வயதிற்குள் பூப்படைதல் பெண் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பின்னரே பரி பூரணமான பெண்ணாக மதிக்கப் படுகிறாள்.

## நீராட்டல்

பெண் பூப்படைந்தவுடன் முக்காலத்தில் கிணற்றடியில் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி தாய் மாமன் தேங்காய் உடைக்க, மாமி தண்ணீர் ஊற்றி நீராட்டுவார்கள். கிணற்றடி பொது இடம், பெண்ணிலிருந்து வெளிப்படும் தீட்டு பிறர் கண்ணில்படாது குப்பைக்குள் மறைந்துவிடும் என்பதால் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி நீராட்டுவார்கள். இக்காலகட்டத்தில் பெண்ணை குளியலறையில் மாமியார் நீராட்டலாம். பின்பு பெண்ணுக்கு வெள்ளை ஆடை அணிவித்து தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்றபின் ஒரு தனியறையில் பெண்ணை விட வேண்டும். அவ்வறையில் வேப்பிலையும் காம்புச்சத்தகம் முதலானவற்றை இருப்பிடத்தின் மேலே செருகி விடுவர். பெண் பூப்படைந்தபோது அணிந்திருந்த ஆடையினை குடும்பச் சலவைத் தொழிலாளிக்குக் கொடுப்பதே மரபாக உள்ளது. தீட்டுக் கழியும்வரை மாற்றுடுப்புகளை வழங்க வேண்டிய பொறுப்பும் அவனையே சார்ந்துள்ளது. அழுக்கடைந்த சேலையை கட்டாடியார் எடுத்துச் சென்று, ஒரு பெண் பூப்படைந்து விட்டாள் என்பதனை கட்டாடியார் உறுதிப்படுத்துவார். அவ்வீட்டில் உள்ள அனைவருக்கும் மூன்று நாட்கள் துடக்காகையால் அதை நிவர்த்தி செய்வதற்கு அந்தணரை அழைத்து புண்ணியவாசம் செய்வர் (இதை 5ம் 7ம் நாட்களிலும் செய்யலாம்). முன்பு கிராமப்புறங்களில் பூப்பெய்தி 4ம் நாள் பசும் பால் வைத்து நீராட்டித் துடக்கைப் போக்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு முறை:-

முதல் மூன்று நாட்களும் பச்சையரிசிச் சாதமும், கத்தரிக்காய் பால்கறியும் கொடுத்தல் வேண்டும். மூன்று நாட்களின் பின் அதிகாலை ஒரு பச்சை முட்டை குடிக்கக் கொடுக்கும் பொழுது அதன் அளவு நல்லெண்ணெயும் முட்டைக்கோதுக்குள் விட்டு குடிக்கக் கொடுக்க வேண்டும். பின்பு காலை உழுத்தங்களி, மதியம் சோறு கறி, கத்தரிக்காய் பொரியல் (முட்டை பொரியல்) கொடுக்கலாம். பால்விடாது காலை, மாலை கோப்பி கொடுக்கலாம். இரவு இடியப்பம் கொடுக்கலாம். இக்காலத்தில் இலகுவாக ஜீரணிக்கக்கூடிய போசாக்கான சத்துள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டும். முக்கியமாக அனைத்து உணவுகளிலும் உழுந்தும் நல்லெண்ணெயும் மிகுதியாகச் சேர்க்க வேண்டும்.

அத்துடன் காலையில் (வேப்பிலை 10, மிளகு 3 , விரற்பிடி சின்னசீரகம், 2 உள்ளி பல், சிறுதுண்டு மஞ்சளும் இஞ்சியும்), இவற்றை அரைத்துக் குளிசைகளாக்கி 3 நாட்களுக்குக் விழுங்கக் கொடுப்பது உடலுக்கு நல்லது.

## சாமர்த்தியச் சடங்கு

சடங்கு செய்வதற்கு சுபநாளில் ஒன்றை தெரிவு செய்து (5,7,9,11,13 நாட்களால் சடங்கு செய்யலாம்) அன்று பருவமடைந்த பெண்ணின் இரண்டு கைகளிலும் ஒவ்வொரு வெற்றிலைக்குள் பாக்கும் சில்லறைக் காசும் வைத்துச் சுருட்டிக் கொடுத்து, தலையில் வெள்ளைத் துணியால் முகத்திரை இட்டு (அபசகுணங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு) மாமியார் பால் அறுகு வைக்கும் இடத்திற்கு அழைத்து வந்து, கிழக்கு அல்லது வடக்கு நோக்கி பார்க்கக்கூடியதாக பாயின் மேலோ அல்லது ஒரு பலகை குற்றியின் மேலோ ஒரு வெள்ளைத்துண்டை இட்டு பருவமடைந்த பெண்ணை உட்கார வைக்க வேண்டும். அவளின் முன் நிறைகுடமும், குத்து விளக்குகளும் ஒரு பாத்திரத்தில் பால், அறுகம் புல், சில்லறைக் காசு என்பனவும், வேறு ஒரு தட்டில் பழம், பாக்கு வெற்றிலையும் ஒரு தேங்காயுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைப்பதற்கு கத்தியும் பாத்திரமும் வைக்க வேண்டும். இச்சடங்கில் தாய்மாமன், மாமிக்குத்தான் முக்கிய இடம் அளிக்கப்படும். பெண்ணை நிறைகுடம் விளக்கில் பார்க்கும்படி பெண்ணுக்கு கூறி முகத்திரையை விலக்கி விட்டு அதன் பின் கற்பூரம் ஏற்றி பிள்ளையாரைத் துதித்து எடுத்தகாரியம் இனிதே நடைபெற வேண்டும் என்று நினைத்து வணங்க வேண்டும். தாய்மாமன் தேங்காய் உடைப்பார். பின் பால், அறுகு இருக்கும் தட்டில் சில்லறைக்காசு போட்டு மாமியார் இருகைகளினாலும் எடுத்து பெண்ணை ஆசீர்வதித்து தலையிலே வைப்பார் அதைத் தொடர்ந்து 5 பேர் அல்லது 7 பேர் என ஒற்றை எண்ணிக்கையானவர்கள் பாலறுகு வைப்பர். பாலறுகு வைத்து முடிந்ததும் பெண்ணை நீராட்டும் இடத்திற்கு அழைத்துச் சென்று அங்கும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பெண்ணை இருத்தி முதலில் தாய்மாமன் தலையிலே தண்ணீரை ஊற்றுவார். அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் ஊற்றுவர். பெண்ணுக்கு மஞ்சள் பூசி நன்கு நீராட்டி திரும்பவும் தலையைத் துணிகொண்டு மூடி அழைத்துவந்து சுடர்விட்டு பிரகாசிக்கும் குத்து விளக்கில் தரிசிக்க விடுவர். பின்பு பெண்ணை அலங்காரம் செய்து தாய்மாமன் பெண்ணின் கையில் கும்பம் (நீர் நிரம்பிய செம்பு தேங்காய் வேப்பிலைக் கொத்து, மாவிலை) கொடுப்பார். கன்னிப் பெண்கள் குத்துவிளக்குகளுடன் முன்னால் செல்ல சுமங்கலிப் பெண்கள் ஆரத்திப் பொருட்களுடன் பெண்ணை அழைத்துக் கொண்டு மணவறை நோக்கிச் செல்வர். அங்கு ஆரத்தி தட்டங்களை வரிசையாக வைப்பர்.

பின்னர் சுமங்கலிப் பெண்கள் இருவர் எதிரெதிராக நின்று கொண்டு ஒவ்வொரு தட்டங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று முறை வலது தோளால் உயர்த்தி ஆரத்தி எடுத்து பின் சிரசை மூன்று முறை சுற்றி அதைப் பின்னுக்கு கொடுத்து கண்ணூறு கழிப்பார்கள். பின்பு கடைசியாக வேப்பமிலை பால் ரொட்டியால் ஆரத்தி எடுத்து பெண்ணை வேப்பிலையால் சுற்றித் தடவி பால் ரொட்டியை உடைத்து நாலுபக்கமும் எறிந்து வேப்பிலையால் தலையைச் சுற்றிப் பெண்ணை வாயில் மென்று துப்பச் செய்த பின்னர், வாழைப்பழ ஆரத்தி எடுப்பர். *(ஆரத்திக்குரிய தட்டங்களின் ஒழுங்கு இடத்துக்கிடம் வேறுபடலாம். ஆனால் எப்பவும் நிறைநாழி முதலாவதாகவும் வேப்பிலை வெள்ரொட்டித்தட்டம் இறுதியாகவும் செய்யவேண்டும். அதன் பின் வாழைப்பழம் ஆரத்தி எடுத்து நிறைவு செய்தல் வேண்டும். (பொதுவாகப் பெண்ணின் தாயார் ஆராத்தி எடுப்பதில்லை)* பெற்றோர் ஆண்டாள் மாலையை பெண்ணின் கழுத்தில் இட (ஆண்டாள் மாலை அணிவது பெண்ணை பாவையாக கருதுவதால்) பெண்ணின் முன் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகுடத்தைத் தாய்மாமனும், குத்துவிளக்கை மாமியாரும் எடுத்துக்கொண்டு அதனுடன் பெண்ணையும் அழைத்துக் கொண்டு பூஜை அறையினுள் சென்று வைப்பர், தாய்மாமன் பெண்ணின் கையிலிருக்கும் செம்பை வாங்கி பூஜை அறையில் வைப்பார் (இம்முறை வீட்டில் செய்வோருக்குப் பொருந்தும்). பூஜை அறையில் தூப தீபம் காட்டி வழிபட்டு பெண் பெற்றோரினதும், மாமன் மாமியினதும் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறுவாள். பின்பு சடங்கில் பங்குபற்றிய உறவினர்கள் பெண்ணை வாழ்த்தித் தம்மால் இயன்றவற்றை பரிசளிப்பர். அதன் பின் வந்தவர்களை மதியபோசன விருந்தளித்து உபசரிப்பர்.

## ஆரத்தி எடுக்கும் முறை:

ருது சாந்தியின் போது எடுக்கும் ஆரத்தி 3 முறை மேலும் கீழுமாக சுற்றி பின் பெண்ணின் தலைக்கு மேல் 3 முறை சுற்றிப் பின்னால் கொடுக்க வேண்டும் (நிறைநாழியும், பன்னீர் தட்டமும் முன்னுக்கு வைக்க வேண்டும். உணவுத் தட்டங்களைத் தலைக்கு மேல் சுற்றிப் பின்னால் கொடுக்க வேண்டும்). பூத்தட்டத்தால் ஆரத்தி எடுத்தபின் பூக்களைப் பெண்மேல் தூவி விடுதல் வேண்டும். பின் இந்த உணவுப் பண்டங்களை எல்லாம் கட்டிக் கட்டாடியிடம் கொடுத்து விட வேண்டும். அல்லது ஆற்றிலோ, கடலிலோ சேர்த்து விடலாம். இன்றைய நிலையில் ஏழைகளுக்கு கொடுத்து விடலாம்.

*பால்சாதம்* : பச்சை அரிசிக்குள் தேங்காய்ப் பாலும், நீரும் சிறிது உப்பும் போட்டு சாதமாக அவித்து 3 தளிசுகளாகத் தட்டில் வைக்கவும்.

*பிட்டு* : வழமை போல் வறுத்த உழுத்தமா அரிசிமா கலந்து செய்த பிட்டை நீற்றுப்பெட்டியில் மும்முறை அவித்து தட்டத்தில் வைக்கவும்.

*களி* : வறுத்த அரிசிமா 1 சுண்டு, வறுத்த உழுத்தமா ½ சுண்டு, தேங்காய்ப்பால் 3 சுண்டு, பனங்கட்டி 3/4 சுண்டு, உப்பு விரற்பிடியளவு, தேங்காய்ப்பாலைக் காய்ச்சி (உழுத்தமா, அரிசிமா, உப்பு, தூளாக்கிய பனங்கட்டி) எல்லாவற்றையும் கலந்து பாலின் மேல் தூவி கட்டிபடாமல் கிளறி எடுக்கவும் 3 தளிசுகளாக தட்டத்தில் வைக்கவும்.

*வெள்ரொட்டி (பால்ரொட்டி)*

1 சுண்டு பச்சை அரிசியை கழுவி ஊற வைத்து இடித்து 1/4 சுண்டு கப்பிமா எடுக்கவும். மிகுதியை மாவாக்கவும். இரண்டையும் கலந்து 1/2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கரண்டி உப்பும் சேர்க்கவும். ஒரு தேங்காய் துருவி முதல் பால் எடுத்துக் காய்ச்சி மாவில் ஊற்றி இறுக்கமாக கையில் ஒட்டாத பதத்திற்குக் குழைக்கவும். 1/2 மணித்தியாலயம் விட்டு ஒரு வாழையிலையில் எண்ணெய் தடவி மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி தட்டி எண்ணெயில் பொரிக்கவும். இது பூரி போல் பொங்கி வரவேண்டும்.

## ஆரத்திப் பொருட்கள்

நிறை நாழி (நிறை நாழி கொத்தில் நெல்லை நிரப்பி அதில் காம்பு சத்தகத்தை நிற்க வைத்து நுனிக்காம்பில் ஒரு வெற்றிலையைச் செருகிவைக்க வேண்டும்.)

பிட்டு, களி, பால்சாதம், சோறுகறி

தேங்காய் தட்டம் (முடியுடன் கூடிய 3 தேங்காய்களை மஞ்சள் நீர் கொண்டு கழுவித் தட்டில் வைக்கவேண்டும்.)

பழங்கள்

பலகாரம்

பன்னீர் தட்டம்


வெற்றிலை பாக்கு எலுமிச்சை


பூத்தட்டு

வெள்ரொட்டி, வேப்பிலை


ஆரத்தி




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சடங்கு

திரு என்பது தெய்வத்தன்மை எனவும், மணம் என்பது இணைதல் எனவும் பொருள்பட்டு, மேன்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல் எனப்படுகின்றது. அதாவது இரு இதயங்கள் இணைவது எனக் கூறலாம்.

தமிழரின் இந்துத் திருமணம் ஆகம மரபுச் சடங்குகளுடன் சில சிறப்பு அம்சங்களையும் தழுவி நடைபெறுகின்றன. இச்சடங்குகளை நன்கு படித்த குருக்கள் சமய முறைப்படி அக்கினி பூர்வமாக இறைவனின் ஆசியுடன் நடத்தி வைக்கிறார். திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி சுபவேளையில் தாலி கட்டுதலாகும். இதனை "மாங்கல்யதாரணம்" எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் "சுமங்கலி" அதாவது திருமணமானவள் என்ற அந்தஸ்த்தைப் பெறுகிறாள்.

இரு வீட்டாரும் முதலில் சாதகப் பொருத்தத்தை ஆராய்வார். தமிழ்நாட்டில், பெண் பார்க்கும் படலம் போன்று நம் நாட்டில் பெண்ணை மணமகன் பொது இடங்களில் பார்ப்பது வழக்கமாகவுள்ளது. பின் நிச்சயதார்த்தத்தை உறுதிசெய்யப் பெண் வீட்டார் தாம்பூலம், பலகாரம், பழங்களோடும், உறவினரோடும் மணமகன் வீட்டிற்கு நல்ல நாள் பார்த்துச் செல்வர். இதன்பின் இரு வீட்டாரும் திருமணநாளைச் சோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர். அத்தோடு பொன்னுருக்கலுக்கும் ஒரு நாளை நிச்சயிப்பர்.

## பொன்னுருக்கல்

திருமண நாளுக்கு முன்பு ஒரு சுபநாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் நடைபெறும். இதில் மணப்பெண்ணைத் தவிர பெண்ணின் உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் (கொழுக்கட்டை) கொண்டு செல்லுதல் ஓர் சம்பிரதாயம்.

மணமகன் வீட்டு வாசலில் முறைப்படி *நிறைகுடம், குத்துவிளக்கு, பன்னீர்த்தட்டு, குங்குமம், சந்தனமும் வைத்து, பொன்னுருக்கும் இடத்தில் ஒரு நிறைகுடம், குத்துவிளக்குகள் 2, தேங்காய் 2, மாவிலை, வெற்றிலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாக்கு, வாழைப்பழம், மஞ்சள் கட்டை (துண்டு), தேசிக்காய், அறுகம்புல், பூக்கள், ஒரு சட்டியில் தண்ணீர், தேங்காய் உடைக்க கத்தி, விபூதி, குங்குமம், சந்தனம், தேசிக்காய், மஞ்சளில் பிள்ளையார், சாம்பிராணியும் தட்டும், கற்பூரத் தட்டும், கற்பூரம்,* முதலியன முக்கியமாகத் தேவைப்படும் பொருட்களாகும்.

திருமாங்கல்யத்திற்குரிய தங்கநாணயத்தை (பவுணை) ஆலயத்தில் (இறைவனிடத்தில்) வைத்து பூசை செய்து ஒரு தட்டத்தில் வெற்றிலை, பாக்கு மஞ்சள், குங்குமம், பூ, பழத்துடன் நாணயத்தையும் வைத்து கொண்டு வந்து பூஜையறையில் வைக்க வேண்டும். பொன்னுருக்கும் நாளன்று அதை மணமகனின் பெற்றோர் அல்லது பெரியோர் எடுத்து மணமகனிடம் கொடுக்க அவர் அதை ஆசாரியாரிடம் கொடுத்து உருக்க வேண்டும். ஆசாரியார் கும்பம் வைத்து விளக்கேற்றி தூபதீபம் காட்டி வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் முதலியவை வைத்து தேங்காய் உடைத்துப் பூசை செய்து பொன்னை உருக்குவார். உருக்கிய பின் தாய் மாமன் தேங்காய் உடைத்து அந்த இளநீரை உருக்கிய தணலில் ஊற்றி தீயை தணிப்பார். பின் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, பழம், பூ மஞ்சள், குங்குமம், தேசிக்காய் வைத்து வெற்றிலைமேல் உருக்கிய தங்கத்தையும் வைத்து மணமகனிடம் ஆசாரியார் கொடுப்பார். அதை மணமகன் வந்துள்ள சபையோருக்குக் காண்பித்து, அதன்பின் ஆசாரியாருக்கு அரிசி காய்கறியுடன் தட்சணை அளித்து உருக்கிய தங்கத்தைத் திருமாங்கல்யம் செய்ய ஒப்படைக்க வேண்டும். பின்னர் விருந்துபசாரத்தில் அனைவரும் கலந்துகொள்வர். மணமகன் வீட்டிலிருந்து தோழி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்கு சென்று மணமகளிற்கு கொடுப்பார். இதே நாளில் இரு வீடுகளிலும் திருமணத்திற்குரிய பலகாரங்களை செய்யத் தொடங்குவார்கள். முதன் முதலாக இனிப்புப் பலகாரம் செய்ய வேண்டும் என்பதால் சீனி அரியதரம் செய்யலாம். அதற்குரிய மாவை குழைத்து வைத்தால் கன்னிக்கால் ஊன்றியபின் பலகாரம் சுடலாம். (இந்த நாளிலிருந்து திருமணநாள் வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடாதென்பது பழையகால சம்பிரதாயம்)

## கன்னிக் கால் ஊன்றல்

இதே நாள் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிக்கால் ஊன்ற வேண்டும். அதற்கு இப்போது முள்முருங்கை மரத்தில் ஒரு தடியை வெட்டி அதன்மேல் நுனியில் 5 மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிறால் கட்டி, இடையில் ஒரு மஞ்சள் பூசிய வெள்ளைத் துணியில் ஒரு செப்புக்காசு முடிந்து கட்டிவிட வேண்டும். பெரியவர் ஒருவர் அத்தடியை நிலத்தில் ஊன்றியதும், அதற்கு தேங்காய் உடைத்து சாம்பிராணி, கற்பூரம் காட்ட வேண்டும். அதனடியில் நவதானியத்தோடு பவளம் அல்லது நவமணிகளும் இட்டு நீர், பால் ஊற்றி (3 சுமங்கலிப் பெண்கள்) மரத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்த வேண்டும். இது நன்கு வளர வேண்டுமென்று நினைத்து கும்பத்தண்ணீரை ஊற்றலாம்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தூபதீபம் காட்டி பந்தல்காலை ஊன்றுவார்கள். பந்தல் காலைத் தொடர்ந்து பந்தல் அமைக்கும் வேலை தொடரும். மணமகன் வீட்டில் ஊன்றிய பின் பெண்வீட்டுக்கும் சென்று இதேபோல் செய்ய வேண்டும்.

முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளக் கூடாது என்பர். (பந்தல்கால் ஊன்றுபவருக்கு தட்சணை கொடுக்க வேண்டும்.)

## முளைப்பாலிகை போடல்

பெண் வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண்சட்டிகளில் மண்பரப்பி நீர் ஊற்றவும். பாலில் ஊறவைத்த நவதானியங்களை 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி நீரும் பாலும் தெளிக்க வேண்டும் (3 முறை) இவற்றை சாமி அறைக்குள் வைத்து திருமணத்தன்று மணவறைக்குக் கொண்டு போக வேண்டும். அநேகமாக பொன்னுருக்கலன்று செய்வார்கள். (இதை 3 நாட்களுக்கு முன்னாவது செய்தால் திருமணத்தன்று நவதானியம் வளர்ந்து இருக்கும்.)

முளைப்பாலிகை இடுவதன் நோக்கம் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டுப் பல்கிப்பெருகி வாழ வேண்டும் என்பதே. "விரித்த பாலிகை முளைக்கும் நிரையும்" என்கிறது சிலப்பதிகாரம். இந்தப் பாலிகையானது திருமணத்திற்குப் பின் நதியிலே சேர்த்து விடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதானியம் – நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உழுந்து, கடலை என்பனவாம்.

## பந்தல் அமைத்தல்

முகடுடைய பந்தல் அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பந்தலின் உள்பகுதியில் மேலுக்கு துணிகளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும் திருமணச் சடங்கு நடக்கும் பொழுது பந்தலின் மேலிருந்து தூசி அழுக்குப் பொருட்கள் , பல்லி போன்றவை விழுந்து விடாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலை கமுகு, வாழை, தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.


வாழைமரம் ஒருமுறைதான் குலைபோடும் அதுபோல் எமது வாழ்விலும் திருமணம் ஒருமுறைதான் என்பதை உணர்த்துகிறது. பாக்குக் கொத்துக் கொத்தாகக் காய்ப்பதால் இது தம்பதிகள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. வாழையும் தென்னையும் 'கற்பகத்தரு' இவை அழியாப் பயிர்களாகும். தென்னை நூறாண்டு வாழக் கூடியது. வாழை 'வாழையடி வாழையாக' வளர்வது தேங்காயும் வாழைப்பழமும் இறைவழிபாட்டில் முக்கியமாகிறது. தம்பதிகள் நிலைத்து நின்று அனைவருக்கும் பயன்படக் கூடியவாறு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.



திருமணம் வசதிக்கேற்ப பெண்வீட்டிலோ, கோயிலிலோ அல்லது வேறு மண்டபத்திலோ வைக்கலாம். அப்படி வேறு மண்டபத்தில் வைப்பதானால் இருவரது வீட்டு வாசல்களிலும் மண்டப வாயில்களிலும் மாவிலை, தோரணம், வாழை மரங்களால் அலங்கரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழைமரம் கட்டுவதன் நோக்கம் வாழையடி வாழையாக வாழைமரம் தழைத்து வளருவது போல, நமது சந்ததியும் பெருக வேண்டும் என்பதாகும். மாவிலை தோரணங்கள் மங்கள முறையாகக் கட்ட வேண்டும். வாசலில் நிறைகுடம் வைக்க வேண்டும். வசதிக்கேற்ப வீடுகளையும் மண்டபத்தையும் அலங்கரிக்கலாம். மண்டபத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டே மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படும். மணவறையின் முன்பு சுவாமி அம்பாள் கும்பங்கள், சந்திரகும்பம், விநாயக பூஜை, பஞ்ச கௌவ்விய பூசைக்கென ஒரு கும்பம், அக்கினி கிரியைக்குரிய பாத்திரம், அம்மி, மஞ்சள்நீர் உள்ள பாத்திரம் ஆகியவை வைக்கப்படும்.

1. விநாயகர்
2. ஓமகுண்டம்
3. அரசாணி
8. சந்திர கும்பம்
9. அம்மி
10. 7 ஈசானமூலை – சுவாமி அம்பாள்
11 அக்கினி மூலை – நவக்கிரக கும்பங்கள்
12 மஞ்சள் நீர்ப்பாத்திரம் – மோதிரம் போட்டெடுத்தல்

அரசாணியைச் சுற்றி 4 விளக்குகள் 4 நிறைகுடங்கள் வைக்கப்படும். (4, 5, 6, 7) சந்திர கும்பத்திற்கு முன்பாக முளைப்பாலிகை சட்டிகள் வைக்கப்படும்.

குருக்கள் தன் முன்பாக புண்ணியதானத்திற் குரியவற்றை வைத்து அதன் பக்கத்தில் மஞ்சள் பிள்ளையாரும், ஒரு கிண்ணத்தில் பஞ்சகவ்வியமும் வைத்திருப்பார். அரசாணி மரமும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதன் இருபக்கமும் ஒரு பக்கம் பாலிகைச் சட்டியும், நடுவில் அம்மியும், அதன்பின்பு சிவன் பார்வதி கும்பங்களும், மறுபக்கம் நவக்கிரக கும்பங்களும், ஆக முன்பாக அரசாணிப் பானையும், நான்கு பக்கமும் நான்கு விளக்குகளும் அரசாணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தைச் சுற்றி நான்கு கும்பங்களும் வைத்துக் கல்யாண மண்டபம் மேல் கூறியபடி நிறுவப்பட்டிருக்கும்.

## மணமகன் அழைப்பு



திருமணத்தன்று மணமகனை கிழக்கு முகமாக ஒரு பலகையில் இருத்தி அவரின் கைகளில், வெற்றிலையைச் சுருட்டி அதற்குள் சில்லறைக் காசு வைத்துக் கொடுக்க வேண்டும். அவருக்கு முன்னால் நிறைகுடம், குத்து விளக்கு, தாம்பூலம் வைக்க வேண்டும். 3,5,7 என்ற எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் அறுகும் காசும் பாலும் கொண்ட கலவையை மணமகனின் தலையில் 3 முறை வைக்க வேண்டும். மணமகனின் தலையில் ஒரு வெள்ளைத் துண்டை விரித்து அதன்மேல் பாலையிடலாம். முதல் பால் வைக்கும் போது வடக்கு முகமாயிருந்து தாய் மாமன் தேங்காய் உடைக்க வேண்டும். பால் வைத்ததும் மணமகன் போய் குளித்து விட்டு வரவேண்டும். பெண்வீட்டாரும் இதில் கலந்து கொள்வார்கள். மணமகன் சாமி அறையில் சாமி கும்பிட்டு கற்பூரம் காட்டி, தாய் தந்தையாரை விழுந்து வணங்க வேண்டும். பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கு வரும்போது ஒரு தட்டில் வாழைப்பழம், ஒரு தட்டில் பலகாரம், இன்னொரு தட்டில் பூ எல்லாமாக 3 தட்டுக்களுடன் வரவேண்டும். எல்லோருக்கும் விருந்தோம்பல் நடைபெறும்.

## கடுக்கன் பூணல்

முன்னாளில் கடுக்கன்பூணல் என்ற சடங்கும் நடைபெற்றது. இப்போது அது அருகி விட்டது.

மணமகனை கிழக்குமுகமாக அலங்கரிக்கப்பட்ட இடத்தில் இருத்தி விநாயகர் வழிபாடு செய்து தேங்காய் உடைத்து மணமகனுக்கு கடுக்கன் பூட்டு வைபவத்தைச் செய்யலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தலைப்பாகை வைத்தல்


மணமகன் கிழக்கு நோக்கி நிற்க ஒரு பெரியாரைக் கொண்டு தலைப்பாகை வைக்க வேண்டும். உத்தரியம் அணிவிக்க வேண்டும். உத்தரியம் இடும்போது இடத்தோளின் மேலாக வந்து வலப்பக்கத்து இடுப்பளவில் கட்ட வேண்டும் (அந்தணர் பூணூல் அணிவது போல்) அங்கு அவருக்கு ஒரு பூமாலையும் அணிவிப்பர். தோழனுக்கும் இதேபோல் உடை உடுத்தி தலைப்பாகையும் உத்தரியமும் இட்டு மணமகனோடு அழைத்து வருவர். தோழன் மணமகனின் இடப்பக்கமாக நிற்பார்.

## மணமகன் புறப்படுதல்



வீட்டை விட்டுப் புறப்படுமுன் வாசலில் இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளையோடு தோழி (மாப்பிள்ளையின் திருமணமான சகோதரி, அல்லது அவர்களின் உறவுமுறையான திருமணமான பெண் தோழியானவள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணச் சடங்கில் முக்கிய பங்கு வகிப்பதால் நடைமுறைகளை நன்கு தெரிந்த சுமங்கலிப் பெண்ணையே அமர்த்த வேண்டும்) தோழன் (பெண்ணின் சகோதரன் அல்லது அவர்களின் உறவு முறையிலுள்ள ஒரு ஆண் அநேகமாக திருமணமாகாதவராக இருக்க வேண்டும்) ஆகியோருடன் உற்றார் உறவினர் மண மண்டபத்திற்குச் செல்வர். செல்லும்போது தோழி கூறைத்தட்டும் வேறு இரு பெண்கள் 3 தேங்காய் வைத்த தட்டமும், 3 அல்லது 5 பலகாரங்கள் கொண்ட ஒரு தட்டமும் எல்லாமாக 3 அல்லது 5 தட்டங்கள் கொண்டு போக வேண்டும். அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் செல்வார்கள்.

## பலகாரத் தட்டம்


அரியதரம், அச்சுப்பலகாரம், பயற்றம் உருண்டை, வெள்ரொட்டி, சிற்றுண்டி போன்றவை.

## தேங்காய்த் தட்டம்

3 முடியுள்ள தேங்காய்களுக்கு சீவி மஞ்சள் பூசி வைக்க வேண்டும்

## கூறைத் தட்டம்

ஒரு பெரிய தட்டில் நெல் அல்லது பச்சையரிசி பரப்பி அதன்மேல் கூறைச்சேலை, சட்டை, வெற்றிலை 5, முழுப்பாக்கு 3, கஸ்தூரி மஞ்சள் 1, குங்குமம் (டப்பி) 1, தேசிக்காய் 1 , வாழைப்பழச் சீப்பு 1, கொண்டைமாலை, அலங்காரப் பொருட்கள் முதலிய சாதனங்கள் சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசனைத்திரவியம், சவர்க்காரம் முதலியன), தாலிக் கொடியோடு, மெட்டி 1 சோடி, ஆகியன வைக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் புறப்படுதல்

பெண் வீட்டில் பெண்ணுக்கும் அதேபோல், அறுகு, காசு, பால் தலையில் வைத்து நீராட்டி (ருது சாந்தி செய்யாத பெண்ணாகில் அன்று அல்லது முந்தைய நாளில் ருது சாந்தி செய்தல் வேண்டும்) மணப்பெண் போல் அலங்கரித்து மணமண்டபத்திற்கு அழைத்துச் செல்லல் வேண்டும். இங்கும் மாப்பிள்ளை வீட்டார் 3 தட்டங்களோடு வந்து விருந்தோம்பி பெண்ணை அழைத்துச் செல்வார்கள். பெண் வீட்டை விட்டு புறப்படுமுன் ஆரத்தி எடுக்கப்படும். பெண் மணமண்டபத்திற்கு மணமகன் வருவதற்கு முன்னதாகச் செல்ல வேண்டும். மணப்பெண்ணோடு ஒரு தட்டில் கோயிலில் அர்ச்சனை செய்யத் தேவையான பொருட்களை அடுக்கி எடுத்துச் செல்ல வேண்டும். மண்டபத்தில் பெண் அவருக்கென்று கொடுக்கப்பட்ட அறையில் இருக்க வேண்டும்.

*அர்ச்சனைக்குரிய பொருட்கள் : வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், ஊதுபத்தி, கற்பூரம், பூக்கள்*

## மாப்பிள்ளை அழைப்பு

மாப்பிள்ளை மணமண்டபத்திற்கு வந்தவுடன் அவரை பெண் வீட்டார் மேளதாளத்தோடு வரவேற்பர். அங்கு தோழன் மாப்பிள்ளையின் காலைக் கழுவிவிடுவார். அதற்கு உபகாரமாக மாப்பிள்ளை தோழனுக்கு மோதிரம் ஒன்றை அணிவிப்பார். பின் பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளைக்கு மாலை சூட்டி வரவேற்பார். இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பர். பின் தோழன் கைகோர்த்து வலமாக மணவறைக்கு அழைத்துச் செல்வார். ( கும்பத்திற்கு வலது பக்கம்) (Clockwise)

மணமகன் மணவறைக்கு வந்தவுடன் தொடங்கும் திருமணச்சடங்கு முடியும் வரை புரோகிதரின் தலைமையில் நடைபெறும்.


கிழக்கு நோக்கியிருக்கும் மணவறையில் தோழன் மணமகனுக்கு இடப்பக்கத்தில் அமருவார். மணவறையில் நெல் பரவி அதன் மேல் கம்பளம் விரித்து மணமகனை இருத்துவது தான் மரபு. கிரியை செய்யும் குருக்கள் மணவறையின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியிருப்பார். மணமகனுக்கு திருநீறு கொடுத்து பவித்திரம் கொடுத்து வலக்கை மோதிரவிரலில் அணியச் சொல்வார். பின் சங்கற்பம் செய்து புண்ணியவாசனை பூஜை, விநாயகர் பூஜை, பஞ்சகௌவிய பூஜை ஆகியவற்றை மந்திர உச்சாடனத்துடன் செய்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்திரம் வலதுகை மோதிர விரலில் அணிய வேண்டும். இந்தச் சடங்கு வைபவம் முடியும் வரை ஒரு குற்றமும் வராமலிருக்கவும் மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றும் காக்கவும் பவித்திரம் அணிவிக்கப்படுகின்றது. பஞ்சகௌவியத்தை அவ்விடத்தில் சுற்றிக் தெளித்து அதனைப் பருகும்படி மணமகனுக்குக் கொடுப்பார். இதனால் அந்தவிடம் சுத்தமாகுவதோடு மணமகனின் அகமும் புறமும் சுத்தியடையும் என்பதாலும் இவை செய்யப்படுகிறது. இதனை புண்ணியாகவாசனம் என்பர்.

## அரசாணிக்கால்

முற்காலத்தில் திருமண வைபவங்களுக்கு அரசனுக்கும் அழைப்பிதழ் அனுப்புவார்கள். அரசனுக்கும் எல்லாத் திருமணங் களுக்கும் செல்ல முடியாத நிலை இருக்கும். எனவே அவர் தனது ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆனைக்கோல் மருவி அரசாணிக்கால் ஆகிவிட்டது.



இன்று பதிவுத் திருமணம் போல் அன்று அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அரவது ஆனைக்கோல் வந்துவிட்டால் அத்திருமணம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. இதுவே இன்று திருமணப் பந்தலில் முள்முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்குப் பட்டுச்சாத்தி அலங்கரித்து வைப்பர்.

## அங்குரார்ப்பணம்

வித்திடுதல் என்று அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிலிடல் என்பது. சந்திர கும்பத்தைப் பூசித்து அதற்கு முன்பாக இருக்கும் மண் சட்டியில் 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்களைக் கொண்டு நவதானியம் இட்டு தண்ணீர் தெளித்து புஷ்பம் சாத்தி பூசை செய்வது. இதன் அர்த்தம் நவதானியம் செழித்து வளர்வது போல் இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காக இப்பூஜை செய்யப்படுகிறது. அப் பெண்களுக்கு வெற்றிலையில் பழம், பூ வைத்து உபசாரம் செய்தனுப்புவார்கள். அதன்பின் கற்பூரம் காட்டப்படும்.

(முன்பே பாலிகை போட்டிருந்தால் தண்ணீர் மட்டும் தெளித்தால் போதுமானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்சாபந்தனம் (காப்புக்கட்டல்)

தொடங்கிய கருமம் நிறைவுபெறும் வரை எந்தவித தீட்டுக்களோ, இடையூறுகளோ, துக்கங்களோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதிச் செய்யப்படுவது (காலமிருத்து, அவமிருத்து போன்ற அபாயங்களிலிருந்து காப்பாற்றவும், சர்வரோகமும் அணுகாமலும், பீடை, பிணி அணுகாமலும் இருக்க வேண்டி விவாகச் சடங்கு இனிதே நடைபெறவும் கட்டப்படும் நூல் காப்புக்கட்டுதல் ஆகும்.)

இதற்கு ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், காப்பு நூல் முதலியவற்றை வைத்து பூசித்து மாப்பிள்ளையின் வலது மணிக்கட்டில் காப்புக் கட்டுவார்கள். காப்புக் கட்டும்போது மாப்பிள்ளை வீட்டார் ஒரு தேங்காய் உடைப்பார்கள். பின்னர் குருக்கள் சிவன் பார்வதி பூசை முதலியவற்றை மந்திர உச்சாடனத்துடன் செய்வார். (பின்னர் அக்கினி மூட்டப்பட்டு அதற்குரிய பூசை வழிபாடுகள் நடைபெறும்) முகூர்த்ததோஷம், லக்கினதோஷம் போன்ற தோஷங்கள் நீங்கும் பொருட்டும் இந்தத் திருமணத்தின் போது நல்லருள் புரிய வேண்டுமென நவக்கிரக தேவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார். அதன்பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலு பக்கங்களிலுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார்.

## மணமகளை அழைத்தல்

மணமகளை (பட்டாடை அணிந்து, அணிகலன்கள் பூண்டு முகத்தை மெல்லிய முகத்திரையால் மறைத்த வண்ணம்) தோழிகள், மணமகளின் பெற்றோர் மற்றும் உறவினர் புடைசூழ மணமேடைக்கு அழைத்துவருவர். மணமகனுக்கு வலப்பக்கத்தில் பெண்ணை அமரச் செய்வர் மணமகனுக்குச் செய்யப்பட்ட அத்தனை பூசைகளும் இவருக்கும் செய்யப்படும். பவித்திரம் இடது கைமோதிர விரலில் அணிவித்து ரட்சாபந்தனம் இடக்கை மணிக்கட்டில் கட்டப்படும். பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப்பார். பின்னர் இருவரினதும் பெற்றோர்களை அழைத்து மணமகளின் பெற்றோர்கள் பெண்ணின் வலப்பக்கத்திலும் மணமகனின் பெற்றோர் மணமகனின் இடப்பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். இவர்களுக்கும் குருக்கள், பவித்திரம் விபூதி கொடுத்து சங்கல்பம் செய்வித்து இரு வழியிலும், பிதுர்தோஷம் நீங்கவும் இரண்டு (நாந்தி தானம்) தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து பிதிரரின் ஆசியைப் பெறச் செய்வார். பின் கன்னிகாதானக் கிரியைகளை ஆரம்பிப்பார்.

## கன்னிகாதானம்



மணமகளை அவரின் பெற்றோர் தாரைவார்த்துக் கொடுப்பதை கன்னிகா தானம் என்பர். மணமக்களின் பெற்றோர் இருபகுதியினரும் சங்கற்பம் செய்து பெண்ணின் பெற்றோர் மணமகனின் பெற்றோர்க்கும் மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். பின் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தங்கக்காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்றை கையில் கொடுத்து பெண்ணின் தந்தை இடதுகை கீழாகவும் வலதுகை மேலாகவும் சேர்த்துப் பிடித்துக் குருக்கள் மணமக்களின் மூன்று தலைமுறைப் பெயர்களையும் மணமக்களின் பெயர்களையும் உரிய மந்திரத்துடன் 3 முறைகள் சொல்லி இரு வம்சம் தழைக்கவும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய 4 பயன்களையும் பெற வேண்டியும் எனது மகளைக் கன்னிகாதானம் செய்து தருகிறேன். எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வார். மணமகனின் சம்மதம் பெற்றவுடன்



மணமகளின் தாயார் நீர்விட்டு தாரை வார்க்க தந்தையார் மணமகளின் கைகளை மணமகனின் கரங்களில் ஒப்படைப்பார். அப்போது மங்கள வாத்தியம் முழங்க, பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, மணமகன் பெண்ணை தானம் எடுப்பார். தொடர்ந்து மணமகன் கொண்டுவந்த தாலியோடு கூடிய கூறைத் தட்டத்தை விதிப்படி பூசித்து, ஆசீர்வதித்து அக்கினியாற் சுத்தி செய்தபின் அச்சபையிலுள்ள பெரியோர் களிடம் காட்டி நல்லாசி பெறப்படும். பின் மணமகன் மணமகளிடம் கூறையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பார். மணமகளும் தோழியுடன் சென்று கூறையை உடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இதற்கிடையில் குருக்கள் மாங்கல்யத்தை எடுத்து சுத்தி செய்து மந்திரம் சொல்லி சந்தனம், குங்குமம் சாத்தி தீபம் காட்டி சம்பாதஹோமம் செய்து பூசை செய்வார்.
(சம்பாதஹோமம் – சிருவத்தில் நெய் எடுத்து ஆகுதி செய்து மிகுதி நெய்யைத் தாலியில் விடுதல்)

மணவறையைச் சுற்றி நிற்பவர்களுக்கு அட்சதை மலர்கள் கொடுக்கப்படும்.

## தாலிகட்டுதல்

கூறை உடுத்தி வந்த மணமகள் மீண்டும் மணமகனின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கி அமர்வார். குறித்த சுபமுகூர்த்தத்தில் மணமகன் எழுந்து மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று இறைவனைத் தியானித்து குருக்கள் ஆசிர்வதித்துக் கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களால் பற்றி கெட்டிமேளம் முழங்க, வேதியர் வேதம் ஒத, மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, பெரியோர் அட்சதை மலர்கள் தூவ, ஒரு பெண் பின்னால் தீபம் பிடிக்க மணமகன் மேற்கு திசை நோக்கித் திரும்பிப் பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார். அப்போது சொல்லப்படும் மந்திரம்.

*"மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவனஹேதுநா//*
*கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜிவசரதசதம்"//*

'ஓ! பாக்கியவதியே' யான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகிறேன். நீயும் நூறாண்டு வாழ்வாயாக என்று குருக்கள் கூறும் மந்திரத்தை மனதில் கொண்டு தாலி முடிச்சில் திருநீறு இட்டு தனது இடத்தில் இருக்க வேண்டும். மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிட வேண்டும்.

தாலி – தாலியில் சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியின் திருவுருவம் அமைத்தல் நல்லது. கொடியும் தாலியும் அதனருகில்கோத்திருக்கும் இரு தங்க நாணயங்களும் சேர்ந்து (9, 11...) என்ற ஒற்றை எண் வரக் கூடிய அளவு பவுணில் செய்ய வேண்டும். தாலிக்கொடியில் சேர்க்கப் படும் தங்க நாணயம் ஆங்கில நாணயமாக இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. அந்த நாணயத்தில் கடவுளின் உருவங்களும் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை மாற்றுதல்

மணமகள் எழுந்து வடக்கு நோக்கி இறைவனைத் தியானித்து மணமகன் கழுத்தில் மாலை சூட்டுவாள். மணமகன் மணமகளைத் தன் இடப்பக்கத்தில் அமரச்செய்து மாலை சூட்டுவான். மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒரு மனமாகி இல்வாழ்க்கையை ஆரம்பித்தல். மூன்று முறை மாலை மாற்ற வேண்டும்.

தொடர்ந்து கொண்டு வந்த மங்கலப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன்மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.

## பால்பழம் கொடுத்தல்

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப்பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறை கொடுப்பார். நாயகன் நாயகி உணவு கொள்ளல் மறைவில் செய்ய வேண்டுமென்பதால் திரை ஒன்று முன்னால் பிடிக்கப்படும். முதன்முதலில் தம்பதிகளுக்குக் கொடுக்கும் இனிப்புப் பதார்த்தமாகையால் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தவே இச்சடங்கு.

## கோதரிசனம்

இல்லறவாழ்வு தொடங்கும் தம்பதியர் வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐஸ்வரியங்களையும் வேண்டி பசுவை இலட்சுமிதேவியாக வணங்குவர். பசுவைக் கிழக்கு முகமாக நிறுத்திச் சந்தனம், குங்குமம், புஷ்பம் சாத்தித் தீபாராதனை செய்து வணங்குவர். பசுவின் உடலெங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசிர்வாதமும் இதன்மூலம் கிடைக்கும். அரிசி, காய்கறி, தட்சிணை வைத்துத் தானம் வழங்க வேண்டும்.

## பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)

தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணம் செய்யப்படுகிறது. பாணிக்கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள். 'நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும்கூட ஒருவரை விட்டொருவர் பிரியாதிருப்போம் என்று உன் கையைப் பிடிக்கிறேன்' என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும். ஆணின் வலக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும். பின்னர் ஏழடி எடுத்துவைத்து அம்மி மிதித்து அக்கினியை வலம் வருவார்கள். வலம் வரும்போது தோழனும் தோழியும் சேர்ந்து வருவர். பஞ்ச பூதங்களின் சாட்சியாக கையைப் பிடிப்பதாக ஒருகருத்து. மணப்பெண்ணால் ஐம்புலன்களால் செய்யப்படும் செயல்கள் கணவனுக்கு மட்டுமே உரியவை. கன்னியின் கையை வரன்கிரகிப்பது என்பது பொருள்



## ஏழடி நடத்தல்

பெண்ணின் வலது காலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும்.

(1) உனக்கு வாழ்க்கையில் உணவு குறைவில்லாமல் அளிப்பதற்கு இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.

(2) உடல் வலிமை கிடைக்க இறைவன் பின் தொடரட்டும்

(3) விரதத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு உன்னை இறைவன் பின் தொடர்ந்து வரட்டும்.

(4) சுகமும் மனச்சாந்தியும் கிடைக்க இறைவன் உன்னைப் பின் தொடரட்டும்.

(5) பசுக்கள் முதலான பிராணிகள் விருத்தியடைய பின் தொடர்ந்து வரட்டும்.

(6) சகல சௌபாக்கியங்களும் கிடைக்க பின் தொடர்ந்து வரட்டும்.

(7) உன் வாழ்க்கையில் இடம்பெறும் சுபகாரியங்கள், ஹோமங்கள் குறையின்றி நிறைவேற இறைவன் உன்னை பின் தொடர்ந்து வரட்டும்.



ஏழடிகள் நடந்த நாமிருவரும் சினேகிதரானோம். இருவரும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டுவோம். இன்பதுன்பங்களைச் சேர்ந்தே அனுபவிப்போம். 'என்னுடன் கூடவா' எனும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும். இதற்கு "ஸப்த பதி" என்று பெயர்.

## அம்மி மிதித்தல்

பெண்ணின் வலதுகாலை (அதாவது எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக் கடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். இந்தக் கல்லைப் போல் நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக்கொள். இது பெண்ணுக்குக் கற்பையும் ஆணுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகிறது. கல் எப்படி எதையும் தாங்குமோ அதுபோல் வாழ்க்கையிலும் இன்பதுன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்று உணர்த்துகிறது.

தொடர்ந்து அக்கினியை வலம் வந்து ஓம குண்டத்தில் நெற்பொரியும் ஓமப் பொருட்களையும் இடுவார்கள். திரும்பவும் இரண்டாம் முறை அக்கினியை வலம் வரும் போது இடக்காலை அம்மியில் வைத்து மெட்டி அணிவிக்கப்படும். திருமணமான பெண் அவளைப் பார்க்கும் இன்னொரு ஆடவன் அவள் திருமணமானவள் என்பதை உணர்த்த மெட்டி அணிவிக்கப்படுகிறது.

## கணையாழி எடுத்தல்

மூன்றாம் முறை அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## அருந்ததி பார்த்தல்

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் நடைபெறும். இருவரையும் கூட்டிக்கொண்டு மண்டபத்தின் வடக்கு வாசலுக்கு வந்து வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களுக்குப் பூஜை செய்து அருந்ததியைக் காண்பிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக மின்னுவேன்” என்று ஆணையிடு வதாகும். சப்தரிஷிகள் கிருத்திகை எனப் பெயர் கொண்ட தங்கள் மனைவி களுக்குள்ளே முதலானவளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ அப்படி மற்ற ஆறு கிருத்திகைகளும் அருந்ததியைப் போலிருக்கச் செய்கின்றனர். இந்த அருந்ததியை



தரிசனம் செய்வதால் என்னுடைய மனைவி எட்டாமவளாக வளர்ச்சி பெறட்டும் என்பதேயாகும். இந்த நட்சத்திரத்தைக் காட்டுவது நல்ல வாழ்க்கையும் வழத்தையும் பெறுவதற்கேயாகும்.

*அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை. வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்ட நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததி இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.*

அருந்ததியோடு சேர்த்து துருவ நட்சத்திரத்தையும் காட்டுவார்கள். துருவ நட்சத்திரம் விண்ணில் ஒரு நிலையான இருப்பிடத்தை உடையவராகவும் மற்ற விண்மீன்கள் நிலைத்திருப்பதற்கும் காரணமாகவும் கட்டுத்தறியாகவும் இருப்பதால் எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவீராக என்று தரிசிப்பதாகும். இவர்கள் எம் வாழ்க்கையில் ஒரு வழிகாட்டியாக அமைகிறார்கள். துணைவனைப்போல் மணமகனுக்கு ஸ்திரத்தன்மையும் அருந்ததியைப் போல் மணமகளுக்குப் பதிவிரதாதன்மையும் இருத்தல் வேண்டும்.

## பொரியிடுதல்

அக்கினியை மூன்று முறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் வலம் வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்கத் தோழன் நெற்பொரியைக் குருக்களிடம் இருந்து பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் மணமகளின் கையில் கொடுத்து மணமகளின் கைகளை தன் கைகளால் தாங்கி ஓமகுண்டத்தில் இடுவார்கள். “அக்கினி பகவானே சகல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்'' என வேண்டிக் கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல் பொரியாக மலர்வதுபோல் நம்வாழ்வும் மலரவேண்டும் என்பதே தத்துவம்.

மூன்றாம் முறை சுற்றி வந்தவுடன் பூர்ணாகுதிக்குரிய பொருட்களை தட்டத்தில் வைத்து குருக்கள் மணமக்களுக்குக் கொடுக்க இருவரும் சேர்ந்து குண்டத்தில் சொரிதல் வேண்டும்.

அக்கினி பகவானிடம் சேர்க்கும் சகல திரவியங்களும் அக்கினி பகவான் அந்த அந்தத் தெய்வங்களிடம் ஒப்படைத்து விடுவார் என்பதை வேதங்கள் கூறுகின்றன. ஆகவே அக்கினியில் ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு செய்யும் சடங்கு குறைவின்றி செய்து அவர்களுக்குப் பரிபூரண பலன் வேண்டி அனுப்ப வேண்டும் என்று பிரார்த்தித்து செய்வதே ஓமம்.

அதன்பின் தீபாராதனை செய்து ஓமத்திலிருந்து எடுக்கப்பட்ட ரட்சயை (கரிப்பொட்டு) மணமக்களுக்குத் திலகமிட்டு விபூதி சந்தனம் கொடுத்து ஆசி வழங்குவார் குருக்கள்.

## ஆசீர்வாதம்

மணமக்களை கிழக்கு முகமாக நிற்க வைத்துக் குருக்கள் பிரார்த்தனை செய்து மந்திரத்துடன் ஆசீர்வாதம் சொல்லி மணமக்களுக்கு சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர்ந்து மணமகனின் பெற்றோர். மணமகளின் பெற்றோர் சபையோர் ஆசீர்வதிப்பர்.



## அட்சதை

முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல், மஞ்சள்மா கலந்த கலவையே அறுகரிசி என்று சொல்வார்கள். பெரியோர் இரண்டு கைகளாலும் அறுகரிசி எடுத்து "ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறு பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தி உச்சியில் 3 முறை இடவேண்டும். மணமகனுக்கு 3 முறையும் மணமகளுக்கு 3 முறையும் தனித்தனியே இடவேண்டும். உறவினர்களும் நண்பர்களும் மணமக்களுக்கு அன்பளிப்பு வழங்கி மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவு

மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து பவித்திரங்களை கழற்றி அவற்றுடன் பெற்றாரின் பவித்திரங்களையும் வெற்றிலையில் வைத்து குருக்களின் தட்சணையும் சேர்த்துக் குருக்களிடம் கொடுக்க வேண்டும். குருக்களுக்கு அரிசி, காய்கறி தானம் வழங்கப்படும்.

## ஆரத்தி

இரு தரப்பிலுமிருந்து ஒரு பெண்ணாக இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். தம்பதிகளுக்கு தீயசக்தியினால் தீமை ஏற்படாமலும் கண்திருஷ்டி நீங்கும் பொருட்டும் இவை செய்யப்படுகின்றன.

விருந்துபசாரமும் நடைபெறும். மணமக்கள் இருவரும் அர்ச்சனை தட்டோடு ஆலயம் சென்று வணங்கி அர்ச்சனை செய்து மணமகள் இல்லம் செல்வர். அங்கு வாசலில் ஆரத்தி எடுத்து வலது காலை முதலில் வைத்து வீட்டுக்குள் செல்வர். முதலில் பூசை அறைக்குள் சென்று வணங்கிய பின் பால் அருந்தக் கொடுப்பார்கள்.

## பூதாக்கலம்

மணமக்கள் ஒரே இலையில் மணமகள் உணவு பரிமாறி மணமகனுக்கு முதலில் தன் கையால் உணவூட்டிய பின் மணமகன் மணமகளுக்கு உணவூட்ட வேண்டும்.

பின் மணமகன் மணமகளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அங்கும் ஆரத்தி எடுத்து உள்செல்வர். வலுது கால் எடுத்து உட் சென்று பூசை அறை சென்று வணங்கி பெற்றோரின் காலிலும் விழுந்து வணங்குவர்.

### *சில தத்துவங்கள்*

- தாலிகட்டிய பின் மணமகன் மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிடுவார். இது அவள் தன் கணவனுக்கே உரியவள் என்பதை எடுத்துக் காட்டவே. அத்தோடு அவ்விடத்தில்தான் மகாலட்சுமியும் வாசம் செய்கிறாள்.
- மாங்கல்யம் சூட்டும்போது கெட்டிமேளம் கொட்டுவது சபையில் உள்ளோர் யாராவது தும்முதல், அபசகுன வார்த்தைகள் பேசுதல் போன்றவை மணமக்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மஞ்சள் கயிற்றில் தாலி கட்டும்போது மூன்று முடிச்சுப் போடுவார்கள். இதற்கு ஒரு விளக்கம்.

| | | |
|---|---|---|
| முதலாவது முடிச்சு | – | கணவனுக்குக் கட்டுப்பட்டவள் அல்லது பிறந்தவீட்டுக்கு |
| இரண்டாவது முடிச்சு | – | தாய்தந்தையருக்கு கட்டுப்பட்டவள் அல்லது புகுந்த வீட்டுக்கு |
| மூன்றாவது முடிச்சு | – | தெய்வத்திற்குப் பயந்தவள் |

தாலி கட்டும் போது தூவப்படும் அட்சதை மணமக்களை தீய சக்திகளிடமிருந்து காப்பதற்கும் வளமான வாழ்க்கை அமைவதற்கும் ஆசீர்வதிப்பதாகும். தாலி கட்டும் போது கைவிளக்கு ஏந்தி நிற்பது, ஏனென்றால் தாலி கட்டியதற்கு விளக்கு ஏந்தியவர் ஒரு சான்றாவார். இன்னொரு விளக்கம் சகுனத் தடைகள் ஏற்படாமலிருக்க.

★ *திருமணத்தின் போது மணப்பெண் முகத்திரை அணிவது ஏன்?*

முக்காலத்தில் மணமகள் தாலி கழுத்தில் ஏறும் வரை மணமகனைப் பார்ப்பதில்லை.ஆகவே முகத்திரை அணிந்து மணவறைக்கு அழைத்து வந்தார்கள். அத்தோடு கண்திருஷ்டிகளிலிருந்தும் விமர்சனங்களிலிருந்தும் விடுவிப்பதும் ஒரு காரணமாகும். தாலி ஏறியதும் முகத்திரையை அகற்றி நான் இப்போது "இவரின் மனைவியாகிவிட்டேன்" என்று சபையோருக்குத் தன் முகத்தைக் காட்டுகிறாள்.

## அட்சதை

அட்சதை என்றால் குத்துப்படாததும், பழுதற்றதும் என்று பொருள்படும். பழுதுபடாத பச்சை அரிசியைப் போல் வாழ்க்கையும் பழுதுபடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆசி வழங்கும்போது பெரியவர்கள் அதைத் தெளிக்கிறார்கள். (நுனி முறியாத முழு அரிசியாக இருக்க வேண்டும்.)

நெல்லிலிருந்து பிரித்தெடுத்த முளையுள்ள அரிசியுடன் மஞ்சள் பொடி, பன்னீர், மலர் இதழ்கள் ஆகியவற்றைக் கலந்து அட்சதை தூவுவதே முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரத்தி

ஒரு தட்டில் 3 வாழைப்பழத் துண்டுகளை வைத்து அதன் நடுவே திரியைச் செருக வேண்டும். இலகுமுறை ஒரு நெருப்புக்குச்சியில் பச்சைச்சுற்றி நெய்யில் தோய்த்து வாழைப்பழத்தின் நடுவே குத்துவதாகும். தட்டில் திருஷ்டி கழிப்பதற்காக மஞ்சளும் சுண்ணாம்பும் சிறிது நீர் விட்டுக் கலந்து வைக்கவும். இக்கலவை சிவப்பு நிறமாக மாறிவரும். அவசரத்திற்குக் குங்குமமம் பாவிக்கலாம். ( வெளிநாடுகளில் இருப்பவர்கள் சுண்ணாம்புக்குப் பதில் அப்பச் சோடா (சோடியம் பைகாபனேற்) பாவிக்கலாம்)

ஆரத்தி எடுக்கும்போது யாருக்குத் திருஷ்டி கழிக்கிறோமோ அவரை நிற்க வைத்து ( கிழக்கு முகமாக அல்லது வடக்கு பார்க்க நிற்க வேண்டும்) அவரை இறைவனாக நினைத்து இறைவனுக்கு நாம் எப்படிக் கற்பூரம் காட்டுகிறோமோ அதேபோல் ஆரத்தித் தட்டைச் சுற்ற வேண்டும் (வலம் சுழியாக)

மணமக்களுக்கு எடுக்கும் போது மணமகன் பக்கத்தில் மேலேழும்பி மணமகள் பக்கமாக கீழிறங்க வேண்டும். 3 முறை செய்ய வேண்டும். கீழே 3 தரம் ஆட்டி பின் மேலெழும்பிச் சுற்ற வேண்டும்.

## திருமணத்தில் அறுகரிசி இடும் முறை

எமது இந்துசமய விளக்கப்படி அறுகரிசியை (அட்சதை) பெரியோர்கள் இரு கைகளிலும் எடுத்து மணமக்களின் சிரசில் தூவிப்பின் இரு தோள்களிலும் இடுப்பு, முழந்தாள் என்று மேலிருந்து கீழே வர வாழ்த்த வேண்டும் (3 முறை). அல்லத சிரசில் மட்டும் 3 முறை தூவி ஆசீர்வதிக்கலாம்.

நாங்கள் மணமக்களை தெய்வமாகக் கருதுவதால் தெய்வத்திற்குப் பாதத்திலிருந்து சிரசிற்குச் செல்ல வேண்டும் என்று சொல்வார்கள். மணமக்களை மானிடராகக் கருதினால் சிரசிலிருந்து பாதத்திற்கு வரவேண்டும் என்றும் சொல்வார்கள். இவ்விரண்டு விதமான வருணனைகளையும் எமது இலக்கியங்களில் காணலாம். பாதாதி கேசமா? கேசாதி பாதமா? இவை வர்ணனைகளே அன்றி அட்ச்சதை தூவுவதற்கல்ல. தெய்வத்திற்கு நாம் செய்வது பாத பூஜை பூ சொரிவதல்ல. அத்தோடு மணமக்களை பெரியோர்களே அட்சதை தூவி ஆசீர்வதிப்பவர்கள். ஆகவே சிரசில் இருந்து தான் வரவேண்டும். மீனாட்சி சுந்தரேசர் கல்யாணத்தில் தேவர்கள் வானிலிருந்து மலர்தூவி ஆசீர்வதித்து வாழ்த்துவதாகப் புராணம் சொல்கின்றது. ஆகவே அரிசி மேலிருந்து கீழே வருவது தான் சாலப்பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காலிலிருந்து தலையை நோக்கிச் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியையிலும், பிதுர்க் கடமையின் போதுமே செய்யப்படுகின்றது. பிரிந்த உயிர் பூலோகத்திலிருந்து மேல்நோக்கி விண்ணுலகம் செல்வதாக எடுத்துக் காட்டவே காலிலிருந்து தலையை நோக்கி கிரியைகள் செய்யப்படுகின்றன.)

## கௌரீ கல்யாண வைபோகமே

திருமணத் திகதி முற்றாகியதும் கவனிக்க வேண்டியவை

1) ஆண், பெண் இருவரின் ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமண திகதியும், பொன்னுருக்கல் திகதியும் நிச்சயிக்கப்பட வேண்டும்.
2) திருமண மண்டபம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
3) புரோகிதரை ஒழுங்கு செய்ய வேண்டும்.
4) நாதஸ்வரம், மேளம் ஒழுங்கு செய்ய வேண்டும்.
5) மணப்பெண்ணை அலங்கரிக்க உரியவரை நியமிக்கவும்.
6) மணவறை, மாலை, திருத்தொங்கல், வாழைமரம் கட்ட பூக்காரனை நியமிக்க வேண்டும்.
7) கோலம் போட ஒழுங்கு செய்ய வேண்டும்.
8) விருந்தினர்களின் எண்ணிக்கைப் பிரகாரம் உணவு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
9) படம், வீடியோ ஒழுங்கு செய்ய வேண்டும்.
10) திருமண அழைப்பிதழ் அச்சடித்து வினியோகித்தல்

*இன்று திருமணங்களின் போது மணமக்களை வாழ்த்துங்கள் என தட்டில் வைக்கப்பட்டுள்ள பூக்களை சபையிலுள்ளவர்கள் கையில் கொடுத்து தாலிகட்டும் சந்தர்ப்பத்தில் வாழ்த்துமாறு கூறுகின்றனர். சபையோர் தாம் அமர்ந்துள்ள இடங்களிலிருந்தபடியே பூக்களை எறிகின்றனர். இது பெரும்பாலும் அவர்களுக்கு முன்னாலுள்ளவர்களின் தலையிலேயே விழுகி றது. இதைத் தவிர்ப்பதற்கு மணமகளுக்குரிய தாலி, கூறை போன்ற மங்கலப் பொருட்களை சபையோரின் ஆசீர்வாதத்திற்கு எடுத்துச் செல்கையில்! கூடவே அச்சதையும் எடுத்துச் சென்றால், இந்த மங்கலப் பொருட்களின் மேல் சபையோர் அச்சதையும் பூக்களையும் தூவி தமது வாழ்த்துக்களை கூறலாம்.*

*(சுகி சிவம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பலகாரங்கள் செய்முறை

*சிற்றுண்டி* 1 சுண்டு பயறு வறுத்துக் குற்றி மாவாக்கவும். சீனி ½ றாத்தல்,

¼ தேக்கரண்டி ஏலக்காய்த்தூள். இவற்றை கலந்து வைக்கவும். ( இது உள்ளீடு)

*செய்முறை*

1 சுண்டு அரிசிமா, 1 தேங்காய் துருவி எடுத்த பாலுடன்(1cup) தேவையான அளவு உப்பு சேர்த்து கொதிக்க விட்டு அதை மாவில் போட்டு சிறிது இறுக்கமான பதத்தில் குழைக்கவும். இம்மாவை சிறு சிறு உருண்டைகளாக எடுத்து கிண்ணம் போல் செய்து உள்ளீடு உள்ளே வைத்து பாதியாக மடித்து (கொழுக்கட்டையைப்போல்) விளிம்பை ஒட்டிப் பொரிக்கவும்.



மோதகம்

கொழுக்கணட்டை செய்வது போல் செய்து வெளிமாவைக் கிண்ணமாக செய்து உள்ளீட்டை வைத்து மோதக வடிவில் பிடிக்க வேண்டும்.

அச்சுப்பலகாரம் தேவையான பொருள்கள்

1 சுண்டு வறுத்த அரிசிமா, ½ சுண்டு வறுத்த உழுந்து மா ,
½ தே.கரண்டி உப்பு, 2 தேக்கரண்டி எள் (தோல் நீக்கியது)

*செய்முறை*

எல்லாவற்றையும் கலந்து தேங்காய்ப்பாலைக் (1 –1½) கப் காய்ச்சி அளவாக விட்டு இறுக்கமாக நன்றாகக் குழைக்கவும். பின் அச்சு உரலில் போட்டு ஒரு எண்ணெய் தடவிய வாழையிலையில் அல்லது பொலிதீன் உறையில் பிழிந்து 2½ அங்குல நீளமாக வெட்டி எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

¼ சுண்டு சீனிக்குள் 1 கப் தண்ணீர் விட்டுப் பாகுகாய்ச்சி அதற்குள் பொரித்த பலகாரத்தைப் போட்டுப் பிரட்டி எடுத்து ஆறின பின் போத்தலில் அடைத்து வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பலகார கலவைக்குள் மிளகு சீரக தூள் சிறிது கலந்து முறுக்கு அச்சில் பிழிந்து முறுக்குச் சுடலாம். இதற்கு சீனி தேவையில்லை.

### சீனி அரியதரம்

*செய்முறை*

1 சுண்டு பச்சை அரிசிமா, தேவையான அளவு உப்பு கலந்து வைக்கவும். ½ இறாத்தல் சீனிக்குள் சிறிது நீர் விட்டு பாகு காய்ச்சி மாவுக்குள் விட்டு குழைத்து வைக்கவும். 2 மணி நேரம் ஊறவிடவும். பின் திரும்ப குழைத்து சிறு உருண்டைகளாக எடுத்து இலையில் தட்டி பொரித்து எடுக்கவும்.

குறிப்பு – *எந்தப் பலகாரத்தையும் இலையில் தட்டிப் போடவும் என்றால் வாழையிலையில் அல்லது பொலிதீன் உறையில் எண்ணெய் தடவி தட்டவும்.*

### பயற்றம் உருண்டை

*செய்முறை*

1 சுண்டு வறுத்த பயற்றம்மா, ¼ தே.கரண்டி ஏலம் தூள், 1 சுண்டு சீனி பாகு காய்ச்சி மூன்றையும் நன்றாகக் குழைக்கவும். விரும்பினால் சிறிது தேங்காய்ப்பூ வறுத்து சேர்க்கலாம். குழைத்த மாவை சிறு உருண்டைகளாகப் பிடித்து மாவில் தோய்த்து பொரிக்க வேண்டும்.

1 சுண்டு பச்சை அரிசி மாவுக்குள் தேங்காய்ப்பால் விட்டு கூழ்ப்பதமாக சிறிது உப்பும் சேர்த்து கரைத்து உருண்டைகளை இதில் தோய்த்து பொரிக்கவும்.

### பருத்தித்துறை வடை

*செய்முறை*

½ சுண்டு உழுந்தை (உடைத்த) 4–6 மணித்தியாலம் ஊறவிட்டு வடிக்கவும். ¾ சுண்டு அவித்த கோதுமை மாவிற்குள் ½ தேக்கரண்டி பெருஞ்சீரகம் , 1 தே. கரண்டி அருவல் நெருவலாய் இடித்த மிளகாய்த் தூள், சிறிது கறிவேப்பிலை, 3 தே.கரண்டி சிறிதாக நறுக்கிய வெங்காயம், தேவையான அளவிற்கு உப்பு, ஊறிய உழுந்தையும் போட்டு சூடான நீரில் (Warm Water) இறுக்கமாகக் குழைக்கவும். பின் சிறு உருண்டைகளாக்கி இலையில் தட்டிப் பொரிக்கவும். ஆறிய பின் போத்தலில் அடைத்து வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனை புகுதல்

## மங்களமான மனை

மனை மங்களமானது, மங்கள மனை எவ்வாறு உருவாகின்றது என்ற வினா வரும். ஆம்! இதற்கான விடை நமது முன்னோர்களே வகுத்து எமக்குத் தந்துள்ளார்கள். நமது முன்னோரின் வழிமுறைகள் தற்காலத்தில் ஒரு சிலரால் கவனிக்காத நிலையையும் காண்கின்றோம். ஆகவே சாஸ்திரம் தெரிந்த நல்ல ஒரு குருவை அணுகி மனை அமைப்பது சம்பந்தமாகத் தகுந்த ஆலோசனை பெற்றபின் வீடு கட்ட ஆரம்பிப்பது நல்லது.

ஒருவர் வீடு கட்ட நிலம் வாங்குகின்றார் எனக் கொள்வோம். அந்த வெற்று நிலம் ஊறல் நிலமாக இருக்கக்கூடாது. செம்மண் என்றால் நன்று. அங்கே மா, பலா, வேம்பு போன்ற மரங்கள் இருப்பின் நல்லது. அரசு, ஆல் கூடாது. கோயிற்பார்வை வீட்டு நிலத்துக்கு நல்லதல்ல. இவை பொதுவாக மனைகட்டத் தொடங்கும் போது நாம் அவதானிக்க வேண்டிய சில அம்சங்களாகும்.

★ *ஒருவர் வெற்று நிலத்தில் வீடுகட்ட ஆரம்பிப்பது எப்படி?*

வெற்று நிலம் எனும் போது அங்கே பலவித சேதங்கள் இருக்கலாம். சாபக்கேடுகள் இருக்கலாம். இதனால் பெரிய வீடுகள் கூட பாழடைந்த நிலையில் உள்ளதைக் காணலாம். ஆகவே, வைரவர் சாந்தி பூஜை முதலில் செய்து நிலக் குற்றத்தை நீக்க வேண்டும். அதன்பின்பு, அத்திவாரம் இடலாம். அத்திவாரத்திற்கு முன் நவதானியங்களை முளைக்கவிடவும். பின் பசுவையும் கன்றையும் அங்கு கொண்டுவந்து கட்டவும்.

★ *அத்திவாரம் இடுவது எவ்வாறு?*

அத்திவாரமிட உரிய நாள் பார்க்க வேண்டும். அத்திவாரம் இட எழுந்திருப்பு நாள் விசேடமானது. (எழுந்திருப்பு நாள் – வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் நாள்.)

வாஸ்து புருஷன் – கிருகதேவதை

*அத்திவாரம் இடும்போது தேவையான பொருட்களாவன.*

நண்டு வளையில் இருக்கும் மண்

யானைத்தந்த மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளைக்கொம்பு மண்
குளத்து மண்
புற்றுமண்
நவரத்தினம்
45 நாட்கள் (ஒரு மண்டலம்) பூஜிக்கப்பட்ட வாஸ்த்து இயந்திரம் முதலானவற்றை ஒரு மரப்பேழையுள் வைத்து தயார் செய்தல் வேண்டும்.

அத்திவாரம் இடமுன் சிவாச்சாரியாரைக் கொண்டு விக்கினேஸ்வர பூஜை செய்தபின் குரு ஆசிபெறல் வேண்டும். பின்னர் கட்டிடத்தைக் கட்டுபவரை அழைத்து, அவருக்கு வஸ்திரம், தட்சிணை கொடுத்து உபசரணை செய்தபின் அத்திவாரம் இடுவதற்கான குழியில் தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, பிள்ளையாரை வழிபட்டு, தாயறையின் நிருதி (தென்மேற்கு) மூலையில் அத்திவாரப் பெட்டியை வைத்து அத்திவாரம் இடலாம். கட்டிடத்தை நிர்மாணிப்பவர் உடனே சீமெந்து கலவையிட்டு, அதனை மூடிவிடுவார். வடகிழக்கிலும் அத்திவாரம் இடலாம்.

### ★ *வீட்டுக்கான நிலை வைப்பது எப்படி?*

ஆம்! வலது காலை முன் வைக்கும் வாசல் அல்லவா? ஆதலால் குருவிடம் சென்று நல்ல நாள் பார்த்தபின், அந்நாளிலே பிள்ளையார் பூஜை வழிபாட்டோடு வீட்டின் கதவுகளுக்கான நிலையை வைக்கலாம். முக்கியமாக வாசல் கதவு நிலை, அடுத்து பூஜை அறையின் நிலை.

### ★ *வீட்டு வளை வைப்பது எப்படி?*

வீட்டின் கீழ்ப்பாகம் நிறைவேறியதால் மேற்பாகம் முக்கியமாகின்றது. வீட்டின் மேற்பாகத்தைத் தாங்குவது வளையாகும். ஆதலால் பிள்ளையார் வழிபாட்டுடன் வளை வைக்கும் வைபவத்தைச் செய்யலாம்.

### ★ *வீடு வேய்தல் எவ்வாறு செய்யப்படும்?*

பழையகால முறையானது ஓலையால் வீட்டை வேய்தல் ஆகும். ஆனால், இப்போது ஓடு போடுகிறார்கள். ஆகவே, ஆகாய நிழல் வீட்டில் படாது வீட்டின் மேற்பாகத்தை மூடும்போது தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி பிள்ளையாரை வழிபட்ட பின்பு ஓடுகளால் வீட்டின் மேற்பாகத்தை மூடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ *வீடு குடிபுகும் முறை யாது?*

வீடு குடிபுகும்பொழுது இல்லத்தலைவன் குருவிடம் (அந்தணர்) சென்று இல்லத் தலைவியின் நட்சத்திரத்திற்கேற்ப நாள் வைப்பது முதற்படியாக அமைதல் வேண்டும்.

வீடு குடிபுகுமுன் வாசலில் பசுமாடுகட்டி தூபம் இட்டு அகன்ற வாயுவையும் விஷ ஐந்துக்களையும் அகற்றல்.

வீட்டைச் சுற்றி மா, பலா, வேம்பு, பூமரங்களை நடல் வேண்டும். வேலையாட்கள், வருவோர், போவோரெனப் பலரும் உலாவிய இடமாகையாலும் இல்லறம் செழிப்பதற்காகவும், அந்நிலத்திலும் புதிதாகக் கட்டப்பட்ட பொருட்களிலுள்ள தோஷங்கள் நீங்குவதற்காகவும் வீடு குடிபுகுமுன் வாஸ்து சாந்தி செய்வர்.

வீடு குடிபுகும் நாளில் முதலில் சிவாச்சாரியார் பிள்ளையார் வழிபாடு, நவக்கிரக வழிபாடுகளுடன், சிவன், அம்மன் வழிபாடு செய்து விசேஷமாக மகாலக்ஷ்மி வழிபாடுகளையும் செய்வார். இவ்வழிபாடு பூஜை, ஹோமம் என்பன கொண்டு நிகழ்வதாகும். அதன்பின்னர் பூஜை செய்த கும்பநீரால் இல்லத்தலைவன், தலைவி ஆகியோர் அபிஷேகம் செய்யப்பட்டு புத்தாடை அணிந்து இறைவழிபாடு செய்வர். பின் முதன்முதலாக அடுப்பு மூட்டி பால்காய்ச்ச ஆயத்தமாவர். பால் புனிதமானது, வெண்மையானது ஆதலால் இல்லத்தலைவி பாலைப் பொங்கி அதனைப் பூஜைக்கு அர்ப்பணிப்பது வழக்கம்.

தமது குல தெய்வக் கோவிலிலோ அல்லது வேறு விசேடம் பெற்ற கோவிலிலோ வீடு குடிபுகுதலுக்கு தேவையான பொருட்களை முதல் நாளே வைத்து (ஆலயத்தில் ஒருநாள் இருப்பது நன்று )அடுத்த நாள் உரிய நேரத்தில் அர்ச்சனைத் தட்டுடன் சென்று பூசை செய்து பின் அனைத்துப் பொருட்களையும் கொண்டு வருதல் வேண்டும். சிறப்பாக பெண்கள் கொண்டு வருவதே முறை. தெய்வப்படங்கள், மங்களப் பொருட்கள் பிரதானமாகக் கண்ணாடி என்பவற்றைக் கோவிலிலிருந்து எடுத்து வரும்போது புதுமனையின் வாசலில் ஒரு பசுவைக் கட்டி வைத்து, அதில் முழித்த பின்பே இவற்றைப் புதிய வீட்டிற்குள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் எடுத்துச் சென்று பூஜை அறையில் வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைகள் இனிது நிறைவேறியதும் சிவாச்சாரியாருக்கு உபசரணைகள் செய்து அவரது ஆசியைப் பெற்று வாழும் முறை இன்னும் இலங்கையில் சைவப் பெருமக்கள் மத்தியில் இருந்து வரும் வழமையாகும்.

ஒரு மனையை அமைக்கும் போது சுவாமி அறையே, சமையல் கூடம், வாழ்வுக்கூடம், ஓய்வெடுக்கும் அறைகள், கழிவறை என்பனவற்றை விட பிரதானமான இடமாகக் கொள்ளப்படுகிறது. எனவே அச்சுவாமி அறையில் அம்மனையின் முக்கிய குடியிருப்பாளராகிய கணவனும் மனைவியும் அன்றே பூஜை செய்து தீபம் காட்டி வழிபடுவர். அதோடு அந்த அறையின் திறவுகோல் பூஜையில் வைக்கப்பட்டு, சிவாச்சாரியாரால் தலைவரிடம் கையளிக்கப்படும். அவர் அதனைப் பெற்று, மனைக்கு உரிய அரசியான பெண்ணிடம் கொடுக்க அவள் அதனைப் பெற்றுக் கொண்டு முதன்முதலாக அந்த அறையைப் பூட்டித்திறப்பாள். சுபமுகூர்த்தத்திலே இது இடம்பெற வேண்டுமென்பதற்காகவே நல்லநாள் பார்த்து குடிமனை புகும் விழா நிகழ்த்தப் பெறும். கொண்டு வந்த முளைக்கும் தேங்காயை வீட்டின் தோட்டத்தில் நடுவர். அன்று இரவு குடிபுகுந்தோர் அவ்வீட்டில் தங்க வேண்டும்.

### வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் மாதங்கள்


| தமிழ்மாதம் | தமிழ்திகதி | நேரம் |
|---|---|---|
| சித்திரை | 10 | 7.00am to 8.30 am |
| வைகாசி | 21 | 9.12am - 10.42 am |
| ஆடி | 11 | 6.48am - 8.18 am |
| ஆவணி | 6 | 2.24pm - 3.54 pm |
| ஐப்பசி1 | 11 | 6.48am - 8.18 am |
| கார்த்திகை | 8 | 10.00am - 11.30 am |
| தை | 12 | 9.12am - 10.42 am |
| மாசி | 22 | 9.12am - 10.42 am |

இந்நாட்களில் கிரகாரம்பம் செய்வது உத்தமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடு குடி போகும் போது கோயிலில் இருந்து கொண்டு செல்லும் பொருட்கள்



1. குத்துவிளக்குகள் 2
2. நிறைகுடம்
3. படங்கள் – பிள்ளையார், லஷ்மி, முருகன் (அவசியம் தேவையான படங்கள்)
4. முகம் பார்க்கும் கண்ணாடி
5. பூமாலையுடன் கூடிய அர்ச்சனைத் தட்டம்
6. படங்களுக்குரிய பட்டுக்கள்
7. நிறைநாழி
8. கற்கண்டு
9. பணப்பெட்டி (இதற்குள் நெல் பரவி, பட்டுத்துணி நாணயம், மஞ்சள் துண்டு வைக்கவும்)
10. 3 செத்தல் தேங்காய்கள் (தோலுடன் உள்ளது)
11. 3 மஞ்சள் பூசிய தேங்காய்கள்
12. ஒரு சிறிய தென்னங்கன்று
13. ஒரு புது மண் சட்டியில் உப்பு
14. புது சட்டியில் முழு மஞ்சள்

**பால்காய்ச்ச தேவையானது**

வாழையிலை, பொங்கல் பாத்திரம், கரண்டி, பால் காய்ச்சும் பாத்திரம், மாவிலை, சந்தனம், குங்குமம், விபூதி, பூமாலை, பூக்கள் , அருகம் புல், பால்

## வாஸ்த்து சாந்தி

வீடு குடிபோகும் போது செய்யும் சாந்திகளில் இதுவும் ஒன்று. அசுத்தமான பூமியை அக்னியால் தகித்து சுத்தமாக்க செய்யும் சாந்தியே வாஸ்து சாந்தியாகும். இச்சாந்தியின் போது விக்னேஸ்வர பூசை, புண்ணியாக வாசனம் செய்து வாஸ்து புருஷனையும்,பிறதேவதைகளைச் பூசித்து அக்கினிகாரியம் செய்வர்.

இதற்கு நீத்துப் பூசணிக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனைப் பூசித்து அக்கினியில் எரிமூளச் செய்து வீடு, வீதி முதலிய இடங்களில் இழுத்து வருவர். பின் இதற்கு கும்பநீர் தெளித்து விடுவர். இச் சாந்தியின் பின் கைகால்களைச் சுத்தம் செய்து தான் மற்றக் கிரியைகளைச் செய்ய வேண்டும்.

## வீடு குடிபோகும் போது செய்யும் ஹோமங்களுக்குரிய பொருட்கள்

அரிசி மா
மஞ்சள் மா
எள்ளு
நவதானியம்
நெற்பொரி
ஓமச்சாமான், மருந்துச் சாமான் (தமிழ் மருந்துக்கடைகளில் கிடைக்கும்)
சமித்துக் கட்டு
நெய்
ஊதுபத்தி, கற்பூரம் ,சாம்பிராணி, அத்தர்
அரிசி
தேங்காய்
மாவிலை, தலைவாழையிலை
அறுகம்புல்
நாயுருவி
தாமரைப்பூ
பூமாலை, பூச்சரம்
வெற்றிலை பாக்கு, பழவகைகள்
எலுமிச்சம்பழம்
நீற்றுப்பூசணி
வைக்கோல் கட்டு
கும்பத்துப் பட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷ்டியப்த பூர்த்தி

## மணி விழா (60வது வயது)

மணி விழா என்பது 60 வயது பூர்த்தியாவதைக் குறிக்கும். ஒரு மனிதனுடைய வாழ்நாளிலே 60 வது வயது மிகவும் விஷேமான தொன்றாகும். 1 மணிக்கு 60 வினாடிகள் போல் தமிழ் சாஸ்திரப்படி வெவ்வேறு பெயர்கொண்ட 60 ஆண்டுகள் நிறைவு பெற்று மறுபடி ஆரம்பிக்கும்போது 60 வயது பூர்த்தியாகின்றது. 60 வது வயதன்று பிறந்த நேரத்தில் கிரகங்கள் எந்தெந்த இடத்தில் இருந்ததோ அதே இடங்களில் கிரகங்கள் திரும்பவும் வருகின்றது. அதனாலேயே இது ஒரு மனிதனின் வாழ்நாளில் மிகவும் சிறப்பானதொரு அம்சமாகும். 60 ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததை "சஷ்டியப்த பூர்த்தி" என்று அழைப்பர்.

60வது வயதான பின் அவர் உலகப்பந்தங்களை விட்டுவிட முயலவேண்டும். இதை நினைவுபடுத்தவே 60வது வயதில் மனைவியை பக்கத்தில் வைத்து பக்குவமாக மீண்டும் ஒரு கல்யாணத்தை நடத்திப் புதிய கடமைகளை விளக்குகிறார்கள் இது இந்தியாவில் வழக்கத்தில் உள்ள ஒரு சடங்கு.

ஒரு மனிதன் தனது வாழ்வின் முதல் 30 ஆண்டுகளும் கல்விக்காகவும், பெயர், புகழுக்காகவும் செலவிடுகிறான். 30 முதல் 50 ஆண்டுவரை மக்களுக்காக வாழ்கிறான். பின்பு தனது 60 வயது தொடக்கம் நீண்ட ஆயுளோடு ஆன்மா முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்நாளை பயன்படுத்த வேண்டும் என்பதே இவ்விழாவின் குறிக்கோள்.

இந்த மணி விழாவை தமிழ் நாட்டில் உள்ள காலசம்ஹார ஸ்தலமாகிய திருக்கடவூரில் ( மார்க்கண்டேயர் சிரஞ்சீவித்துவம் பெற்ற ஸ்தலம் – என்றும் 16) அபிராமிப்பட்டருக்கு தை அமாவாசையை பௌர்ணமியாகக் காட்டிய ஸ்தலத்தில் கொண்டாடுவது சிறப்பானது. அங்கு "மிருத்யுஞ்ச ஹோமம்" செய்து அந்த அபிஷேக நீரை, மணி விழாக் காணும் தம்பதிகளுக்கு நீண்ட ஆயுள் வேண்டி அபிஷேகம் செய்வார்கள். இது சாலச் சிறந்தது.

மனைவியை இழந்தவர்கள் மணி விழாப் போன்ற எந்த சுபகாரியங்களையும் செய்தல் கூடாது. என்று நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவள விழா (75வது வயது) சதாபிஷேகம் (80வது ஆண்டு)

மணி விழாப் போலவே, பவள விழாவும் 75வது வயதில் கொண்டாடப்படுகிறது. 75வது வயதில் மனமுதிர்ச்சி பெற்று ரிஷிகளைப் போல் பக்குவ நிலையை அடைய வேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறது.

இவ்விழாக்களை குல தெய்வத்தின் ஆசியுடன் செய்வதும், அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவதும் சிறப்பானது. ஆயிரம் பிறை கண்டோர் சதாபிஷேக விழா (80 வயது) கொண்டாடுவர். 80வது வயதில் அட்டதிக்குபாலகர்களின் அருளைப் பெற சதாபிஷேகம் செய்கிறார்கள்.

90 வது வயதில் நவக்கிரகங்களின் ஆசி கிடைக்கிறது. 100வது வயதில் ஐம்புலன்களும் கடவுளிடம் இணைகின்றன.

## விழாக்களும் ஆண்டுகளும்

50ம் ஆண்டில் பொன்விழா
60ம் ஆண்டில் மணிவிழா (வைரவிழா)
75 ம் ஆண்டில் பவளவிழா
80 ஆம் ஆண்டில் முத்து விழா
100 ம் ஆண்டில் நூற்றாண்டுவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்கிராந்திக் கிரியை முதல் வருட சிராத்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமயதீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது, திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும். ஆதலால் எல்லோரும் சமயதீட்சை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## உத்கிராந்தக் கிரியை

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது (மரணவேளை) சுற்றத்தவரிடத்தும், பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்து தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியவரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமயதீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணியதலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி, அவர் வாயில் கங்கா தீர்த்தம் விட்டு அவர் தலையைத் தம்மடி மீது வைத்து அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூடவேண்டும். உயிர் நீங்கிய பின் உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு கிடத்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியால் கட்டி விடவும். இதேபோல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டிவிடவும். உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் பிரேதத்திற்குக் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத் துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப்பாகத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து, தேவார திருவாசகங்களை பக்தியுடன் ஓதவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்சமியில் ஒருவர் இறந்தால் இதற்கு தானம் சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும். ( சாந்தி விபரம் பக்கம் 60 ல் உள்ளது.

## சூர்ணோற்சவம் (வீட்டில் நடைபெறும் கிரியை )

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப்பந்தலாயும் மேலே வேயப்படும் ஓலை பச்சை ஓலையாயும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன் வாழை குலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தில் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீக்ஷிதராயின் உருத்திர மூர்த்தியையும் விசேட தீக்ஷிராயின் ஈசுவரமூர்த்தியையும், நிர்வாண தீக்ஷிதர் ஆசாரி அபிடேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியையும், நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத்திற்கெனக் குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையையும் அதற்குக் கிழக்கில் பேரி தாடனத்திற்காகப் பேரியையும் வைக்கவும், உரல், உலக்கைக்கு மாவிலை, கூர்ச்சம், கோடி வஸ்திரம் கட்டி மலர்மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும் மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அபிடேகப் பொருட்கள் இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடைவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து அதில் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும்படி காரணாகமத்தில் உள்ளது. இக்கும்ப சலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண்குடத்தில் சுடலைக்குக் கொண்டு செல்லும் உருத்திர கும்பம் அமைத்தல் வேண்டும். ஸ்நபன கும்பத்திற்கு தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்சகௌவியத்தையும் அமைக்கவும்.

கிரியை செய்வோன் – தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன். கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாதபோது மனைவி, கணவன், மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய் , மருமகள், சகோதரி, சபிண்டன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமானோதகன், சீடன், குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுக்குள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர்கள் தந்தை அல்லது தாய்க்கு கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து நீராடி கோடி வஸ்திரம் இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்தல் வேண்டும். குருகர்த்தாவிற்கு விபூதி கொடுத்து பவித்திரம் அணியச் செய்து உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்து கொள்ளுவார். விநாயக பூஜை புண்ணியாக வாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்சகௌவியத்தை மண்டபத்தில் தெளித்து இடத்தைச் சுத்திசெய்து நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்வர். இங்கு கர்த்தாவிற்குப் பஞ்சகௌவியம் பருக்கொடுக்க கூடாது. கிரியை நடைபெறும் போது திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு அங்க நியாசம், கர நியாசம், சிவோகம் பாவனை செய்து ஸ்நபன கும்ப பூசை முடித்து, அக்கினி காரியம் முடித்து பூரணாகுதி கொடுத்து கிரியையை பூர்த்தி செய்வார். கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூர தீபங்காட்டிய பின் பிரேதத்தை குளிப்பாட்டுதற்காக வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று தலை தெற்காகக் கிடத்தி ஆசௌசிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய் அரப்பு என்பனவற்றை பிரேதத்தின் சிரசில் வைப்பர். பின்பு அரிசிமா, மஞ்சள் மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து பின் பஞ்ச கௌவியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலரது கையை வைத்துப் பிடிக்க வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங்கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர் பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வரவேண்டும். தலை தெற்கில் இருக்கக் கூடியதாகக் குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரில் குழைத்து சத்தியோசாதம், முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி பன்னீரால் கைகழுவி நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீறுப் பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டுப் பூமாலை சாத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்ணம் இடித்தல்

பேரிதாடனம் செய்து அதன்பின் உரலில் பூமிதேவியையும் உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேரு வென்றும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொரு பதமந்திரம் சொல்லி மூன்றுதரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்ச புராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்ப நீர் விட்டுக் குழைத்து கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து , பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர் பிரேதத்தை சூழ நின்று பந்தம் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறையானது. நம்மவர்களின் ஆசாரக் குறைவு கருதி பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸ்நானம் முடித்து அதன்மேல் சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித்தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு யாத்திரா தானமும் நிறைவு செய்து குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், சுற்றத்தவர் ( பெண்கள்) இடப்புறமாகச்சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். ( வாய்க்கரிசி – பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்தது) மனைவி, மக்கள் பிரேதத்தின் காலில் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியை கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறைநாளி (தீபம், நெல் நிறைந்த சேர்) யை பிரேதத்தின் கையால் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றை சேலை முந்தானையில் முடிந்து விடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி தலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும். கீழே உள்ள ஆர்க்கை துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களில் பச்சை மரத்தில் கட்டப்பட்ட பாடையில் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கில் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தால் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்தபின் பிரேதம் மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும். காற்பக்கம் முன்னாகப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்பை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர வாத்தியம், சங்கு ஒலிக்கத் திருமுறைப் பாடல்கள் பாடியவாறு அஸ்திர மந்திரத்துடன் பொரி தூவியவாறு சுடலையை அடைந்து தலை தெற்கே இருக்குமாறு இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய் வெற்றிலை பாக்கு பழம் என்பவற்றை எடுத்து வைத்து தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து தலைப்பாகத்தில் வைத்து அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை முன்பக்கத்திற்கு போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டில் சென்று பவித்திரம் , உபவீதம் என்பவற்றைக் கழற்றிச் சிதையில் போட்டு நமஸ்காரம் செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம் பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும்போது ஒரு சிறிய இரும்புச் சாமான் கொண்டு வர வேண்டும். ஏனெனில் பேய் பிசாசுகள் தொடராமலிருக்க இரும்புக் கத்தியைக் கொண்டு வருவார். சுற்றத்தவரோடும் வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலையை உமிழ்ந்தபின் ஒரு கல்லில் ஏறி உலக்கையைக் கடந்து கைகால் கழுவிப் பின் நீராட வேண்டும். வீட்டையும் சுத்தப்படுத்தி, தூய்மையாய் தயாரித்த சோறு கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால் அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறுபங்கைப் படைத்து உண்பது சில இடங்களில் வழமையில் உள்ளது.

## அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம் ஓமம், தத்துவ ஓமம் செய்யவும். அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து தலைவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி தூபதீபம் காட்டியபின் முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசாதம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை எடுத்து முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாத்திரத்தின் வாயைக் கோடித் துணியால் மூடிக்கட்டவும். மிகுதியாயுள்ள எலும்பு சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்திசெய்து, பண்படுத்தி நவதானியம் விதைத்து பால் தெளித்து, நிலத்தைக் குளிரப்பண்ணி வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்காத உழுந்தில் செய்தது) முதலியவற்றை பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து திருமுறை ஓதி வழிபாடு செய்த பின்னர் எலும்பையும் சாம்பலையும் சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ அல்லது காசிக்கோ கொண்டு செல்லவென்று எடுத்து வைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை கடித்து உலக்கையைக் கடந்து வருதல் வேண்டும்.

*அஸ்தி சஞ்சயன் போது கொண்டு செல்பவை.*

அரிசி மாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும். அதோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவத்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை பூஜைக்குரிய பொருட்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோசமுண்டு. இதற்கு சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூர்ண கும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள், இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது வைக்க வேண்டும். நீற்றுப்பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம்பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டால் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுபநட்சத்திர சுபவாரத்தில் பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம்.

ஆசாரியர் நித்திய கருமம் முடிந்தபின் புண்ணியாகவாசனம் பஞ்சகௌயம் ஸ்தான சுத்தி செய்வார். பின் விக்கினேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்கள் சாத்தி சோடச பூஜை செய்ய வேண்டும். பசு, த்ருணம், சலம் இவைகளை வைத்து இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெங்கலப் பாத்திரமும், சதயத்திற்கு எள்ளும், பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை) உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி ஒருபடி அரிசியும் அரைப்படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன்மேல் கும்பம் வைத்து அதில் லக்ஷ்மியை ஆவாகனஞ் செய்து லக்ஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து கிழக்கு முதல் ஈசானம் வரை திக்குபாலகர்களைக் கலசங்களிற் பூசித்து நைவேத்திய தூபதீபம் கொடுத்து அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி, அதில் லக்ஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து, கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி கும்பநீரால் அபிஷேகம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து ஆசாரியரைப் பூஜை செய்யவும். இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல்வருமாறு:

அந்தியேட்டி அன்று இரவு வீட்டு முற்றத்தில் பந்தலிட்டு வெள்ளை கட்டி மாவிலை தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகி சாந்தியை ஆரம்பிப்பர்.

விக்கினேஸ்வரர் பூஜை புண்ணியாகவாசனம், பஞ்சகௌவிய பூஜை முடித்து முறத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள்மா, கரிமா, இலை (பச்சை) மா, செங்கல் (சிவப்பு) மா இவற்றால் சிதாஸ்தான பதம் வரைந்து இதில் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினால் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து இறந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து, அக்கினி உண்டாக்கி ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முறத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர்நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி, அநுட்டானம் முடித்தபின் சிவன், வர்த்தனி, லக்ஷ்மி, நவக்கிரக தேவர்களையும் பூசித்து கர்த்தாவிற்கு சிவன் வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின், ஐந்து பலமும், எள் எனின் இரண்டுபடியும், வஸ்திரம் எனின் இரண்டும், வெல்லம் ஆயின் பத்து பலமும், வெள்ளி எனின் ஒரு பலமும், தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம். சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்தரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்கு பதினைந்து நாட்கள் தோசமாகும்.

## எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. தேசவழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாளில் செய்வதும் உண்டு. இறந்தவரின் ஆத்மா சாந்தியடையச் செய்யப்படும் ஒரு விசேட தினம் இதுவாகும். இறந்தவர் விரும்பி உண்ட உணவுவகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து தீபம் காட்டி அவ்வளவு வகைகளில் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியை எடுத்து தீப்பந்தம் இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல்வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும்போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்து உணவுவகை தயாரிப்பதில்லை. கொள்ளி வைத்தவர் எட்டுச் செலவு முடிந்து அடுத்தநாளே வீட்டை விட்டு வெளியே செல்லலாம்.

எட்டுச் செலவன்று ஒரு கதிரையில் இறந்தவரின் படத்தை வைத்து (சில இடங்களில் உருவமாகச் செய்வர்) அதற்கு வேட்டி, சால்வை (பெண் என்றால் சேலை உடுத்துவர்) அணிவித்து அவர் பாவித்த முக்கிய பொருட்கள் கண்ணாடி, குடை போன்றவற்றை வைக்கவும். ஒரு விளக்கு எரிய விடவும். படம் வடக்கே அல்லது கிழக்கே பார்க்கலாம். கர்த்தா தெற்கே பார்த்து செய்ய வேண்டும். மூன்று தலைவாழையிலைகளை (நுனி தெற்கே பார்க்க வைக்க வேண்டும்) முன்னுக்கு வைத்து உணவு வகைகள், பானங்கள், பழங்கள், பலகாரங்கள், இளநீரும் படைக்கவும்.

பின் கர்த்தா தீபம் இடம் வலமாகக் (anti clockwise) காட்டி தேவாரம் பாடி உணவு வகைகளை மூடியிருக்கும் இலைகளை அகற்றி வலது கையில் சிறிது நீர் எடுத்து இடப்பக்கமாக உணவு வகைகளுக்கு மேல் தெளித்து அர்ப்பணம் செய்ய வேண்டும்.

படைத்த பொருட்களில் எல்லாவற்றிலும் சிறுபகுதி எடுத்து ஒரு பெட்டிக்குள் வைத்து, இளநீரும், தீவர்த்தியுடன் சென்று முச்சந்தியில் வைத்து விட்டு வருவர். அவர்கள் வெளியே செல்ல பின்னால் ஒருவர் மஞ்சள் நீர் தெளிப்பர். வீட்டுக்குள் வருமுன் கால் கழுவி வர வேண்டும். ஆசௌசம் உள்ளவர்கள் மட்டுமே உண்ணுவார்கள். வெளி நாடுகளில் இருப்பவர் முச்சந்தியில் வைக்க முடியாது. ஆகவே ஆற்றிலோ, கடலிலோ விடலாம்.

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேஷ்டி சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு அவர்கள் பெற்ற தீட்சை வகையில் செய்யப்படும். விசேட, நிர்வாண அந்தியேஷ்டியும் சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமயதீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும் சமய அந்தியேஷ்டியும் பிரேதத்தில் சுடலையில் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி ஆசௌச முடிவில் 31 ஆம் நாளில் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால் அந்தியேஷ்டி (தர்ப்பை சுடல்) நாள் பார்த்துத்தான் செய்ய வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளும், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம் ( காலவிதானம்) ( நந்தை – பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி; பத்ரை – துதியை, ஸப்தமி , துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி) 26 ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் அந்தியேஷ்டி செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு ( கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம்மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பதத்தில் ஓமகுண்டமும், வடமேற்கில் சிவகும்பமும் வடகிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும் தென்மேற்கின் பஞ்சகௌவிய மேடையும் தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிவையில் (மண்டபத்தின் சுற்றுப்புறத்தில்) தசாயுத கும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.

சிதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக நீண்ட சதுரமாக்கி இருபத்தைந்து பதமாகப் பிரித்து நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்கில் நாலுபதத்தில் வெள்ளை மாவும், தென்கிழக்கில் நாலு பதத்தில் சிவப்பு மாவும் வடகிழக்கில் நாலுபதத்தில் கறுப்பு மாவும், வடமேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில் சிவப்பு மாவும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளை மாவும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில் கறுப்புமாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக் கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளால் முறுக்கி இடப்பக்கமாக முடிந்து ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும் பதின்மூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து கர்த்தாவிற்குத் திருநீறு கொடுத்து சங்கற்பம் செய்து கொண்டு சளீகரணம், பூதசுத்தி, மந்திரசுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து சிவோகம் பாவனை முடித்து ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகௌவிய பூசை முடித்து, யாகமண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகௌவியத்தால் (புரொட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தளி ஆசனத்தில் இடவும்.

## சிதாவஸ்து பூஜை

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும் பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில் நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும் விஷ்ணுவையும், தென்கிழக்கு மூலையில் நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும் உருத்திரனையும், வடமேற்கு மூலையில் நான்கு பதத்திலும் வாயு தத்துவத்தையும் மகேஸ்வரனையும், வடகிழக்கு மூலையில்

ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில் குபேரனையும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில் யமனையும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் இந்திரனையும் பூசித்து பழம், தாம்பூலம் நிவேதித்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தனி பூஜை செய்து பாசுபதாஸ்திர பூஜைசெய்து ஞானவாளை ஒப்புக் கொடுத்து யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டிய பின் தசாயுத பூஜை செய்ய வேண்டும். வட கிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் ஆகியவற்றையும் வடகிழக்கில் தெற்கில் உள்ள கும்பத்தில் பத்மத்தையும் தென்மேற்கில் வடக்கே உள்ள கும்பத்தில் சக்கரத்தையும் பூசித்து தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும் வரை பாதுகாக்க வேண்டும் என சிவாஞ்சையைத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் சிவகும்ப பூஜை, சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவாஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு அதன்மேல் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து தகனம் செய்தபின்னர் காடாற்றி புத்தளிகைச்சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய பசி, தாகம், குளிர் (ஆடை இல்லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்னதானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியாருக்கு அரிசி வஸ்திரம் முதலியனவற்றைத் தானமாகக் கொடுக்க வேண்டும். உயர்தீட்சை உடையோருக்கு பிரேத தகனம் செய்த உடன் இத்தானம் கொடுக்கப்படும்.

## துர்மரணப் பிராயச்சித்தம்

இயற்கையாக உயிர்பிரியாது தன் உயிரைத்தானே மாய்த்துக்கொள்ளல் அல்லது வேறு ஏதுக்களால் உயிர்பிரிதல் துர்மரணம் எனப்படும். நீரில், நெருப்பில் பாய்தலால், நஞ்சு உண்டலால், பாம்பு கடித்தலால், ஆயுதங்களால், விலங்குகளால் ஏற்படும் இறப்பு துர்மரணமாகும்.

இது புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என இருவகைப்படும். புத்திபூர்வம் தானேதான் உயிரைப் போக்கிக் கொள்வது. அபுத்திபூர்வம் எதிர்பாராத விதமாக உயிர்பிரிதல். அபுத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண மரணம் போலவே கிரியையும் ஆசௌசமும் கொள்ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந்தால் ஆசௌச முடிவில் பிரதித்தேகத்தில் (புத்தளிகையில்) புனர்தகனம் அந்தியேட்டி செய்ய வேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனம் செய்து ஒருவருடம் அல்லது ஆறு மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மூன்று மாத முடிவில் இறந்த திதியில் தர்ப்பையால் செய்யப்பட்ட பிரதித்தேகத்தில் அந்தியேட்டி செய்து கொள்க. துர்மரணமடைந்தோர் பைசாச ரூபத்தில் அலைவர். ஆதலால் பைசாச புவனத்துக்கு அதிபதியாகிய வைரவருக்குச் சாந்தி செய்த பின்பே அந்தியேட்டி செய்யப்படும்.

## பாஷாணத்தாபனம்

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாண பூஜை எனப்படும். ( பாஷாணம் – கல்) இதில் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம் நீங்கும் பொருட்டும், பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும், ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டிலே பாஷாணத்தாபனம் செய்து விரிவாக பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறைவெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக்கிரியை நிகழ்கிறது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து வேதிகையில் வடக்குமுகமாக ஒரு கும்பம் வைத்து அதில் இறந்தவர் தீட்சைக்கு ஏற்றதுபோல உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவரில் ஏற்றவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலே கல்லினைக் கூர்ச்சங்கட்டி வடக்கு முகமாக வைத்து அதில் இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகனம் பண்ணி எண்ணெய் அரிமா முதலான அபிடேகத் திரவியங்களால் அபிடேகம் செய்து வஸ்திரம் சாத்தி பூஜை தர்ப்பணம் செய்தல் வேண்டும்.தர்ப்பணம் வாசோதகம், திலோதகம், குசோதகம் என மூன்று வகையுண்டு. கோடிச் சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது வாசோதகம். எள்ளுடன் சேர்த்து செய்வது திலோதகம், தர்ப்பையுடன் சேர்த்து செய்வது குசோதகம். தர்ப்பணம் முதல்நாள் மூன்றும், இரண்டாம் நாள் நான்கும் என்ற வகையில் ஆசௌச முடிவுநாள் வரை செய்தல் வேண்டும். முப்பது நாள் ஆசௌசிகள் 525 தர்ப்பணம் செய்தல் வேண்டும். நாளுக்கு ஒன்றாக ஆசௌசக் கணக்கில் பிண்டம் இடல் வேண்டும்.

நவசிராத்தம், ஏகோத்தரவிருத்தி தர்ப்பணம் சங்கிதா சிராத்ததானம் என்பன முறைப்படி செய்தல் வேண்டும். மூன்றுக்கும் தட்சணை கொடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசிராத்தம்

இது முதல் நாட் தொடங்கி ஒற்றித்த நாளில் செய்யப்படுவது. ஒழுக்கமுள்ள அந்தணர் ஒருவரை அழைத்து இறந்தவருடைய ஆன்மா நற்கதியடைய வேண்டித்தானம் கொடுத்து அவரிடம் தான பல தீர்த்தத்தை வாங்கிப் பாஷாணத்தின் மீது விடுவதன் மூலம் இறந்த ஆன்மாவிற்கு பிரேதத்தன்மை நீங்கி நற்கதி கிடைக்கும்.

## சங்கிதா சிராத்தம்

பதினொரு மந்திரங்களில் நேத்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களை பத்து சீலமுள்ள அந்தணர்களில் ஆவாகித்து அவர்களுக்கு செய்யும் தானமாகும். இதனால் தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டானக் குறைகள் நீங்கும். உருத்திரபலி இட்டு அதன்பின் பிரபூத பலி எனப்படும் பேருணவு படைத்து தீபாராதனை தோத்திரம் செய்தல் வேண்டும். இறந்தவர் மேல் பாடப்பட்ட சரமகவி (கல்வெட்டு) பாடி சுற்றத்தவர் பூவும் நீரும் இட்டு அஞ்சலி செலுத்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்த ஆன்மாவைக் கும்பமூர்த்தியிடத்தும் கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி கும்பம், கல், பிண்டம், சாம்பல் முதலியவற்றை வாத்திய ஒலியுடன் சமுத்திரம் முதலான நீர்நிலைகளில் விடுக.

நீர்நிலையிலே மார்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று பிண்டத்தை முதலிலும் கும்பத்தை அடுத்தும் பாஷாணத்தை பின்னருமாக விடவேண்டும். நீராடிவிட்டு வீட்டிற்கு வரவேண்டும்.

வீட்டு வாசலில் வேப்பிலையைத் தின்று துப்பி ஆசமனம் செய்து அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து கால்கை கழுவி வீட்டினுட் செல்லவும். ஊர்களில் பசுவிற்குப் புல் கொடுப்பர்.

இதுவரை கூறிய கிரியைகள் சைவக்குருக்கள் செய்வதும் மேற்பட்ட வீட்டுக்கிரியைகளைப் பிராமணக் குருக்கள்மாரும் செய்வதும் நடைமுறையில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடக்குக் கழிவு

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பத்தோராம் நாட்காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும். சைவ போசனமுடையவர்கள் மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாகவாசனம் செய்து ஆசௌசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி)ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகள் செய்யலாம்.

## வீட்டுக்கிரியை

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் ( நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும். வீட்டுக்கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து விக்கினேஸ்வர பூஜை, தீபதேவி பூஜை, பஞ்சகௌவிய பூஜை, வருண கும்ப பூஜை என்பன நிறைவேறிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கப்படும்.

## அனுஞ்சை

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பனவற்றை கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி இன்ன வருடம், அயனம். ருது, மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுபதினத்திலே இன்னாருக்கு சிரார்த்தம் செய்கிறேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று குருவினிடம் வேண்ட அவர் அதிகாரம் தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையைக் கர்த்தாவிடம் கொடுக்க அதைக் கர்த்தா இடுப்பில் செருகிக் கொள்வார். பின்னர் வலதுகை மோதிர விரலில் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்.

## சூரியபூசை

சிவப்பு நிறப்பூவும் நீரும் கொண்டு மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து சூரியமூர்த்தியை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்தில் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோத்திட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகிறேன் என்று சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

## இடபதானம்

இறந்தவருடைய தான தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாக சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம் (ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் வடிவை எழுதி அதன்மேல் தேங்காய் வைத்து கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோத்திட்டம்

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடிய தாகப்பாவனை செய்து வேட்டி, சால்வை, சந்தனம், பூ என்பனவற்றைச் சாத்தி அரிசி, மரக்கறி என்பனவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்து வாழையிலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து ஒரு பிண்டம் இடவும். *பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம்* ஆகிய எட்டு பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து கைமாறியப் பிண்டம் இடவும். சந்தனம், பூ, சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர் நைவேத்தியம் நிவேதித்து தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தியடையும். இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:

*பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேல்வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம்.*

ஏகோத்திட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து வழி அனுப்பி மஞ்சள்நீர் தெளித்து, இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கைகால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்சகௌவியம் பருகிக் கொள்ளவும்.

## மாசியம்

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும். முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோத்திட்டம் என்ற பெயரில் முதலில் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும் ஊனமாசிகம், ஊனதிரிபட்டச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்.

1. ஊனமாசிகம் – இறந்தநாள் முதல் இருபத்தேழு நாளின்மேல் மூன்று நாட்களுட் செய்யப்படுவது.
2. ஊனதிரிபட்ச மாசிகம் – அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையில் செய்யப்படுவது.
3. ஊனாசாண் மாசிகம் – மேற்கூறப்பட்டபடி நூற்று எழுபதாம் நாள் முதல் நூற்றெண்பதாம் நாட்களுக்கிடையில் செய்யப் படுவது.
4. ஊன ஆப்திக மாசிகம் – அவ்வாறே முந்நூற்றைம்பதாம் நாள் முதல் முந்நூற்றறுபத்தைந்தாம் நாட்களுக்கிடையில் செய்யப்படுவது.

மாதந்தோறும் செய்யும் பதினொரு மாசிகங்களும் இறந்த திதியில் செய்யப்படும். ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளில் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமையிலும் நந்தை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும் கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்கரயோகம் என்பவற்றிலும் ஊனமாசிகம் செய்தல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கரயோகம். இரண்டு கூடுவது துவிபுஷ்கரயோகம்)

பதினைந்து மாசிகங்களும் செய்ததன் மேல் வருடமுடிவில் தான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவில் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும் பின்னரும் உரிய காலத்தில் மாசிகங்களைச் செய்வது சிறந்ததாகும்.

## சோதகும்ப சிராத்தம்

இது நீர் நிரம்பிய பாத்திர (உதகம் –நீர்) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு இறந்த நாள் முதல் வருடம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்படாததால் இப்போது சபிண்டீகரணத்தின்முன் சோதகும்பதானம் நடைபெறும்.

## சபிண்டீகரணம்

பண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த (இறந்தவருக்கு) ருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத்தன்மை நீங்கிப் பிதிர்த்தன்மையும் சிவலோகப் பேறும் அடையும். சபிண்டீகரணத்தின் மேற் செய்யும் சிரார்த்தங்களில் நிமித்தபிண்டம் இன்றி பிதிர்ப்பிண்டம் மூன்று இட்டுச் செய்ய வேண்டும்.

சபிண்டீகரணம் பார்வண விதானம், ஏகோத்திட்ட விதானம் என இருவகைப்படும். பார்வண விதானம் பிதிர்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்படுவது. ஏகோத்திட்ட விதானம் குறித்த பிதிர், தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுவது.

தந்தை, தாய் தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி பார்வண விதனமாய் அமையும். மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி, ஆகியோருக்குச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபிண்டி ஏகோத்திட்டவிதானமாய் அமையும். தந்தை தாயாருக்குச் சபிண்டி செய்யும் போது பேரன், பேத்தி உயிருடன் இருந்தால் ஏகோத்திட்ட விதானமாகச் செய்ய வேண்டும்.

வீட்டுக்கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு. ஏகோத்திட்டம், பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பனவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் செய்ய வேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யத்தக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களைக் கருதி ஆசௌசம் நீங்கிய மறுதினத்தில் செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் (விசுவதேவர்) – நந்திதேவர், மகாகாளர்
2. பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் – கந்தர், சண்டர், கணாதீசர்
3. அதிதி அப்பியாகதர் இருவர் – முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்
4. நிமித்தர் – இறந்தவர் பொருட்டு ஒருவர்.

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காதபோது ஒவ்வொரு பகுதிக்கு ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர்தேவருக்கு ஒருவராக இருவரையேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும்போது புயங்களில் விசுவதேவரையும், தோளுச்சியில் பிதிர்தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து வீட்டினுள் அழைத்து வந்து தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர் அதிதி அப்பியாகதரைக் கிழக்கு முகமாகவும், பிதிர் தேவர்களை வடக்கு முகமாகவும், நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து தேவ பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளும் இட்டு பூசிக்கவும், பூணூலை வலமாக இட்டு விசுவதேவரையும் இடமாக இட்டுப் பிதிர்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும் பின் அதிதி அப்பியாகதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவர்கள் முன்னிலையில் சாணத்தால் மெழுகி வாழையிலையில் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கர்த்தா, தெற்கு நோக்கி இடது முழந்தாள் இடதுகையை ஊன்றியிருந்து வடக்கிலிருந்து தெற்காக முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் பிதிர்வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமித்தர்) குறித்து ஒரு பிண்டமும் இடுக. நிமித்த பிண்டம் சற்று நீண்டதாய் நுனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் அமையும்.

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும், பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துக. பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர், பாயாசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் படைக்கவும். இளநீரை, வெட்டித் திறந்து வைக்கவும். பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும். கர்த்தாவும் உறவினரும் பூவும் நீருமிட்டு வழிபட்டபின் திருமுறைபாடி சரமகவி பாடித் தர்ப்பணம் செய்யவும். நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப்பிண்டத்தில் சேர்க்கவும் இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார். எனக்கொள்ளப்படும். பின்னர் சகல பிதிர்தேவர்களையும் உத்வாசனம் செய்து பிண்டங்களை பசுவிற்குக் கொடுக்கவும் அல்லது சமுத்திரத்தில் விடவும். சோறு கறி, பலகாரம் 3 அல்லது 5, பழங்கள் வெட்டி 3 அல்லது 5, இளநீர் சர்க்கரைப் பொங்கல், வாழைப்பழம், தயிர்.

வடக்குத் தெற்காக மூன்று பாத்திரமும் கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து அவற்றுள் அர்க்கியம் ( நீர், சந்தனம், பால், எள்ளு, தர்ப்பை நுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும் பிதிர்த்தேவரையும் தனிப்பாத்திரத்தில் நிமித்தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர்தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்கு தட்சணை கொடுத்து, ஆசீர்வாதம் பெற்றபின் குரு கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன்மேல் அட்சதையை வைத்து விடுவார். குருவை வீட்டு வாசல் வரை சென்று வழியனுப்பி உறவினர் நண்பருடன் உணவு உண்ணவும்.

## ஆப்திகம் (ஆட்டைத் வசம்)

ஓர் ஆண்டு முடிவிலே செய்யப்படும் சிராா்த்தமாதலால் இது ஆட்டைத்திவசம் எனப்படும். இறந்த திதியில் செய்யும் இந்தச் சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்துச் செய்யும் அபரக்கிரியைகள் நிறைவுறும். முக்கியமாக கவனிக்க வேண்டியது இறந்த திதி, பட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட சிராத்தம்

சிராத்தமென்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள் கொள்ளப்படும். வருடந்தோறும் இறந்த திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்படுவது சிராத்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிராத்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடல் வேண்டும். தாயாருக்கு சிராத்தம் செய்யும்போது தாய், தகப்பனின் தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தவருக்கு ஒரு பிண்டமும் இடல் வேண்டும்.

சிராத்தம் அன்ன சிராத்தம், ஆமசிராத்தம், இரணிய, சிராத்தம், தருப்பண ரூப சிராத்தம் என நாலு வகைப்படும். சிராத்தம் செய்ய மறந்தாலே அல்லது திதி தெரியாமல் இருந்தால் அம்மாதத்தில் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்யலாம் அல்லது புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபட்சத்தில் செய்யலாம். சிராத்தம் செய்ய முடியாவிடில் ஆலயம் சென்று மோட்ச அர்ச்சனை செய்து வழிபடலாம். படையலுக்கு சக்கரைச் சாதம், பழங்கள், சோறுகறி, காய்ச்சிய பால், பலகாரம் வைக்க வேண்டும்.

## அன்ன சிராத்தம்

தம் மரபிலோ அன்றி தம்மில் உயர்ந்த மரபிலோஉள்ள தீட்சை பெற்றவரை அழைத்து நிமித்த தானத்திலிருத்தி குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து அமுது படைத்து, உண்பித்துச் செய்யும் சிராத்தமாகும். இதில் அன்னம், எள், பானீயம் (நீர்) , தயிர், பால், தேன், நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடல் வேண்டும்.

## ஆம சிராத்தம்

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யும் சிராத்தமாகும். இதில் அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ்வெட்டுப் பொருட்களும் அட்டாங்கமெனப்படும்.

## இரணிய சிராத்தம்

அன்னசிராத்தம், ஆமசிராத்தம் செய்ய வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதும் பணத்தை வைத்துச் செய்யப்படுவது இரணிய சிராத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருப்பணரூப சிராத்தம்

இது அமாவாசையில் செய்யப்படுவதாகும்.

அன்னசிரார்த்தத்தில் அன்னபிண்டமும், ஆமசிரார்த்தத்தில் ஆமபிண்டமும் இடல் வேண்டும். அன்னசிரார்த்தத்தில் ஆமபிண்டமும் ஆமசிரார்த்தத்தில் அன்னபிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிரார்த்தம் அபராணதில் செய்தல் வேண்டும். ஆமசிரார்த்தம் சங்கவகாலத்தில் செய்து போசனம் அபராணத்திலும் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | – | சூரிய உதயம் முதல் ஆறுநாழிகை வரை. |
| சங்கவ காலம் | – | அதன்மேல் பன்னிரண்டு நாழிகை வரை. |
| மத்தியானம் | – | அதன்மேல் பதினெட்டு நாழிகை வரை. |
| அபராணம் | – | அதன்மேல் இருபத்திநாலு நாழிகை வரை. |
| சாயான்னம் | – | அதன்மேல் முப்பது நாழிகை வரை. |

சூரிய உதயம் காலை ஆறுமணியாயின்

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | – | காலை 6.00 – 8.24 வரை. |
| சங்கவ காலம் | – | அதன்மேல் – 10.48 வரை. |
| மத்தியானம் | – | அதன்மேல் பகல் 1.12 வரை. |
| அபராணம் | – | அதன்மேல் மாலை 3.36 வரை. |
| சாயான்னம் | – | அதன்மேல் மாலை 6.00 வரை. |

சிவபெருமான் – அபிஷேகத்தாலும், விஷ்ணு – அலங்காரத்தாலும், பிதிர்கள்– தர்ப்பணத்தாலும் மகிழ்வர்.

## சிராத்த வகைகள்

| | | |
|---|---|---|
| நித்திய சிரார்த்தம் | – | நாள்தோறும் பிதிரரைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம். |
| நைமித்திய சிரார்த்தம் | – | தந்தை , தாயார் இறந்த மாதம் திதியில் வருடம் தோறும் விதிப்படி செய்வது. |
| காமிய சிரார்த்தம் | – | அமாவாசை, சூரியகிரகணம், சந்திர கிரகணம், விதிபாதயோகம்,உத்த ராயணம், சித்திரை விஷு மாதப்பிறப்பு, வைகாசி வளர்பிறைத் திருதியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திரயோதசி, மாசி அமா வாசை ஆகிய தினங்களில் புண்ணிய |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தங்களில் நீராடி பிதிர்த்தர்ப்பணம் செய்து அதிதிகள் சுற்றத்தாரோடு போசனம் செய்வது. இது தீர்த்த சிரார்த்தமெனப்படும்.

*விருத்தி சிரார்த்தம்* – இது நாந்தி சிரார்த்தம் என்றும் கூறப்படும். சீமந்தம், சாதக கர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், விரதம், விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம் போன்ற சுபகருமங்களில் பிதிர் தேவர் களைக் குறித்துச் செய்யும் சிரார்த்தம் விருத்தி சிரார்த்தமாகும், பிதிர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டுச் செய்யும் இச்சிரார்த்தம் மங்கள சிரார்த்தம் எனவும் கூறுவர்.

*காயா சிரார்த்தம்* – காயாவில் செய்து பிண்டமிட்டு பிதிர் களைத் திருப்திப்படுத்துவதால் ஏழு கோத்திரத்தில் உள்ள நூற்றியொரு குலமும் விருத்தியாகும். (பிதாவின் குலம் இருபத்து நான்கு, மாதாவின் குலம் இருபது, மனைவி குலம் பதினாறு சகோதரி குலம் பன்னிரண்டு, மகன் குலம் பதினொன்று, பிதாவின் சகோதரி குலம் பத்து, மாதாவின் சகோதரி குலம் எட்டு ஆகக் குலம் நூற்றொன்று)

காசி, காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித்தலம் ஏழிலும் ஏனைய புண்ணியத்தலங்களிலும் சிராத்தம் செய்வது மிகுந்த புண்ணியமாகும்.

## ஆசௌசகாலத்தில் சிரார்த்தம்வரின்

சனன, மரண ஆசௌசத்தில் சிரார்த்த தினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காய் இருக்கும் போது தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால் ஐந்தாம் நாள் சிரார்த்தம் செய்யக்கடவள். சிரார்த்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின் ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்தத்திற்கு ஆகுந்திரவியங்கள்

நெல்லரிசி, கோதுமை, யவம் ( (நெல்), சிறுபயறு, உழுந்து, எள்ளு, சர்க்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், பசுத்தயிர், பசுநெய், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உப்பு, புளி, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கெக்கரிக்காய், வெள்ளரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறுகிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி. (மிளகாய், கத்தரிக்காய் பூசணிக்காய், பயிற்றங்காய் கொடுக்கலாமென சில நூல்கள் கூறுகின்றன.)

## சிராத்தத்திற்கு ஆகாத திரவியங்கள்

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய், அத்திக்காய், முருங்கைக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுரைக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டுநெய்.

## சிராத்தத்திற்கு ஆகும் பத்திர புஷ்பம்

வில்வம், துளசி, அறுகு, சம்பகப்பூ, தாமரைப்பூ, புன்னைப்பூ, முல்லைப்பூ, நந்தியாவட்டைப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர், எட்டிப்பூ.

## ஆகாத புஷ்பம்

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ.

கர்த்தாவும் சிரார்தத்தின் பொருட்டு வரிக்கப்பட்டவரும் சிரார்த்த தினத்திலும் முதற்தினத்திலும் மறுதினத்திலும் சவரஞ் செய்து கொள்ளுதல், மீண்டும் புசித்தல், வழி நடத்தல், பாரஞ்சுமத்தல், கோபம், பொய், காமம், இவைகளைத் தவிர்த்து விரத நியமமுடையவராய் இருத்தல் வேண்டும். விரத நியமம் தப்பிப் புணர்ச்சி முதலியவற்றைச் செய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவர். கர்த்தா இம்மூன்று தினத்திலும் எண்ணெய் தேய்த்து கொள்ளலும் பரான்னம் புசித்தலும், வெற்றிலை பாக்கு உண்ணலும், மருந்து உண்ணலும் ஆகாவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிராா்த்த தினத்தில் வீட்டிலே தயிர் கடைதலும், நெற்குத்தலும், பிச்சை போடலும், எண்ணெய், நெல் முதலிய பொருட்களைக் கொடுத்தல் வாங்குதலும் ஆகாவாம்.

சிரார்த்த தினத்திலே திருக்கோவிலிலே கடவுளுக்குத் தன்னால் இயன்ற மட்டும் அபிஷேகம், பூஜை, திருவிளக்கேற்றுதல் முதலியன செய்தல் வேண்டும். பசுவிற்குப் புல்லுப்போடல் வேண்டும்.

சிரார்த்தம் நடக்கும் போது வேதத்தையும், திருமுறைகளையும், புராண இதிகாசங்களையும், தருமசாத்திரத்தையும் சிரார்த்தம் வாங்குவோருக்குக் கேட்கும்படி படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகப் பிரியமாகும்.

சிரார்த்தத்திலே கண்ணீர் விடுதலும், கோபித்தலும், பொய் சொல்லுதலும், துரிதஞ்செய்தலும், சிந்திய அன்னத்தைக் காலாலே மிதித்தலும், இலையிலே அன்னத்தைத் தூவிப் பரிமாறலும் ஆகாவாம். சிரார்த்தமேற்பவர் நன்று, தீது என்று பேசாது திருப்தியோடு ஏற்றல் வேண்டும்.

சிரார்த்தத்திற்குப் பொருள் இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவைகளையேனும் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரம் செய்து தில தர்ப்பணம் பண்ணிக் (திலம் – எள்ளு) கொண்டு தான் திருப்தியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.

## மாளயம்

மாளயம் என்பது பிதிர் கருமமாகும். இது மஹாளயம் என்றும் பெயர் பெறும். இது ஒரு பொது சிரார்த்த (திவசம்) மாகும்.

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளயபட்சமாகும். பிதிர்களைத் திருப்திப்படுத்தவும் அவர்கள் நற்கதி அடையவும் பிதிர்க்கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத்தானுக்கு உரிய கருமங்களிற் பிதிர்க்கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் (பிதிர் வேள்வி ) ஒன்று.

*'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க நானென்றாங்*
*கைப்புலத்தா றொம்ப றலை'*

என்பது திருக்குறள். பிதிர்களின் உறைவிடம் தென்திசை ஆதலால் தென்புலத்தார் என்று பெயர் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம். சந்திரனும் (அபரபக்கத்தில்) தென்பாகத்திற் பொருந்தி இருக்கிறது. இக்காலம் பிதிர் கருமங்களுக்கு ஏற்றதாகக் கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்தில் அவருக்குச் சிரார்த்தம் (திவசம்) செய்தல் வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசையன்று செய்தல் வேண்டும். அல்லது மாளயபட்சத்திற் செய்து கொள்ளலாம். தெரிந்தோ, தெரியாமலோ சிரார்த்தத்தைச் செய்யாது விட்டவர்கள் மாளயபட்சத்திற் பிதிர்க்கருமம் செய்தல் வேண்டும்.

இந்தப்பட்சம் முழுவதும் பிதிர்க்கருமம் செய்தால் வருடம் முழுவதும் செய்தபலன் கிடைக்கும். பிரதமையில் தன சம்பத்தும், துவிதியையில் பிரஜாலாபமும், திருதியையில் வளர்ச்சி லாபமும், சதுர்த்தசியில் சத்துரநாசமும், பஞ்சமியில் சம்பத்தும், சஷ்டியில் புகழும் சப்தமியில் கணாதிபத்தியமும், அட்டமியில் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீ சம்பத்தும், தசமியில் இஷ்டசித்தியும், ஏகாதசியில் வேதசித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், திரயோதசியில் பசு விருத்தியும், சதுர்த்தசியில் புஷ்டியும், அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். யந்திரங்களால் இறப்போருக்குச் சதுர்த்தசியிற் பிதிர் கருமம் செய்வது சிறந்தது.

இப்பட்சத்தில் வரும் பரணி, அட்டமி கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாதத்தில் எந்த வாரத்திலாவது மகநட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடி வருவது. இது ஒரு புண்ணிய காலமாகும். இக்காலத்திற் செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம்.

பிதிர்கருமங்கள் ஆற்றச் சிறந்த தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன அமைந்துள்ளன. காயாவிற் செய்யப்படும் சிரார்த்தம் மிகவும் விசேடமானதாகும். திரயோதசியில் செய்யும் சிரார்த்தம் காயா சிரார்த்தத்தையொக்கும்.

நாம் அனுப்பும் தபால், காசுக்கட்டளை போன்றவற்றைத் தபாற்கந்தோரில் இருப்பவர்கள் உரியவர்களிடம் கொண்டு சென்று கொடுப்பர். இதுபோலப் பிதிர்க்கருமத்தில் செய்யப்படும் தர்ப்பணம், தானம் முதலியவற்றின் பலன்களை உரியவர்கள் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர். பிதிர்த் தேவதைகள், ஸ்கந்தர், சண்டர், கணதீததர் என்போர் பிதிர்த்தேவதைகளாவர். சமய விசேட, நிர்வாண தீட்சிதருக்கு சாந்தர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவர், ஈசர் என்போர் பிதிர் தேவதைகளாகும். பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்த சொரூபமாகவும், பாட்டனுடைய உயிர் சண்டபதந்தில் சண்ட சொரூபமாகவும் முப்பாட்டனுடைய உயிர் கணாதீதபதத்தில் கணாதீத சொரூபமாகவும் இருக்கும்.

இக்காலத்தில் விரதமிருந்து பிதிர் தர்ப்பணம், தான, தருமம், சாதுக்கள், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கு அமுதளித்தல் போன்றன செய்தல் வேண்டும்.

அபரக்கிரியை யாவும் இடப்புறமாகவும் பாதத்திலிருந்து சிரசுவரை பரியந்தமாகச் செய்ய வேண்டும். கர்த்தா, தெற்கு நோக்கியே கிரியைகள் இறந்தவர்களுக்கு காட்டும் தூபம், தீபம் செய்ய வேண்டும். யாவும் இடப்புறமாகச் செய்ய வேண்டும். தலைவாழையிலையின் நுனி தெற்கே பார்க்க வேண்டும்.



அபரக்கிரியைகளின் போது தோரணங்கள் கட்டப்படும் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணவீட்டில் அபரக் கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

இந்நாளில் கிரியை செய்யும் போது சைவக்குருக்களே இவற்றைக் கொண்டு வருவார்.

| | |
|---|---|
| நெல்லு | குருக்கள் வேட்டி, சால்வை |
| பச்சை அரிசி | கும்பவேட்டி 1 |
| பயறு | முட்டி 2 |
| உழுந்து | சட்டி 2 |
| எள்ளு | செம்பு 13 |
| தேங்காய் | குடம் 1 |
| தேங்காயெண்ணெய் | குத்துவிளக்கு |
| விபூதி | உரல், உலக்கை |
| சந்தனம் | அறுகம்புல்லு |
| குங்குமம் | மாவிலை, வாழையிலை |
| அபிஷேகக் கூட்டு | கோசலம், கோமயம் |
| மஞ்சள் மா | பால், இளநீர் |
| அரிசி மா | மான்தோல் |
| அபிஷேகத்திரவியம் | தட்டம் |
| பன்னீர் | வேட்டி,சால்வை (கிரியை செய்வோருக்கு) |
| நெய் | |
| தேன் | வாழைப்பழம் |
| நல்லெண்ணெய் | எலுமிச்சம்பழம் |
| அரப்பு | பழவகைகள் |
| லவரந்தர் | பாக்கு |
| அத்தர் | வெற்றிலை |
| ஊதுபத்தி | |
| சாம்பிராணி | ( இறந்தவருக்கு) |
| தசாங்கம் | வேட்டி, சால்வை |
| நெற்பொரி | அல்லது |
| நவதானியம் | சேலை, சட்டை |
| கழிநூல் பந்து | கத்தி |
| பஞ்சவர்ண நூல் | தோரணம், கயிறு |
| விளைவு சூடம் | தீப்பெட்டி |
| சமித்துக்கட்டு | |
| பட்டுத்துண்டு | 6m வெள்ளைத்துணி ( கோடி) |

இப்பொருட்களை கிரியை செய்யும் குருக்களும் கொண்டு வருவார். அவரிடம் ஆலோசித்துச் செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டிக் கிரியைக்குத் தேவைப்படும் பொருட்கள்

நெல்லு
பச்சை அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய் 20
கழிநூல் பந்து
பஞ்சவர்ண நூல்
விபூதி
குங்குமம்
சந்தனம்
பன்னீர்
அபிஷேகக் கூட்டு
அபிஷேகத் திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக்கட்டு
ஊதுபத்தி
விளைவுசூடம்
சாம்பிராணி
அரிசி மா
மஞ்சள் மா
நல்லெண்ணெய்
அரப்பு
குருக்கள் வேட்டி சால்வை
கும்ப வேட்டி
வேட்டி
பட்டுத் துண்டு
சிகப்பு பச்சை
பச்சை மா (புல்லாந்தி இலையை
– உலர்த்தி இடித்து எடுப்பது)
சிவப்புமா (செங்கல் தூள்)
கரிமா (கரியில் இடித்து எடுப்பது)
2 தானத்திற்கு அரிசி மரக்கறி
செங்கல் – 1
வைக்கோல் 1 கட்டு
கத்தி
தீப்பெட்டி

வெற்றிலை
பாக்கு
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
பழவகைகள்
அறுகம்புல்லு
பால், தயிர்
கோசலம், கோமயம்
இழநீர்
வாழையிலை
மாவிலை
முட்டி 2
சட்டி 1
உரல், உலக்கை
தேங்காயெண்ணெய்
சில்லறைப் பணம்

செம்பு 12
குடம் 1
குத்துவிளக்கு
தட்டம்
மான்தோல்
பூ, மாலைகள், சரப்பந்து
அமுது
பலகார வகைகள்
1 படி பச்சை அரிசி பொங்கல்
3 படி அரிசியில் சோறு
கறிவகை

தென்னோலைத்தோரணம்
கயிறு
1 m வெள்ளைத்துணி (கோடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட சிரார்த்தத்திற்குத் தேவைப்படும் பொருட்கள்

மாவிலை
அறுகம்புல்
பூக்கள்
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
சக்கரை சிறியது
இஞ்சி 1 துண்டு
கறுப்பு எள்
நல்லெண்ணெய் 1 போத்தல்
தலைவாழையிலை 5
நெய்
தேன்
கற்பூரம்
ஊதுவத்தி
இளநீர்
பால்
தயிர்
தேங்காய் 3
பச்சை அரிசிமா
சிறிது உளுத்தம் மா, மஞ்சள் தூள்
ஐயருக்கு வேட்டி சால்வை
தானத்திற்கு அரிசி, மரக்கறி, உப்பு, புளி, பருப்பு மிளகாய்த்தூள்
அரப்பு
சாம்பிராணி
விபூதி
சந்தணம்
குங்குமம்
நூல்பந்து

வாசலில் நிறைகுடம் குத்துவிளக்கு வைக்க வேண்டும். தர்ப்பணம் செய்யுமிடத்தில் படம் வைத்து மாலை அணிவித்து ஒரு விளக்கு ஏற்றி வைக்கவும். கும்பம் வைக்க ஒரு செம்பு, பச்சை அரிசி, கும்பமாலை, பிண்டத்திற்கு ஒரு மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விளக்கம்

*"சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும்*
*அதன் இன்மை கூறப்பட லானும்"* – ( பிம்ரமசூத்நூரம் 101) –

*"புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை*
*வாய்மையால் காணப்படும்"* – (குறள் 298.)

மூனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரமசூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சம்ஸ்+காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தாமா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. இளைஞர்கள் "நாங்கள் இவற்றைப் 'பரவாய்' செய்வதில்லை; அம்மா குளியாமல் வீட்டுக்குள் விடார்" என்கிறார்கள். முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். 'இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது' என்று–விளக்கம் அளித்துத் திருப்தியடை கிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்'வதே இத்தொகுப்பின் நோக்கம்.

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது, 'எனக்கு ஆசூசம்' என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌகம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுகி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி = அழுக்கு; ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும் தொடக்கை நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால், உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க 1) காலம் 2) ஸ்நானம் (நீராடல்) 3) இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

1) ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேள ஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். நற்காரியங்கள் நடைபெறா. ஊர்த்தொடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம்வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் தொடக்கு நீங்கிவிடும்.

2) இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச்சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும். இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய தொடக்குக்காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்: 1) பிறப்பு, 2) இறப்பு, 3) சுடுதல், 4) பிரேதத்துக்குப் பின்னே செல்லல், 5) காவுதல், 6) அழுதல், 7) ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், 8) கலத்தல், 9) குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை, 10) இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்), இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை. (மயிர்முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் தொடக்கு நான்கு வகையானது: 1) கருப்பச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்; 2) 5 ஆம் 6 ஆம் மாதங்களில் நிகழ்தல்; 3) 7ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் நிகழ்தல்; 4) பத்தாம் மாதத்தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு. முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனை மாதச்சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் தொடக்கு. உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச் சிதைந்தால் 6 நாள் தொடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால், இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது தொடக்குக்காக்கும் நாள் அளவு, பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும், ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் தொடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் தொடக்குப்போம். தொடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5 ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் தொடக்குக் காக்க வேண்டும். 10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத் தொடக்குக் கொள்ளத் தேவையில்லை. இயற்கையான பிறப்பில் 30 நாள் தொடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40 ம் நாள் கொண்ட போகும் வழக்கம் இருந்து வருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் தொடக்குக்காக்க வேண்டும். பிரமசாரிக்குத் தொடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் தொடக்கு. கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.

## இறப்பு

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்முளைக்குமுன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் தொடக்கு. 11 ம் ஆண்டுக்குப் பின் முழுத்தொடக்கு. பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் தொடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் தொடக்குக் காப்பர். பிற ஆத்மா சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்ய வேண்டும். ஒருமாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம்; அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலை முறை வரை தொடக்குக்காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் தொடக்கு.

தானம், வேள்வி, விவாகம் போன்ற சற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள் நாட்டுக்குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும், வரும் தொடக்கு உடனே நீங்கும். ஒரு வரம்கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் தொடக்கு ஏற்பட்டால், தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (எஜமானர்) துணைப்பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிரார்த்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது தொடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

## வீர மரணம்

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன்சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற்போல, குறித்தகாலத்தின் பின்செய்ய வேண்டும் என்ற விதியில்லை)

## துர் மரணம்

இது இருவகை (1) புத்திபூர்வமானது; (2) அபுத்திபூர்வமானது. முதல் வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரியகாலத்தில் செய்யும்போது, மந்திரத்துடன் கிரியை செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் சபிண்டருக்குத் தொடக்கு இல்லை. ஸ+பிண்டர் = தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவுமுறைக்குள் அடங்குவோர்; தன்னையும் சேர்த்து ஏழுதலை முறை (ஆண்வழியில்). பின்னர் ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழித்துக் கிரியை செய்யும்போது ஒருநாள் காக்க வேண்டும். (மூளைப் பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, தொடக்குக் காக்கலாம் என்பர்.) இரண்டாவது வகையான துர்மரணம் இடி, தீ, ஆற்றுப்பெருக்கு, விஷக்கடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

## பொருள்கள் சுத்தி

தொடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் தொடக்கு முடியும்போது நீர்தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். தொடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக்குறித்து எடுத்துவைத்த பொருள்களுக்குக் குற்றமில்லை (தானம், பூசை, முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் தொடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

## கிராம ஆசௌசம்

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் தொடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அநுட்டானம், உண்பனவு போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயச்சித்தம் செய்து கர்மானுட்டானங்களைச் செய்யலாம் இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால், தூரத்தில் பிரேதம் இருந்தால், ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் தொடக்கு இல்லை. எல்லைகணிக்கும் போது( (பூசைக்குரிய) கைமணி அடிக்கும் ஓசைகேட்கும் தூரம் அல்லது) 11 முழம் ஆகிய (விற்) கோல் (நிலஅளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக்கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் தொடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கு இல்லை. பிரேதத்தைத் தொட்டவர் தூக்கியவர், பின்னே சென்றவர்கள் தொடக்கு உடையர்.

தொடக்கு நாட்கள் வைதிகமுறையில் முத்தீவளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல், கணிக்குக) இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்த நாள் எனக் கொள்ளக்கூடாது.)

பிறப்புத் தொடக்குக்கு இடையில் இறப்பவரின், இறப்புக் கணக்கின் பின்னரே தொடக்கு கழியும். இறப்புத் தொடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால், மரணத் தொடக்குடன் அது நீங்கும். ஒரு மரணத் தொடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய தொடக்கு முடிவிலேதான் இரண்டு தொடக்கும் தீங்கும். முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு தொடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு தொடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் தொடக்குக் காக்க. அச்செய்தி – உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி – மூன்று மாதத்துள் கிடைத்தால் மூன்று இராத்திரி தொடக்குக்காக்க. ஒருவருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க. ஒருவர் இறந்த செய்தி தொடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க; உ+ம் அயல்நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20 ஆம் நாள் கிடைத்தால் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க. தொடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் தொடக்கும் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால், 3 நாள் காத்தால் போதும்.

தொடக்கு காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம் (மானஸீகமாயேனும் செய்க) ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூசை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தில் தொடக்குப்பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்ததீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்யவேண்டும். ஆனால், எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர+அர்த்தம்= பிறர், பொருட்டு கோவில் முதலியவற்றில்) செய்யக்கூடாது. ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம். உயர்தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். தொடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக்கூடாது. உருத்திராட்ச மாலை தரிக்கக்கூடாது.

## பூப்பு

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் தொடக்குக் கொள். 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் தொடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.

## மயிர் களைதல்

தொடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. தொடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன்களைதலே சாத்திரசம்மதம். மத்தியானத்துக்குப் பின்மயிர் களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன்கடமை செய்யமுடியாமல், இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

*நன்றி:– ஆசௌச விளக்கம் ஆ. சபாரத்தினம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதித் பூசை பிதிர் பூசை

இது வேதத்தில் வெகுசிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு இன்றி அமையாத சிறந்த ஒரு தருமமாகக் கருதப்பட்டுள்ளது. அந்தத் தருமம் கால வெள்ளத்தில் மறைந்து விட்டது. சூழ்நிலையும் மாறிவிட்டது. விருந்தோம்புதல் என்ற தர்மத்தைச் சிறப்பாகக் கருதிவந்த காலம் ஒன்று இருந்தது. இப்பொழுது அதனைச் செய்தல் எவ்வகையாலும் முடியாது. ஆகவே முன்னோர்கள் அதற்குச் சமமாக ஒருவழி வகுத்துள்ளனர். சோறு சமைத்தவுடன் தினமும் காகத்திற்கும் வைக்க வேண்டும் என்ற நியதியை வகுத்துள்ளனர். இதுவே அதிதி பூசையாகும்; பிதிர் பூசையுமாகும். திவசத்தன்ற காகத்திற்குச் சோறு வைத்தலை இன்றும் காணலாம். மேலும், சனிப் பிரீதியை முன்னிட்டு சனிக்கிழமையில் சோறுபோடும் வழக்கமுண்டு. தினமும் அவ்வாறு செய்து வந்தால் அதிதிபூசை, பிதிர்பூசை, சனிப்பிரீதி யாவும் அடங்கிவிடும். இதனை வாயஸ பலி என்று கூறுவார்கள். ஒருவர் இருவருக்கு தினம் உணவு கொடுக்க எல்லாருக்கும் சக்தி இராது. ஆகவே இந்த தர்மம் செய்வது சிறிய அளவு. அதனால் வரும் பயன் பெரிய அளவு. இதனை வைசுவதேவம் என்று கூறுவார்கள். எல்லாத் தேவர்களையும் குறித்துப் பலி இட்டு அந்தப் பலியுணவைக் காகத்திற்குப் போடுதல் என்ற முறை நூறு வருடங்களுக்கு முன் பெரும்பான்மையாக நடந்து வந்துள்ளது. பஞ்சமும் பற்றாக்குறையும் ஏற்பட்டதும் அது குன்றியது. ஆகவே இந்தத் தர்மம் செய்ய வேண்டியது முக்கியமாகும். கிராமப் பகுதியில் இதனை அனுட்டிக்க ஒருவாறு முடியலாம், நகரங்களில் வசிப்பவர்களுக்கு வசதிக்குறைவு ஏற்படக்கூடும். அவர்களும் சமைப்பதற்கு முன் ஒருபிடி அரிசியை ஒரு பாத்திரத்தில் எடுத்துப் போட்டு மாத முடிவில் அண்மையில் உள்ள ஆலயத்தில் கொடுத்துப் பகவானுக்கு நிவேதிக்க ஏற்பாடு செய்து வந்தால் அதிதி பூசைப் பலன், பிதிர் பூசைப் பலன் கிடைக்கும். முன் காட்டிய வழிதான் செய்ய வேண்டும். காகங்கூட இல்லாத இடமாக இருந்தால் அவர்களுக்கும் இந்தத் தர்மபலன் கிடைப்பதற்குப் பிந்திய முறை சொல்லப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் பின் வரும் பாவ புண்ணியங்கள்

**அ**ரிது அரிது இந்த மானிடப் பிறவி அரிது. பிறந்த அனைவருமே என்றாவது ஒரு நாள் இறப்பது நிச்சயம். பிறப்பதும் உண்மை! இறப்பதும் உண்மைதான். இதை உணரும் ஒருவன் நிச்சயமாக தனக்குரிய தருமங்களை செய்து அறநெறிப்படி வாழ்வானாகில் அந்த அறம் அவனை மறு உலகில் காப்பாற்றும்.

இங்கு அறங்கள் என சொல்லும் போது அவன் பிறந்த குலத்துக்கேற்ற கர்மங்களை முறைப்படி செய்ய வேண்டும். குலங்கள் நான்கு என சொல்லப்படுகிறது. பிரமம், தைத்திரிய, வைசிய, சூத்திரர் என்பவையே அவை. அவர்களில் பிராமணருக்கு ஓதல், ஓதுவித்தல், பேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு கர்மங்கள் உள்ளன. க்ஷைத்திரியருக்கு ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல் என்று ஆறுவகைக் கருமங்கள் உள்ளன. வைசியருக்கு ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்களைக் காத்தல், ஏருழல் என ஆறு கர்மங்கள் உண்டு. சூத்திரருக்கு ஓதல், முன்னவர்க்கு பணியாற்றல், பொருளிட்டல் , உழுதல், பசுக்காத்தல், வேட்டல் முதலிய ஆறு கர்ப்பங்கள் உண்டு. அவரவர் குலமரபுக்குரிய ஒழுக்கப்படி நடப்பதே அவரவர்க்கு பெரிய தவமாகும்.!

பிறவிகள் அனைத்திலும் மானிடப் பிறவி கிடைப்பது அரிதினும் அரிது. அந்த மனிதப் பிறவியே புண்ணியப் பிறவியாகும். பொருள்களைப் பார்ப்பதற்குரிய கண்களும், விஷயங்களைக் கேட்பதற்குரிய காதுகளும், இனிமையை உணர்வதற்கு நாக்கும், வாசனைகளை அறிவதற்குரிய நாசியும், காமவின் பந்துய்ப்பதற்குரிய மெய்யும் (உடம்பும்), நன்மை, தீமைகளை பகுத்து உணர்வதற்கு உணர்வும் இருப்பதால் மானிடப் பிறவியே சிறப்புடையது. இத்தகைய மானிடப் பிறவியை அடைந்து நல்வினைகளைச் செய்து நல் உலகை அடையாமல் தீய செயல்களை புரிந்து உயர்ந்த மானிடப் பிறவியை வீணாக்குபவர்கள் தான் உலகில் பலர் இருக்கிறார்கள். மண் ஆசை, பொன்னாசை, பொருள் ஆசை எனும் மூன்று ஆசைகளால் மயக்கமுற்று மனசாட்சிக்கு மாறுபாடான செயல்களை செய்பவன் இறந்த பிறகு அவன் ஈட்டிய பொருள் அவனோடு செல்லுமோ என்றால் அது கொஞ்சங்கூட செல்லாமல் அவனை விட்டு, விட்டு அவன் வீட்டிலேயே தங்கி விடும். வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை உறவு, வீதி வரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ.. என்ற கண்ணதாசனின் வரிக்கேற்ப ஒருவன் இறந்த பின் உறவினர்களை அவனது உடம்போடு மயானம் வரை சென்று உடனே தம் வீடு மீண்டு விடுவார்கள். இறப்பதற்கு முன்பு அவனவன் செய்த பாவ புண்ணியங்களே மயானத்தையும் தாண்டி அவனவனுடன் செல்வனவாகும். இதனால் இறக்குமுன் அனைத்து தான தர்மங்களையும் செய்து விட வேண்டும்.

தான தர்மம் செய்வதற்கு தகுந்த முறைகள் உள்ளன. ஒருவன் தானம் செய்யும் போது செய்யும் தானம் நல்லதாக இருத்தல் வேண்டும். தானம் வாங்குவோரும் நல்லவராக இருத்தல் வேண்டும். தானம் கொடுக்கப்படும் இடமும் தகுந்த இடமாக இருத்தல் வேண்டும். இவை அனைத்தும் சேரும்போது செய்யும் தானம் ஒரு கோடி பயனைத் தரும். கற்றுணர்ந்த சான்றோருக்குக் கொடுக்கப்படும் தானம் நாளுக்கு நாள் விருத்தியடையும். எந்த மனிதனும் தான் வாழுங் காலத்திலேயே தனக்கான தான தர்மங்களைச் செய்து கொள்வது நல்லது. அவ்வாறு தானஞ் செய்ய விரும்புவோனுக்குப் புத்திரன் இருந்தால் அவனிடம் தான் தனக்காகத் தானஞ் செய்ய விரும்புவதைச் சொல்லி அவனுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகே தானத்தைச் செய்தல் வேண்டும். தந்தை இறந்த பிறகு அவனுடைய புத்திரன் சிரார்தம் செய்வதை விட தந்தை இறக்கும் சமயத்தில் அவன் தன் தந்தையின் அருகிலேயே நெருங்கியிருந்து தான தர்மங்களை செய்வது உத்தமமாகும்.

தானங்களில் சிறந்தது அன்னதானமாகும். அன்னதானம் என்பது தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது. எந்த ஒரு கர்மாவும் அன்னதானம் இல்லாமல் நிறைவு அடைவதில்லை. அன்னதானத்திற்கு மேலானதொரு தானம் என்றும் இருந்ததில்லை. அன்னதானத்திற்கு யோக்கியன், அயோக்கியன், நல்லவன், கெட்டவன் என்ற வித்தியாசமில்லை. கால எல்லையும் இல்லை. அன்னம் மறைந்த முன்னோர்களின் ஆசியை பெறச் செய்கிறது. பித்ருக்களின் தோஷத்தைப் போக்குகின்றது. நமது வம்சம் வாழ பித்ருக்களின் ஆசி தேவை. மறைந்த முன்னோர்களுக்கு அன்னம் வழங்குவதே உயர்ந்த வழிபாடு, அவர்களை திருப்தி செய்ய அன்னதானம் சிறந்த மார்க்கம்.

அன்னதானத்தை அடுத்து திலகதானமும் கோதானமும் சிறப்பான தானங்களாகும். இவ்விரண்டு தானங்களும் மிகக் கொடிய பாவங்களை நசிக்கச். ஆகையால் இவற்றை வேதசாஸ்திரங்களை ஓதியுணர்ந்த உத்தம பிராமணருக்கே வழங்க வேண்டும். மங்கையருக்கும் தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவருக்கும் இவற்றை சாதாரணமாக கொடுக்கலாமே தவிர்ந்த தானமாகக் கொடுக்க முடியாது. கோதானம் செய்யும் போது ஒரு பசுவை ஒருவனுக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். ஒரு பசுவை பலருக்கு தானம் கொடுக்க கூடாது. கோதானம் கொடுத்து அந்தத் தானத்தை வாங்கியவர் அதை விற்று அந்தத் தொகையை பங்கு போட்டுக் கொண்டாலும், பலர் கூடி ஒருவர் ஒரு மாதம் வைத்திருந்து மற்றொருவர் அடுத்தமாதம் வைத்திருந்து அனுபவித்துக் கொள்வது என்று விதித்துக் கொண்டாலும் தானம் கொடுத்தவன் தனது ஏழு தலையினரோடு நரகம் புகுவான். மனத்தூய்மை இல்லாமல் செய்யப்படும் நூறு கோதானங்களுக்கு எத்தனை பயன் உண்டோ அத்தனை பயனும் ஒரு பசுவை நல்லவருக்கு தானஞ் செய்யும் போது கிடைத்து விடும். ஒருவன் இறந்த பிறகு அவனைக் குறித்துச் செய்யப்படும் லட்சம் கோதானங்களுக்கு என்ன பயனோ அத்தனைப் பயனும் அவன் இறக்கும் காலத்தில் செய்யும் ஆயிரங்கோதானத்தாலேயே கிட்டி விடும். நூறு பசுக்களை தானம் செய்வதை விட ஒரு பசுவை துன்புறுத்தாமல் இருப்பது நல்லது. ஒருவன் ஒரு பசுவைக் கொன்று விட்டு நூறு பசுவைக் கொன்று விட்டு நூறு பசுக்களைத் தானம் செய்தாலுங் கூட பசுவைக் கொன்ற பாவமே மேலானதாகும்.

ஒருவன் இறந்த பிறகு அன்னதானம் செய்தால் இறந்து செல்லும் ஜீவன் மார்க்கத்தில் வருந்தாமற் செல்வான். தீபதானம் செய்தால் இருள் வரியில் பிரகாசத்தோடு செல்வான். ஐப்பசி, கார்த்திகை, மாசி ஆகிய மூன்று மாதங்களிலாவது, சதுர்த்தசியிலாவது, பௌர்ணமியிலாவது ஒருவன் இறந்த தினத்திலாவது தீபதானம் செய்வது சிறப்பாகும். ஒருவன் இறந்த நாள் முதல் ஓராண்டு காலம் வரையிலும் தீபதானம் செய்தால் இறந்தவன் மேடு பள்ளம் இல்லாத நல்லதொரு வழியாக யமபுரியைச் சார்ந்து, அவனது குலத்தைச் சேர்ந்தவர்கள் யமபுரியில் இருந்தால் அவர்களையும் நல்லுலகம் சேர்த்து தானும் நற்கதியை அடைவான். தீபதானத்திற்குள்ள மதிப்பு சிறிதல்ல. பிரமாலயத்திலும் , தேவாலயத்திலும் வடக்கு முகமகாகவாவது கிழக்கு முகமாகவாவது தீபம் வைக்க வேண்டும். தீபதானம் செய்பவன் தனக்கு எதிர்முகமாக தீபத்தை சுடர்விட்டெரியச் செய்து கொடுக்க வேண்டும். பூமிதானம் செய்தால் பூமியானது எத்தனை அடிகள் ஆழமாக இருக்கிறதோ அத்தனையாண்டுகள் அந்த ஜீவன் சுவர்க்கலோகத்தில் வசிப்பான். பூமியை தானம் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகு அவாவினால் அந்தத் தானம் கொடுத்த பூமியை அபகரிக்க முயன்றவனும், தானம் கொடுத்த பூமியின் பயனைத் தானம் பெற்றவன் அடையாமல் கொடுத்தவனும், தானம் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் பேரில் ஒருவன் வழக்கிட்டால் தானம் வழங்கியவனுக்கு உதவி செய்தவனும் பிரளயகாலம் வரையில் நரகவாகம் செய்வார்கள்.

ஒருவன் இறந்ததும் குடை, மாரடி, தண்டம், வஸ்திரம், மோதிரம், உதக கும்பம், ஆசனப் பலகை, அன்னம், பூஜைத்திரவியம், பூணூல், தாமரிச் செம்பு, அரிசி ஆகியவற்றை பிராமணருக்கு தானமாகக் கொடுக்க வேண்டும். குடைதானம் செய்தால் ஜீவன் யமபுரியை நோக்கிச் செல்லும் போது குளிர்ந்த நிழல் நிறைந்த மார்க்கமாகச் செய்வான். மாரடி தானம் செய்தால், குதிரைமேல் ஏறிச் செல்வான். அவன் செல்லும் வழியில் முள் முதலியவற்றால் துன்பம் ஏதும் அடையாமல் செய்வான். ஆசனப் பலகையையும், செப்புத்தாலியையும் சுயம்பாகம் பொருளையும் தானஞ் செய்தால் இறந்த பிறகு ஆகாய மார்க்கமாகவே இனிதாகச் செல்வான். அரிசியும், எள்ளும், பதின்மூன்று கடகமும், மோதிரமும், குடையும், விசிறியும், பாதரக்ஷையையும் அவசியமாகச் தானஞ் செய்ய வேண்டும். யானை, குதிரை இவற்றைத் தானஞ் செய்தால் விசேஷமான புண்ணியமாகும். உருமைக் கிடாவைத் தானஞ் செய்யும் போது அதனுடன் ஏராளமான பொருட்களையும் தானஞ் செய்வது மிகவும் சிறப்பாகும். வெற்றிலை, பாக்கு, புஷ்பம் ஆகியவற்றைத் தானஞ் செய்தால் யமதூதர்கள் மகிழ்ச்சியடைந்து ஜீவனை வருந்தச் செய்ய மாட்டார்கள். ஆடைகளைத் தானஞ் செய்தால் யமதுதூதர்கள் ஜீவனின் முன்பு நல்ல உருவத்துடன் தோன்றுவார்கள். 'எள்' என்பது விஷ்ணுவின் வியர்வையிலிருந்து தோன்றியாதகையால் அந்தத் தானியம் மிகவும் பரிசுத்தமானது. அந்த எள் இரு வகைப்படும். கறுப்பு எள், வெள்ளை எள், என்ற இரு வகையில் எந்த நிறமுள்ள எள்ளையேனும் தானங்களோடு சேர்த்துக் கொடுத்தால் அதிகப் பயன் உண்டாகும். அதாவது சிறப்புடையதாக அமையும். சிராா்த்த காலத்தில் கறுப்பு எள்ளை சேர்த்தால், பிதுர்த் தேவர்கள் மிகவும் திருப்தியடைவார்கள்.

மனிதனாகப் பிறந்தவன் என்றாவது ஒரு நாள் இறந்தே தீர வேண்டும் என்பதை உணர்ந்தவன் மேலே சொன்ன தானங்களைத் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டும். தானம் செய்ய வசதி இல்லாவிட்டால் தினமும் ஒரு ரூபாய் என்றாலும் தருமம் செய்ய வேண்டும்.

இறந்தபின் அவர்களுடைய பெயரில் செய்யும் தானத்தை விட, வாழும் காலத்தில் அவன் தானே முன் வந்து தானங்கள் செய்வானாகில் இறந்த பின் அவன் மோட்சபலனை அடைவான் என கருடபுராணம் சிறப்பாகக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அமாவாசை, புண்ணிய தினம் விசேஷ பண்டிகை நாட்களில் காக்கைக்கு மட்டும் அன்னம் படைக்கிறார்கள். தினமும் பூஜை முடித்த பிறகும் காக்கைக்கு அன்னமிடுதல் எல்லார் வீடுகளிலும் உண்டு. இதன் தாத்பர்யம் என்ன?

பறவைகளில் காக்கைக்கு இரை போடுவது மனிதர்களிடம் வாழையடி வாழையாக வந்திருக்கும் ஒரு புனிதச் செயலாகும். காக்கை தவிர, மற்ற பட்சிகள், மிருகங்களுக்கு உணவு அளித்தால் மற்றவற்றை அழைக்காது; தானே சாப்பிட்டு விடும். ஆனால் காகம் கரைந்துண்ணும். ஒரு காகம் மற்ற காகங்களை உணவு உண்ண அழைக்கிறது. காக்கைக்கு உணவு தருவதற்கான பலன்கள், புராண நூல்களில் விசேடமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

★ மறைந்து போனவர்கள் மீண்டும் உலகில் பிறந்து விடுகிறார்கள், பிறகு ஏன் 'பித்ரு (தென் புலத்தாருக்கு) கடன்' செய்கிறார்கள்.

வாழ்ந்த மனிதர்கள் ஆயுள் முடிந்து இறந்து விடுகிறார்கள். மீண்டும் உலகில் பிறவி எடுத்திருந்தாலும், நம்மை வளர்த்து ஆளாக்கியிருப் பதற்காகவே, 'பித்ரு கடன்' செய்யவேண்டும். அவர்கள் எப்பிறவியில் பிறந்திருப்பினும், இன்பமாக இருப்பதற்கு 'பித்ரு கடன்' இன்றியமையாதது.

★ ஒரு மனிதனின் மரணத்திற்குப் பின்பு என்ன நிகழ்கிறது?

ஒரு மனிதனின் வாழ்நாளில் செய்த நல்ல செயலுக்கு, தீய செயலுக்கு ஏற்றவாறு 'மரணத்துக்குப்' பின் பலன் அவனை அடைகிறது – அதாவது மறு பிறப்பில்.

★ தெவசம் கொடுக்க வழியில்லாதவர்கள் அதற்கு மாற்றாக ஏதாவது செய்யலாமா?

பசுமாட்டிற்கு ஆகாரம் வைக்கலாம்.

★ இறந்தவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் படங்களையும் சுவாமி படங்களையும் சேர்த்து மாட்டலாமா?

சுவாமி படங்கள் இருக்கும் வரிசையில் வைக்காமல் வேறு வரிசையில் மாட்டலாம். சுவாமி படங்களுக்குக் கீழ் வரிசையில் அப்படங்களை மாட்டலாம். தனி இடத்தில் உயரமாக மாட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்த திதி

ஒருவருக்குச் சிரார்த்தம் செய்யும் போது அவர் இறந்த தமிழ் மாதம், பட்சம், திதி எது என அறிந்து அத்திதியில் சிரார்த்தம் செய்தல் வேண்டும்.

உதாரணமாக புரட்டாசி மாத பூர்வ (வளர்பிறை) பட்சத்தசமி திதியில் சிரார்த்தம் என்றால் அது நவராத்திரி இறுதி நாள் எனக் கொண்டு சிரார்த்த நிர்ணயம் செய்யக்கூடாது. ஏனெனில் நவராத்திரி இறுதிநாள் சிலவேளையில் ஐப்பசி மாதத்திலும் வரும். இப்படி வரும்போது சிரார்த்தத்திற்கு முதல் மாதம் சிரார்த்த திதியைப் பார்த்து நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். சிலவேளைகளில் உரிய திதி அம்மாதத்தில் அமையாது முதல் மாதத்திலும் அமையலாம். திதியானது பகல் 1 மணி 12 நிமிடத்திற்கும் 3 மணி 36 நிமிடத்திற்கும் இடையில் வியாபித்திருக்குமானால் அன்றே அந்தத் திதியைக் கொள்ள வேண்டும். காலையில் அந்தத் திதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இந்நேரம் அபரான்ன காலம் எனப்படும்.

அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடையிலுள்ள காலத்தைப் பூர்வபட்சம் என்றும் (வளர்பிறை) பௌர்ணமிக்கும் அமாவாசைக்கு மிடையிலுள்ள காலத்தை அபரபட்சம் (தேய்பிறை) என்றும் சொல்வர். திதியானது மாலை 3 1/2 மணிக்குப் பின் ஆரம்பமாகி அடுத்த நாள் மதியம் வரை இருக்குமானால் அடுத்தநாள் செய்யலாம்.

திதியானது தமிழ் மாத ஆரம்பத்திலும் கடைசியிலும் வருமானால் பிந்தின திதியில் செய்ய வேண்டும். பிந்தின திதியில் மாதப்பிறப்பு, கிரகணதோஷம் இருக்குமானால் முந்தின திதியில் செய்ய வேண்டும்.

இரண்டு திதியும் மாதப் பிறப்பாக இருந்தால் பிந்தின திதியில் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியையின் திருமுறைப் பாடல்கள்

## திருநாவுக்கரசர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

1) சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறனடித்தலமே.

2) நடலை வாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற் பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்தூர்முனி பண்டமே.

3) தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார், புத்திரரார் தாத்தா மாரே
வந்தவாரெங்ஙனே போமா றேதோ
மாயமாமிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கென்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிரு விசும்பி லிருக்கலாமே.

4) எண்ணுக்கே னென் சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் திருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுலோ யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும் போ துணர மாட்டேன்.
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாளேனுன்னை
எங்குற்றாயென்ற போதா இங்குற்றேனென் கண்டாயே.

6) இருளாய உள்ளத்து இருளை நீக்கி
இடர் பாவங் கெடுத் தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்துளானை
ஆறங்கம் நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

1) வெறுத்தேன் மனைவாழ்க்கை கையைவிட்டொழிந்தேன்
விளங்குங் குழைக்காதுடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையா யவனைத்
தலைப்பத்தோடு தோள் பல இற்று விழக்
கறுத்தாய் கடல் நஞ் சமுதுண்டு கண்டம்
கடுகப்பிரமன் தலை ஐந்திலுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழிலஞ்சைகளத்தப்பனே.

2) வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெனீரே.

3) இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்யானையருள் புரிந்து
மந்திர மாமுனிவரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான் மலையுத்தமனே.

4) மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசே செயுந் தொண்டனெனை
அந்தரமால் விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித்தான் மலையுத்தமனே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

*தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே –எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவா சகம் என்னுந் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாளே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதேஅளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வா
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம் பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஒ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## யாத்திரைப்பத்து

*திருச்சிற்றம்பலம்*

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப்
பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும்
வெள்ளக் கருணையினால்
ஆஆ என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல்புகவே. 1

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப்
பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா
போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து நாயே
அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத் தளரா
திருப்பார் தாந்தாமே 2

தாமே தமக்குச் சுற்றமும் தாமே
தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன
மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன்
குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன்
ஆள்வான் பொன்னடிக்கே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் ஆனீர் எல்லீரும் அகல
விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண்
டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ
கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார்
கழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர்
காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோ டுடன்போ
வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார்
கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கன்
ஆள்பவான் புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன்
தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர்
இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று
சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம்
உருகி நிற்போமே. 6

நிற்பார் நிற்கநில் லாவுலகில் நில்லோம்
இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன்
ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும்
பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்
கரியான் பெருமானே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா
திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா
அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த
போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள்
சென்று சேர்வோமே. 8

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த
வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன்
புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத ஆர்வங்
கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்
கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே
வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட்
கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இதுசெய்ம்மின் சிவலோ
கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ
அந்தோ அந்தோவே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார் மகளும்
நாமகளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம் பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பொருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
        மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
        அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
        போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
        பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
        வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
        எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
        தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்
        பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
        தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
        சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
        கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
        பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே 14
ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
        நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
        சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
        கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
        பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

அயன் தலை கொண்டு செண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்செருகி யறி வழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப் பண்ணியைந் தெழுத்தோதவுங் கற்பியுமே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தியே.

அத்தமும் வாழ்வும் மகத்துமட் டேவிழி யம் பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தலம் மேல் வைத்தழுமைந்த ருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடருமிருவினைப் புண்ணிய பாவமுமே!

என் பெற்ற தாயாருமென்னை பிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்,
உன் பற்றொழியவொரு பற்றுமில்லை யுடையவனே.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநி தியந்தேடி
  நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசற் போலப்
  புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வழியறியீர் கைவிடவு மாட்டீர்
  கவர் பிறந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப் போல
  அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாருக்கு தகனக்கிரியை செய்கையிற்

# பாடிய வெண்பா

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி? 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாய்ச்சிவனை யாதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் 2தழல்மூட்டு வேன்? 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்? 3

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்? 4

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வமே திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு 5

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள
முகம் மேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலி விருத்தம்

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென் னிலங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. 7

## நேரிசை வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியே னையகோ– மாகக்
குருவி பறவாமல் 1 கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய் 9

வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள் – பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

m Foundation.
naham.org



குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

UNIE ARTS, T.P. 2330195.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org